வங்கொங்கு தாணினாடு
திங்கள் இதழ்

சக்தி

பெண்ணிதழ்

பெண்கள் மேம்பாட்டு பன்மொழி மின்னிதழ்

மலர்-2 இதழ்-09 | நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி | மே 2026



Artificial Intelligence and The Future of Social Media
Dr Chandrika Subramaniyan

அம்பிகாபதி காதல் காப்பியம் வழங்கும் அஷ்டோத்திர சத நாமாவளி
முனைவர் தேமொழி

மா விளக்கு ஏற்றுதல் - பௌத்தம்
புகுத்திய மந்திரச் சமயச் சடங்கு
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

சுமையா அம்மையார்
சம்சுல் ஹுதா பானு

கோடி நீர் விரல்களாகி...
Dr ஜலீலா முஸம்மில்

கல்வி எனப்படுவது - நூலாய்வு
வித்யா மனோகர்

மர வழிபாடு
போ. ப. தேவி அறிவுசெல்வம்

எங்கெங்கு காணினும் சக்தியடா!
சக்தி பெண்ணிதழ்
மலர் -2 இதழ் - 09 மே 2026

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் கெ.ராஜேஸ்வரி

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி (USA)

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா சுப்ரமணியன்(சிட்னி)

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் (NJ) செயற்கை

நுண்ணறிவு படங்கள்:
முனைவர் திருமதி கெ. ராஜேஸ்வரி

உள்ளடக்கம்

1. ***Oh great warriors*** — 2
முனைவர் திருமதி கெ. ராஜேஸ்வரி

2. ***ARTIFICIAL INTELLIGENCE AND THE FUTURE OF SOCIAL MEDIA*** — 3
Dr Chandrika Subramaniyan

3. **அம்பிகாபதி காதல் காப்பியம் வழங்கும் அஷ்டோத்திர சத நாமாவளி** — 9
தேமொழி

4. **கல்வி எனப்படுவது - நூலாய்வு** — 17
வித்யா மனோகர்

5. **மர வழிபாடு** — 24
பேரா. ப. தேவி அறிவுசெல்வம்

6. **அந்நியர்கள்** — 27
இரம்யா நடராஜன்

7. **சிந்துப் பாடல்கள்** — 32
முனைவர் ம. கமலி குருசாமி, விரிவுரையாளர்
முனைவர் ப. தேவி அறிவு செல்வம்,

8. **ஐம்பூதங்களின் தீர்க்கதரிசி** — 35
பி. ஹேமா

9. **மா விளக்கு ஏற்றுதல் - பௌத்தம் புகுத்திய மந்திரச் சமயச் சடங்கு** — 36
முனைவர் திருமதி கெ. ராஜேஸ்வரி,

10. **தீராத உயிர்ப்பு** — 43
அர்ஷா

11. **ராமனின் உடன்பிறந்த சகோதரி சாந்தா** — 44
இரா. சைலஜா சக்தி

12. **இருவர் (சிறுகதை)** — 49
சத்யபிரபா

13. **இந்திய அரசியலின் முன்னோடி ஆனி மாஸ்கரீன்** — 55
லயன் MJF வெங்கடேசன்,

14. **கோடி நீர் விரல்களாகி...** — 58
Dr ஜலீலா முஸம்மில்

15. **பெண்ணும் எழுத்தும்** — 59
கவிஞர். நளினி சுந்தரராஜன்

16. **அறியாமையை அடியோடு அகற்று** — 61
கவிஞர் மாலதி இராமலிங்கம்,

17. **தருமசீலன்** — 62
சசிகலா விஸ்வநாதன்

18. **சுமைய்யா அம்மையார்** — 69
சம்சுல் ஹுதா பானு

19. ***ARANYANI*** — 71
VIJENI

20. **ஜெயஸஞ்ஜீவி** — 73
வை.மு.கோதைநாயகி அம்மாள்

Shakthi Pennithazh
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu - 625 018.
Ph : +91 7871123226, +91 7010997630

கட்டுரைகள் அனுப்ப..
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம்பெற்றுள்ளகருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும்.
அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை

Oh great warriors

104

Oh great warriors, praise him
Let me inform you something
In the shallow waters, disturbed
By the kids playing in it
Like the crocodile attack
And kill an elephant
Unaware of his meticulous acts
If you criticise him as a juvenile
Its difficult to save your life







தமிழில் அவ்வையார்

ஆங்கிலத்தில் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

Artificial Intelligence and The Future of Social Media

Dr Chandrika Subramaniyan
Sydney, Australia

The digital landscape has undergone dramatic transformation over the past two decades, with social media emerging as a dominant force in human communication, commerce, and information dissemination. Today, as artificial intelligence capabilities accelerate at unprecedented rates, social media platforms stand at a critical intersection of technological innovation and societal responsibility.

AI systems now mediate billions of daily interactions from personalised content recommendations to automated content moderation across platforms like Facebook, Instagram, TikTok, and Twitter. However, as generative AI systems grow more sophisticated, they are being adopted at a pace that far outstrips our understanding of their emerging risks and consequences.

Current State of AI in Social Media

AI now underpins nearly every aspect of social media, where platforms use it to personalise content feeds, recommend posts and videos, analyse sentiment, and automate moderation—shaping what users see and how they interact online.

Recommendation systems are the most influential of these tools. By analysing browsing habits, engagement patterns, and social networks, they predict what will keep each user watching or scrolling. Platforms like TikTok and YouTube have perfected this approach, but their focus on engagement can deepen filter bubbles and contribute to social and political polarisation.

Natural language processing adds another layer, enabling platforms to scan huge volumes of text, detect harmful content, and gauge public sentiment. Yet

these systems still struggle with nuance and often reproduce biases found in their training data.

Computer vision extends AI's reach to images and videos, supporting features such as facial recognition, virtual try ons, and automated detection of harmful visual content.

Together, these technologies create powerful but opaque systems—ones that enhance convenience and safety while raising serious concerns about surveillance, transparency, and user autonomy.

AI driven personalisation uses algorithms to tailor content feeds, advertisements, and even interface layouts to individual users, promising reduced information overload and higher engagement. Yet this same personalisation brings serious risks. By repeatedly reinforcing user preferences, platforms can trap people in "filter bubbles," limiting exposure to diverse viewpoints and contributing to polarisation.

AI powered recommendations also shape consumer behaviour in subtle ways. When algorithms amplify one user's choices, they can quickly turn individual preferences into broader social trends.

AI's Role in Content Moderation

Social media platforms now depend heavily on AI to manage the enormous volume of posts generated each day. Machine learning and NLP tools help flag hate speech, misinformation, and violent content, allowing platforms to respond more quickly than human moderators alone could.

At the same time these systems can reflect and amplify bias, disproportionately targeting content from marginalised communities. Their opacity also leaves users uncertain about why their posts were removed, and limited appeal processes offer little opportunity for redress.

AI is also central to misinformation detection. Models trained on labelled data can identify many forms of fake or deceptive content, yet they still struggle with more sophisticated misinformation and with claims that vary across languages and cultural contexts.

Generative AI and Content Creation

Generative AI is rapidly reshaping how content is produced and consumed on social media. As content creation has become more accessible than ever, anyone can produce polished material without specialised skills, reach wider audiences with far less effort.

These benefits come with serious risks. As AI generated material becomes more convincing, the line between authentic and synthetic content grows increasingly blurred. This raises concerns about misinformation, especially as generative models can produce realistic deepfakes capable of manipulating public opinion and destabilising democratic processes.

Virtual Influencers and AI Generated Personas

Virtual influencers—AI generated characters with lifelike digital identities—are becoming a new kind of presence on social media. Powered by technologies , these personas can create content, interact with audiences, and promote brands without the constraints like getting tired, falling ill, or personal setbacks faced by human creators and they can operate continuously at minimal cost.

These AI driven influencers are already being used in areas like health communication and marketing. They can deliver prevention messages and

product recommendations effectively and at lower cost, but their rise raises concerns about authenticity, consent, and the displacement of human labour.

Immersive Virtual World

The immersive virtual worlds where people interact in real time—is becoming another major space where AI will reshape social media. Technologies make it possible to build rich virtual environments and intelligent characters that respond naturally to users, by adapting scenes, interactions, and experiences to individual preferences, creating highly personalised virtual spaces.

AI also enables new forms of engagement in the metaverse, the 3D digital environment, where users, represented by avatars, socialise, work, to provide customer service or entertainment to automated tools that generate environments and contents on the fly. However, these settings introduce new privacy and safety risks. Continuous tracking of user behaviour, the capture of biometric data through avatars, and the potential for psychological manipulation in highly optimised environments raise serious concerns.

Algorithmic Bias

Algorithmic bias in social media arises from several sources—biased training data, design flaws, and limited testing across diverse user groups. As machine learning models learn from historical patterns, they often reproduce the same inequalities embedded in the data, reinforcing discrimination rather than correcting it.

Studies show that users from different demographic groups receive systematically different content, even when their preferences are similar. Content moderation systems show similar disparities, with posts from minority communities more likely to be flagged or removed, Gender bias is another significant concern. Often Eurocentric beauty ideals—affecting young women, especially in non Western contexts where these standards may conflict with local cultural norms.

Information Manipulation

Misinformation on social media has become a major threat to informed public debate and democratic stability. AI systems intensify the problem in two ways: they amplify false content through engagement driven recommendation algorithms, and they enable the creation of highly convincing deepfakes and synthetic media.

Coordinated misinformation campaigns can shape voter attitudes and influence electoral outcomes. During elections and referendums, social media platforms often turn into arenas where competing false narratives circulate at scale, supported by AI tools that streamline both production and distribution and lead to high political stakes.

False health information about vaccines, treatments, and disease transmission can have immediate risky public health consequences. During the COVID 19 pandemic, inaccurate vaccine information spread rapidly online, with AI

powered recommendation systems boosting sensational but medically incorrect content.

Data Privacy

Social media platforms collect vast amounts of personal data, directly shared by users, as well as behavioural traces generated as they browse, click, and move across devices. Major platforms continue to harvest and process these extensive data and consent mechanisms. AI systems deepen this surveillance by inferring sensitive traits such as health status, political preferences, or emotional states, even when users have never disclosed them.



Recommendation Systems

Fairness in recommendation systems means balancing competing priorities—user satisfaction, platform profits, creator visibility, and wider social values. Some companies have started testing fairer models. Netflix, for example, has introduced diversity measures to reduce bias while maintaining performance, showing that fairness and effectiveness can coexist, even if trade-offs remain.

Most platforms still prioritise engagement above all else, often pushing fairness aside. Without transparent metrics and independent audits, it remains difficult to tell whether these efforts reflect genuine reform or simply symbolic compliance

அம்பிகாபதி காதல் காப்பியம் வழங்கும் அஷ்டோத்திர சத நாமாவளி

முனைவர் தேமொழி
சான் பிரான்சிஸ்கோ

இந்திய ஆன்மீகவியலில் 108 என்ற எண்ணுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அது ஒரு புனிதமான எண்ணாகக் கருதப்பட்டு அதற்காகப் பற்பல விளக்கங்களும் கொடுக்கப்படுவதுண்டு. இக்காலத்தில் இந்த எண்ணுக்கான காரணத்தை அறிவியலுடன் வானியலுடன் இணைக்கும் முயற்சியும் இந்த விளக்கங்களில் காணப்படும். நூற்றெட்டு என்ற எண்ணுக்கான முக்கியத்துவம் இந்து, பௌத்தம், சமணம், சீக்கியம் என இந்திய மண்ணின் சமயங்கள் அனைத்திலுமே இருக்கிறது. ஔவையார் அருளிய ஆத்திசூடியும் 108 அறிவுரைகளை வழங்குவதைக் காணலாம். திருக்குறளிலும் காமத்துப்பால் அதிகாரங்கள் 25 என்பதைக் கணக்கில் கொள்ளாவிட்டால் அறம், பொருள் அதிகாரங்களின் எண்ணிக்கை 108 என்பது தற்செயலான ஒற்றுமை எனக் கருத இயலாது.

இந்திய வழிபாட்டு முறையில் அஷ்டோத்திர சத நாமாவளி என்பவை கடவுளரின் நூற்றெட்டு பெயர்களைக் கொண்டு போற்றும் ஒரு தொகுப்பாகும். இவை நூற்றெட்டுக் கடவுள் போற்றிகள் அல்லது 108 போற்றிகள் என்று தமிழில் குறிப்பிடப்படுவது வழக்கம். நாம ஆவளி என்பதற்குப் பெயர்களின் வரிசை என்று பொருளாகும். கடவுள் வழிபாட்டின் பொழுது இப்பெயர்களைக் கூறி பூசை செய்ய ஏதுவாக நாம ஆவளி அமைக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையாக நாமறிந்த கடவுளர் அனைவருக்கும் அஷ்டோத்திர சத நாமாவளி என்னும் நூற்றெட்டுக் கடவுள் போற்றிகள் கிடைக்கும்.

எடுத்துக்காட்டாக; முருகப் பெருமானை 108 திருநாமங்களால் போற்றி பாடுவது முருகன் அஷ்டோத்திர சத நாமாவளி எனப்படும்.

ஓம் ஸ்கந்தாய நம
ஓம் குஹாய நம
ஓம் ஷண்முகாய நம

என்ற முறையில் 'ஓம்' என்று தொடங்கி 'நம', 'நமக' என்று முடியும் வகையில் ஒவ்வொரு போற்றியும் அமையும். இணையத்தேடலில் எண்ணற்ற கடவுளர் மேல் பாடப்பட்ட எண்ணற்ற போற்றிகள் கிடைக்கின்றன.

புதுவையில் வாழ்ந்த தமிழ்ப் பேராசிரியர் சுந்தர சண்முகனார், அவர் எழுதிய 'அம்பிகாபதி காதல் காப்பியம்' என்ற நூலின் 28ஆவது காதையான 'கடவுள் வழிபாட்டுக் காதை' பகுதியில் நூற்றெட்டுக் கடவுள் திருப்பெயர்கள் கொண்ட போற்றி ஒன்று எழுதியுள்ளார். புலவர் கம்பரின் மகன் அம்பிகாபதி தன்னுடைய மகள் அமராவதியைக் காதலிப்பது அறிந்து வெகுண்டு சூழ்ச்சியாக அவனை ஒழிக்கத் திட்டமிடுகிறான் சோழ மன்னன் இரண்டாம் குலோத்துங்கன். அம்பிகாபதி அகப்பாடல்கள் (காதல் பாடல்கள்) கலக்காமல் கடவுளை வாழ்த்தி கடவுள் மீது நூறு பாடல்களைப் பாடினால் அமராவதியைத் திருமணம் செய்து கொள்ளலாம், தவறினால் மரணதண்டனை என்று சொல்கிறான். அதற்கு அம்பிகாபதியும் உடன்படுகிறான்.

ஆனால் அரசன் செய்யும் சூழ்ச்சியால் அம்பிகாபதி அம்பிகையின் மீது பாடிய பாடல்களின் தொகுப்பில் ஒரு காதல் பாடலும் நுழைக்கப்படுகிறது. அம்பிகாபதி தோல்வியடைந்ததாகக் கூறி அவனைச் சிறையில் அடைத்துக் கொலை செய்யப்பட வேண்டிய நாளும் குறிக்கப்படுகிறது. மகனின் உயிருக்காகக் கம்பர் வைக்கும் கோரிக்கை மன்னனால் மறுக்கப்படுகிறது. மன்னன் மனம் மாற வேண்டும் அம்பிகாபதி உயிர் பிழைக்க வேண்டும் என்பதற்காகக் கம்பர் ஒரு வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்து கடவுளிடம் வேண்டுவதாகக் கடவுள் வழிபாட்டுக் காதை பகுதியில் ஒரு காட்சியை அமைக்கிறார் சுந்தர சண்முகனார். இக்காதையில் நூற்றெட்டுக் கடவுள் திருப்பெயர் போற்றிகள் மற்றும் குரவையாடல் (குரவைக்கூத்து) ஆகியன இடம் பெறுகின்றது.

இந்த நூற்றெட்டுக் கடவுள் திருப்பெயர் போற்றிகளில் எந்த ஒரு கடவுள் பெயரையும் குறிப்பிடாமல் பொதுவான கடவுளின் பண்புகளைப் போற்றி பாடும் வகையில் அமைத்துள்ளார். மேலும் அவை தமிழிலக்கியங்களான கம்பராமாயணம், திருக்குறள், திருவாய்மொழி, தேவாரம், திருவாசகம், திருவருட்பா நூல்களில் இடம்பெறும் புகழ் பெற்ற வரிகளை நினைவூட்டும் விதமாக அவற்றை எடுத்தாண்டுள்ளார் என்பதால்

இப்பகுதி சிறப்பாக அமைந்துள்ளது. அவை கீழே ஒப்பிட்டுக் காட்டும் வகையில் அடுத்தடுத்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆன்மிகம் என்பதை வடமொழியுடன் இணைத்தே வாழ்வில் கடைப்பிடிக்கும் தமிழர்கள் இந்த நூற்றெட்டுக் கடவுள் திருப்பெயர் போற்றிகளைச் சிறப்பு என்று கருதினாலும் வழிப்பாட்டில் நடைமுறைப் படுத்த விரும்ப மாட்டார்கள் என்றுதான் தோன்றுகிறது.

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடையா ரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே
— கம்பராமாயணம்

உலகம் யாவையும் உளவாக்கினோய் போற்றி
உலகம் யாவும் நிலைநிறுத்துவோய் போற்றி *(13-14)*
[அம்பிகாபதி காதல் காப்பியம், கடவுள் வழிபாட்டுக் காதை]

திருக்குறள் கடவுள் வாழ்த்து ஒன்று முதல் ஒன்பது குறட்பாக்கள்;

ஆதி பகவனாம் ஐயா போற்றி
வாலறி வுடைய வள்ளால் போற்றி
மலர்மிசை ஏகிய மாண்பினோய் போற்றி
வேண்டுதல் வேண்டாமை யிலாதோய் போற்றி
இருவினை சேரா இறைவா போற்றி

பொறிவாயில் ஐந்தவித்த புலவனே போற்றி
தனக்குவமை யில்லாத் தண்ணியோய் போற்றி
அறவாழி அந்தண அண்ணலே போற்றி
எண்குணம் இயைந்த ஏந்தலே போற்றி (15-23)
[அம்பிகாபதி காதல் காப்பியம், கடவுள் வழிபாட்டுக் காதை]

உயர்வற வுயர்நலம் முடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.
— நம்மாழ்வார் திருவாய்மொழி 1

உயர்வற உயர்நலம் உடையோய் போற்றி
மயர்வற மதிநலம் அருள்வோய் போற்றி (35-36)
[அம்பிகாபதி காதல் காப்பியம், கடவுள் வழிபாட்டுக் காதை]

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே
— திருநாவுக்கரசர் தேவாரம்
5.090: ஐந்தாம்-திருமுறை

மாசில் வீணைநேர் மாண்பினோய் வணக்கம்
மாலை மதிய மானோய் வணக்கம்
வீசு தென்றலாய் விளங்குவோய் வணக்கம்
வீங்கிள வேனிலாய் விளைந்தோய் வணக்கம்
வண்டறை பொய்கையாய் வயங்குவோய் வணக்கம்
[அம்பிகாபதி காதல் காப்பியம், கடவுள் வழிபாட்டுக் காதை]

அடுத்துள்ள திருவாசகம் திருவருட்பா பாடல்களின் கருத்துகள் தொடர்ச்சியாக இல்லாது கடவுள் வழிபாட்டுக் காதையில் ஆங்காங்கே விரவிக் காணப்படுகிறது;

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.
— மாணிக்கவாசகர், திருவாசகம்

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த
குளிர் தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்ததண்ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந்தருளே.
— இராமலிங்க அடிகள், திருவருட்பா (4091)

அம்பிகாபதி காதல் காப்பியம்; 28. கடவுள் வழிபாட்டுக் காதை , அடிகள் 13-120
இல் இடம்பெறும் நூற்றெட்டுக் கடவுள் திருப்பெயர் போற்றிகள்
— பேராசிரியர் சுந்தர சண்முகனார்

உலகம் யாவையும் உளவாக்கினோய் போற்றி (13)
உலகம் யாவும் நிலைநிறுத்துவோய் போற்றி
ஆதி பகவனாம் ஐயா போற்றி
வாலறி வுடைய வள்ளால் போற்றி
மலர்மிசை ஏகிய மாண்பினோய் போற்றி
வேண்டுதல் வேண்டாமை யிலாதோய் போற்றி
இருவினை சேரா இறைவா போற்றி

பொறிவாயில் ஐந்தவித்த புலவனே போற்றி
தனக்குவமை யில்லாத் தண்ணியோய் போற்றி
அறவாழி அந்தண அண்ணலே போற்றி
எண்குணம் இயைந்த ஏந்தலே போற்றி
எங்கும் மிளிர்ந்தே இருப்போய் போற்றி

எல்லாம் செய்ய வல்லோய் போற்றி
யாதும் அறிந்த எந்தாய் போற்றி
தன்வயம் உடைய தகையோய் போற்றி
தூய்மை நிறைந்த தொல்லோய் போற்றி
இயற்கை உணர்வுடை எம்பிரான் போற்றி

முற்றும் உணர்ந்த முதல்வா போற்றி

இயல்பாய்க் கட்டுகள் இரிந்தோய் போற்றி
பேரரு ளுடைய பெரியோய் போற்றி
முடிவில் ஆற்றல் உடையோய் போற்றி
வரம்பில் இன்பம் வாய்த்தோய் போற்றி

உயர்வற உயர்நலம் உடையோய் போற்றி
மயர்வற மதிநலம் அருள்வோய் போற்றி
பிறப்பினை அறுத்திடும் பெரியோய் போற்றி
ஆராத இன்பம் அருள்வோய் போற்றி
எண்ணிறந் தெல்லை யிலாதோய் போற்றி

இல்லா இடமே இல்லோய் போற்றி
தாயிற் சிறந்த தன்மையோய் வணக்கம்
மாசற்ற ஒளியாய் மலர்ந்தோய் வணக்கம்
அன்பருக் கன்பனாய் அருளுவோய் வணக்கம்
நோக்கரிய நுண்ணிய பொருளே வணக்கம்

போக்கும் வரவும் இலாதோய் வணக்கம்
அன்னையிற் சிறந்த அமிழ்தமே வணக்கம்
அனைத்து நுகர்வாயும் அமைந்தோய் வணக்கம்
பல்லுயி ரெல்லாம் பயின்றோய் வணக்கம்
வல்லிருள் ஓட்ட வல்லோய் வணக்கம்

அன்பு வலையில் அகப்படுவோய் வணக்கம்
சொற்பதங் கடந்த தொல்லோய் வணக்கம்
அணுவினுள் அணுவாய் அமைந்தோய் வணக்கம்
இயம்பரும் பெருமை இயைந்தோய் வணக்கம்
அரியதில் அரிய அருமையோய் வணக்கம்

மருவியெப் பொருளும் வளர்ப்போய் வணக்கம்
நூலுணர் வுணரா நுண்ணியோய் வணக்கம்
மேலொடு கீழாய் விரிந்தோய் வணக்கம்
தோற்றமும் முடிவும் இல்லோய் வணக்கம்
அச்சந் தவிர்க்கும் அருளோய் வணக்கம்

தொல்லைத் துன்பம் துடைப்போய் வணக்கம்

எய்ப்பினில் வைப்பாய் இருப்போய் வணக்கம்
பூவில் மணம்போல் பொலிவோய் வணக்கம்
விறகில் தீபோல் விளங்குவோய் வணக்கம்
பாலில் நெய்போல் படுவோய் வணக்கம்

ஒப்பிலா மணிபோல் உயர்ந்தோய் வணக்கம்
மணியில் ஒளியாய் மன்னியோய் வணக்கம்
மாசில் வீணைநேர் மாண்பினோய் வணக்கம்
மாலை மதிய மானோய் வணக்கம்
வீசு தென்றலாய் விளங்குவோய் வணக்கம்

வீங்கிள வேனிலாய் விளைந்தோய் வணக்கம்
வண்டறை பொய்கையாய் வயங்குவோய் வணக்கம்
அம்மை யப்பனாய் அமைந்தோய் போற்றி
அன்பில் விளைந்த அமிழ்தே போற்றி
என்பெலாம் உருக்கும் இன்பமே போற்றி

வானாகி நின்ற வலிமையோய் போற்றி
காலா யிருக்குங் கடவுளே போற்றி
நெருப்பா யுள்ள நெடியோய் போற்றி
நீரா யெங்கும் நிறைந்தோய் போற்றி
மண்ணா யமைந்த மன்னா போற்றி

ஊனாய் உயிராய் உற்றோய் போற்றி
விரிமலர்க் காவாய் விளங்குவோய் போற்றி
பயன்மர மாகிப் பழுத்தோய் போற்றி
மருந்தாம் மரமாய் மன்னினோய் போற்றி
உதவிடும் ஊருணி போன்றோய் போற்றி

கோடையைத் தணிக்கும் குளிர்மரமே போற்றி
வெய்யிலில் நிழலாய் விளங்குவோய் போற்றி
உயிருக் குயிராய் உற்றுளோய் போற்றி
உள்ளத் துள்ளே ஒளித்துளோய் போற்றி
முத்தொழில் புரியும் முதல்வா போற்றி

குறிஞ்சி மலையாய்க் குலவுவோய் வணக்கம்

முல்லைக் காடாய் முகிழ்த்தோய் வணக்கம்
மருத நாடாய் மன்னியோய் வணக்கம்
நெய்தல் நிலமாய் நிலவுவோய் வணக்கம்
கருமுகில் மழையாங் கடவுளே வணக்கம்

பரவையாங் கடலாய்ப் பரந்தோய் வணக்கம்
உருவாய் அருவாய் உற்றோய் வணக்கம்
பெறலரும் பெரும்பெயர் பெற்றோய் வணக்கம்
மணந்தரு மலராய் மலர்ந்தோய் வணக்கம்
இனிக்குங் கனியாய் இலங்குவோய் வணக்கம்

பருகும் நீராய்ப் பயப்போய் வணக்கம்
உண்ணும் உணவாய் உற்றோய் வணக்கம்
வறுமை போக்கும் வளமே வணக்கம்
வினையினை விலக்கும் விறலோய் வணக்கம்
பகையினைத் தவிர்க்கும் பண்பினோய் வணக்கம்

அனைத்து நன்மையும் ஆனோய் வணக்கம்
ஒழுங்கிலா தோரை ஒறுப்போய் வணக்கம்
அரும்பெரு மொழிகளாய் அமைந்தோய் வணக்கம்
நயந்தரு நூல்களாய் நயப்போய் வணக்கம்
பயன் தரும் பாக்களாய்ப் பயப்போய் வணக்கம்

ஏழிசை தாமாய் இலங்குவோய் வணக்கம்
இசையின் பயனாய் இயைந்தோய் வணக்கம்
ஒளிதரு ஞாயிறாய் ஒளிர்வோய் போற்றி
ஞாயிற் றொளியாய் நண்ணியோய் போற்றி
நிலவின் ஒளியாய் நிகழ்வோய் போற்றி

விண்மீன் தாமாய் விளங்குவோய் போற்றி
அளவில் கோள்களாய் ஆனோய் போற்றி
இயற்கைப் பொருளாய் இருப்போய் போற்றி
செயற்கை கடந்த செல்வா போற்றி
காலங் கடந்த கடவுளே போற்றி
புலவரைப் புரக்கும் புலவனே போற்றி (120)

கல்வி எனப்படுவது - நூலாய்வு

வித்யா மனோகரி
வல்லினச் சிறகுகள்

நூல்: கல்வி எனப்படுவது
ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்
வெளியீடு: ஒருதுளிக் கவிதை

"படிப்பது என்பது பாதியே
பிரயோகிப்பதில்தான்
மீதி நிரம்பும்
சரி என்பதைச்
சார்ந்து இருப்பதும்
தவறு என்பதைத்
தண்டித்து அழிப்பதும்
அறிவின் வளர்ச்சிக்கு
அடையாளங்கள்"...
-ஈரோடு தமிழன்பன்

மகாகவி ஈரோடு தமிழன்பன் அவர்களின் "கல்வி எனப்படுவது" என்ற கட்டுரை நூல் குறித்த என்னுடைய பார்வையை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

முதலில் இந்நூல் உருவாகக் காரணமாக இருந்த சூழலைச் சொல்ல வேண்டும் என்பதால், நூல் முன்னுரையில் கவிஞர்.அகன் அவர்கள் எழுதியுள்ள சில செய்திகளை இங்கு நான் பதிவு செய்கிறேன்.

தொடக்கக் கல்வியின் தரம் நடுவண் அரசின் தரவுகளோடு ஒப்பிடும்போது புதுச்சேரியில் குறைந்து வருவதாகவும், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் அலட்சியப் போக்கும் ஆய்வாளர்களின் கவனக் குறைவுமே அதற்குக் காரணம்

என்று ஒரு மின்னஞ்சல் வந்துள்ளதாகவும், அதற்கு நாம் நல்லதொரு தீர்வைக் காண வேண்டுமென்றும் பள்ளிக்கல்வி இயக்குனர் திரு. இ. வல்லவன் அவர்கள், அப்போது பள்ளி ஆய்வாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த திரு. அமிர்தகணேசன் அவர்களிடம் தெரிவித்திருக்கிறார்.அதனைத் தொடர்ந்து ஆலோசனைகள் பெறுவதற்கென உயர் அலுவலர்கள் கூட்டம் நடந்துள்ளது. கூட்டத்தின் முடிவில், "நாளை ஒரு திட்டம் உருவாக்கி கோப்பு எனக்கு அனுப்புங்கள்" என்று இயக்குனர் சொல்லவும் திரு.அமிர்தகணேசன் அவர்கள் *Mission M3 (Motivation, Material and Methodology)* என்ற பெயரில் தொடர் செயல்பாடு ஒன்றை உருவாக்கினார். ஆசிரியர்களுக்கு உணர்வூக்கம் அளிப்பதற்காக கலந்துரையாடல்கள் நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டு, சமுதாயத்தின் குரலென விளங்கும் ஆகச் சிறந்த படைப்பாளிகள் மூலம் ஆசிரியர்களின் தேவை, சேவை பற்றியும், தங்களின் இந்த உயர்நிலைக்கு ஆசிரியர்களின் பங்களிப்பு பற்றியும் கலந்துரையாடுவதற்காக புதுச்சேரி அரசின் கல்வித்துறை ஆளுமைகளை அழைத்து, தொடர் கூட்டங்கள் ஏற்பாடு செய்திருந்தது. இச்சூழலில் தொடக்க விழாவில் மகாகவி அவர்கள் ஆற்றிய உரையின் எழுத்து வடிவமாக இந்நூல் கவிஞர் தி.அமிர்தகணேசன் அவர்களால் தொகுக்கப்பட்டு புதுச்சேரி ஒருதுளிக் கவிதை வெளியீடாக 2021 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

இனி நாம் நூலுக்குள் செல்வோம். பத்தாண்டுக் காலம் பள்ளியில் ஆசிரியனாகப் பணியாற்றி, 22 ஆண்டுக்காலம் கல்லூரியில் பேராசிரியராக முறையாகப் பணியாற்றி - ஓய்வு பெற்ற ஆசிரியன் நான். எனவே என் இனத்தாரோடு நான் களத்தில் நிற்கிறேன் என்பது எனக்குப் பெருமை. இன்னமும்கூட எனக்குப் புதுச்சேரி அரசு ஒருவேளை விதிகளைத் தளர்த்தி வேலை தரும் என்றால் ஆசிரியராகப் பணியாற்றக்கூட எனக்கு விருப்பம் உண்டு என்று தன் ஆவலை வெளிப்படுத்தியுள்ளார் தமிழன்பன் ஐயா.

தான் எப்படிப்பட்ட பள்ளி ஆசிரியர் என்பதை மகாகவி ஒரு நிகழ்வின் மூலம் எடுத்துரைக்கிறார். ஐயா பொதிகை தொலைக்காட்சியில் செய்தி வாசித்துக் கொண்டிருந்த காலத்தில், உடன் பணிபுரிந்த செய்தியாளர்கள் இருவர் ஸ்டான்லி மருத்துவமனையில் மிகப் புகழ்பெற்ற மருத்துவர் நரேந்திரன் என்பவரைப் பேட்டி கண்டு வரப் போனபோது, 40 வயது மதிக்கத்தக்க ஒருவர் மண்டையில் அடிபட்டு படுக்கையில் இருந்திருக்கிறார். நளவெண்பா, நாலடியார்,திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் பாடல்களை எல்லாம் ஒப்பிக்கிறார் வேற எந்த நினைவும் அவருக்கு இல்லை. அவருடைய ஞாபகத்தில் இப்போது இருப்பன அவருக்கு பிடித்த சில தமிழ்ப் பாடல்களும் அவருக்குத் தமிழ்ப் பாடம் சொல்லிக் கொடுத்த தமிழன்பன் என்கிற ஆசிரியர் பெயரும் தான் என்ற செய்தியை தமிழன்பன் ஐயாவிடம் நண்பர்கள் தெரிவித்து, நீங்கள் ஒருமுறை ஸ்டான்லிக்கு போய் டாக்டர் நரேந்திரனைப் பாருங்கள் .அந்த அடிபட்ட ஆசாமி நலம் பெற ஏதேனும் வழி பிறக்கலாம் என்றனர். மனைவி மக்கள் பெயர் மறந்தாலும் தன் ஆசிரியரை

அந்த மாணவன் எத்துணை அளவிற்கு உள்வாங்கி இருக்கிறான் என்பது இங்கு கருத்தில் கொள்ளத்தக்கது.

கல்லூரி ஆசிரியராக இருந்தபோது, ஐயாவிடம் தமிழ் பயின்ற மாணவர் ஜெயக்குமார் பின்னாளில் திருமணமாகித் தனக்குக் குழந்தை பிறந்தபோது தன் மகனுக்குத் தமிழன்பன் என்று பெயரிட்டு, அச்செய்தியை ஐயா அவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்து இருக்கிறார். இதைவிட ஒரு ஆசிரியருக்கு வேற என்ன சிறப்பு இருக்க முடியும்?...

மேலும் தமிழன்பன் ஐயா தன்னுடைய மாணவப் பருவம் குறித்து பேசுகையில், சென்னிமலை மாவட்ட தொடக்கப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, 'கருப்பண்ணன் என்ற ஆசிரியர் கணிதம் நடத்தி வந்தார். அவர் நடத்திய கணக்குகள் எல்லாம் மறந்து விட்டன ஆனால் அவரது கிள்ளுகள் மட்டும் நினைவில் இருக்கின்றன என்று சுவைபட எழுதியுள்ளார். சங்கரலிங்கம் என்ற ஆசிரியர் பள்ளி நேரம் முடிந்தபிறகு மாலை வேளையில் தேநீரும் தின்பண்டமும் வாங்கிக் கொடுத்து என்னுடன் உரையாடுவார். அவருக்குச் சித்த வைத்தியமும் கைரேகைச் சோதிடமும் தெரியும். ஒரு நாள் என் கையைப் பார்த்துவிட்டு. "பெரியவனா நீ வருவேடா!" என்றார். 'வயதானால் பெரியவனாகத் தானே வரமுடியும்' என்றேன்

நான். "இல்லைடா, நீ பெரிய ஆளா வருவ; நான் இருப்பேனோ இல்லையோ" என்றார். ஆசிரியர் சங்கரலிங்கத்தை இப்போது நான் நினைத்துக் கொள்கின்றேன். எனக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியர்கள் இன்னமும் என் நினைவுகளில் இருக்கிறார்கள் என்று நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

தாய்,கர்ப்பத்திலிருந்து பிள்ளையைப் பெறுகிறாள். அவ்வாறு பிறந்த பிள்ளையை வகுப்பறை எனும் கர்ப்பத்தில் வைத்துக் காத்து வளர்த்தெடுப்பவன் ஆசிரியன். எனவேதான் எந்தப் பிள்ளைக்கும் ஆசிரியன் கர்ப்பக்கிரகம் ஆகத் திகழ்கிறான். எனவே கர்ப்பக்கிரகம் என்றால், கடவுள் இருக்கும் இடமல்ல; ஆசிரியர் இருக்கும் இடம்! பிறந்த குழந்தைக்கு மறுபிறப்பாக உருமாற்றும் இடம்தான் வகுப்பறை என்றால் அங்குள்ள ஆசிரியர் இருக்கும் இடமே கர்ப்பக்கிரகம் எனப்படும். எனவேதான் மாதா, பிதா, குரு ஆகியோர் கடவுள்கள் என்று கருதப்பட்டனர்.இதையே கொஞ்சம் மாற்றினால், மாதாவாகவும் பிதாவாகவும் இருக்கும் குருவே கடவுள் ஆவான். எனவே கல்வி கொடுக்கும் ஆசிரியன் பெற்றோர்களைவிடப் போற்றத் தகுந்தவன்; அவனே கடவுள். கல்வி கொடுக்கும் ஆசிரியன் பெற்றோர்களை விடப் பெரிதும் மதிக்கத்தக்கவன். எனவே ஆசிரியப் பணி ஒப்பற்ற பணி, உயரிய பணி என்று தெளிவுற மொழிந்து, மேலும் ஆசிரியர்களைப் பாராட்டும் வகையில், "வாழ்வை அளித்த பெற்றோர்களை விட வாழ்வாங்கு வாழும் முறையை அளித்த ஆசிரியர் பெரிதும் போற்றப்பட வேண்டும்" என்று அரிஸ்டாட்டில் கூறியதையும் குறிப்பிட்டுள்ளார். மேலும்,

வில்டுராண்ட் என்கிற புகழ்மிக்க வரலாற்று ஆசிரியர் கூற்றாக சில செய்திகளை ஐயா கூறியுள்ளார். "கற்பிக்க ஆசிரியர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்றால், அவர்கள் பெற்றுள்ள பட்டங்களாலும் அடைந்துள்ள கல்வியாலும் அல்ல. ஆளுமைப் பண்புகள் மற்றும் அவர்களுடைய நன்னடத்தை முறைமையினாலும் தான் ஆசிரியர் பணிக்கு அமர்த்தப்படுகின்றனர்". எனவே, ஆசிரியர்கள், மாணவர்களிடம் தாமே சென்று அடைய வேண்டும். ஏனென்றால் ஆசிரியர்கள்தான் பாடப் புத்தகம், ஜேசுதாஸ் நன்றாகப் பாடுகிறார் என்றால் பாடலை முழுமையாக உள்வாங்கி அவரே பாடலாக மாறிவிடுவதால் இரசிப்புத் தன்மை கூடுகிறது. இப்படி ஜேசுதாஸே பாட்டாக மாறினாலன்றி அவர் பாட்டு வெற்றியடையாது. அவர் அனுபவம் அப்போதுதான் மற்றவர்களுக்கு அனுபவமாகும். எனவே ஆசிரியர்களே பாட நூலாக மாறினால்தான் கல்வி உயரும். எனவே ஆசிரியப் பணிக்கு வந்துள்ள உங்களையெல்லாம் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.ஆசிரியர் பணி என்பது சமூகத்தின் மிக உயர்ந்த பணி. முன்பெல்லாம் சமூகத்தில் எந்த நிகழ்வு நடந்தாலும் ஆசிரியர் துணையின்றி நடைபெற்றதில்லை. சிற்றூர்களிலெல்லாம் ஆசிரியர்தான் கடிதம் எழுதுவார். விண்ணப்பம் எழுதுவார். படிவங்கள் பூர்த்தி செய்வார் அனைத்தையும் வாசித்துக்

காட்டுவார். ஆசிரியர்கள்தான் எல்லாமே என்ற செய்தி நம்மையும் பெருமிதம் கொள்ளச் செய்கிறது.

கோல்ட் ஸ்மித் என்ற புகழ்பெற்ற கவிஞன் கிராமத்துப் பள்ளி ஆசிரியர் - *The village school teacher* என்ற ஓர் அழகிய கவிதை எழுதியுள்ளான். கிராமத்தில் ஓர் ஆசிரியன் என்னவெல்லாம் கற்றுக் கொடுக்கிறான் என்பதை அக்கவிதை சொல்கிறது. குஞ்சுப் பறவைகளுக்குத் தாய்ப் பறவை எவ்வாறு பழக்கப்படுத்திப் பறக்க வைக்கிறதோ, கீழே விழ உள்ள குஞ்சுப் பறவையை இலாவகமாகத் தாய்ப் பறவை எவ்வாறு பிடித்துக் காப்பாற்றுகிறதோ அதுபோல ஆசிரியர் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து, பழக்கப்படுத்திக் கல்வி வானில் பறக்க விடவேண்டும். இவ்வாறு தாய் பறவைக்கும் குஞ்சுப் பறவைக்குமான உறவாக ஆசிரியர் மாணவர் உறவை சித்தரிக்கிறார் கோல்டுஸ்மித் என்ற தகவலையும் இந்நூல்வழி நாம் அறியலாம்.

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்

அடுத்து, தேர்வு முறை பற்றிச் சொல்லும்போது,

நமது தேர்வு முறையே மனப்பாடத்தை நம்பியுள்ள தேர்வு முறையாகும். மனப்பாடம் செய்து என்ன எழுத முடிகிறதோ, அங்காடிகளில் கிடைக்கும் குறிப்பேடுகள் மூலம் மனப்பாடம் செய்து என்ன எழுத முடிகிறதோ அவற்றுக்குத்தான் மதிப்பெண்கள் என்ற நம் நிலைமை மாற வேண்டும்.

எனவேதான் ஆசிரியர் வகுப்பறைக்குச் செல்வதற்கு முன் கோனார் படிக்கிறார்; மாணவன் தேர்வுக்குச் செல்வதற்கு முன் கோனார் படிக்கிறான்; அப்புறம் எப்படிக் கல்வி? என்ற வினா வழி நம்மை சிந்திக்க வைக்கிறார் மகாகவி.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தான் பயின்ற போது, ஆங்கிலப் பேராசிரியராக இருந்த சீதாராமன் அவர்களைப்பற்றி பேசுமிடத்தில், ஆசிரியர் தேர்வுக்கூடத்திற்கு வருவார்.வினாத்தாள் கொடுப்பார். விடை எழுதும் தாள் கொடுப்பார். சன்னலோரத்தில் சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டு சேக்கபியர் படிப்பார். அப்போது தெ.பொ.மீ. அவர்கள் தமிழ்த் துறைப் பேராசிரியர் இவரிடம் சேக்கபியர் கற்பார்.ஒரு மாணவன்கூடப் பார்த்து எழுதவில்லை. மாணவர்கள் மீது அவருக்கு அவ்வளவு நம்பிக்கை. என்று பழைய நினைவுகளைப் பகிர்ந்துள்ளார்.

வெளிநாடுகளில் தேர்வு முறை எப்படி இருக்கிறது என்பதை பற்றி சொல்லும்போது, சீனாவில் தேர்வு என்பது திறந்த புத்தகங்களுடன் நடைபெறக் கூடியது என்கிறார்.

ஆனால் வினாக்களுக்கான விடைகள் அந்த புத்தகத்தில் இருக்க மாட்டா. திறந்த புத்தக முறையில் அமைந்த தேர்வுகளில், தேர்வுக் கூடத்திலேயே மாணவர்கள் வினாக்கள் குறித்து விடைகள் குறித்து விவாதிக்கலாம். தேர்வு என்பது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சேர்ந்து செய்யும் ஒரு அறிவு வேள்வியாக இருத்தல் வேண்டும்.

வெளிநாடுகளில் ஆசிரியர்களுக்கு மாணவர்கள்தான் மதிப்பெண் இடுகிறார்கள். இந்தப் பேராசிரியரிடம் இத்தனை இடம் இருக்கிறது என்று முன்னரே அறிவித்து விடுவார்கள். எவரிடம் காலி இடங்கள் அதிகமாக உண்டோ, அவரிடம் செல்வதில்லை. நல்ல பேராசிரியரிடம் பயின்றால் ஒரு மாணவன் 17 -18 மணி நேரம் உழைக்க வேண்டும். பேராசிரியரோடு தங்கிப் பயிலலாம், உணவருந்தலாம், உலாப் போகலாம் என்கிறார். மேலும் அமெரிக்காவில் 'சேலம்' என்ற ஒரு நகருக்கு சென்ற அனுபவத்தை கூறும் போது, ஆசிரியர்களையும் சமூகம் அங்கீகரிக்க வேண்டும். சேலம் நகரில் சுரங்கவியல் பேராசிரியராக இருக்கும் இராமகிருஷ்ணன் அவர்களின் மனைவி, விஜயலட்சுமி உயர்நிலைப் பள்ளி ஆசிரியை. அந்த ஊரில் 'ஒரு நாள் விஜயலஷ்மி நாள்' என்று கொண்டாடினார்கள். சிறந்த ஆசிரியரைச் சமூகம் மதித்துப் பாராட்டி அவர் பெயரில் ஒரு நாளை முழுவதும் கொண்டாடுகிறது. நல்ல ஆசிரியர் ஒருவர் பெயரால் நாளைய தினம் இருக்கும் என முன்பாகவே அறிவித்து விடுகிறார்கள். மாநில ஆளுநர் குறிப்பிட்ட ஆசிரியரை அழைத்து விருந்து அளிக்கிறார். புதுச்சேரியில் இவ்வாறு செய்து பாருங்கள் என்று ஆலோசனையும் ஒன்றை வைத்துள்ளார் மகாகவி.

அடுத்ததாக, யார் நல்ல ஆசிரியர் என்பதைச் சொல்லுமிடத்து,

ஒவ்வொரு மாணவனுடைய உட்பொதிந்த முழு ஆளுமைப் பண்பை இனங்கண்டறிந்து, அதை முழுமையாக வெளிக் கொண்டு வருபவரே நல்ல ஆசிரியர். ஒவ்வொரு மாணவரிடத்திலும் ஒரு சர். சி.வி. இராமன் இருக்கலாம், யாருக்குள் பாரதியார் இருக்கிறார். யாருக்குள் பாரதிதாசன் இருக்கிறார் என்று சொல்ல முடியாது. ஒருவனுள் அப்துல் கலாமும் இருக்கலாம்; ஆப்ரகாம் லிங்கனும் இருக்கலாம்; கண்டறிய வேண்டும். அதனை அடையச் செய்ய வேண்டும். அதற்குத் துணை செய்பவரே நல்ல ஆசிரியர். தனித் தன்மை வாய்ந்த மாணவர்களை இனங்கண்டறிந்து அவர்களுக்குக் கூடுதலாகக் கற்பித்தல் வேண்டும். தனிக் கவனத்தைச் செலுத்துபவர் யாரோ அவரே சிறந்த ஆசிரியர். எந்த மாணவரிடம் ஒரு தாயைப்போல் அன்பு காட்ட முடிகிறதோ. ததும்பி வழியும் பாசத்தைச் செலுத்த முடிகிறதோ அந்த மாணவன் நல்ல ஆசிரியரை இனங்கண்டறிவான். தான் கற்றதையெல்லாம் மாணவனுக்கு அள்ளிக் கொடுக்க வேண்டும் என்ற கொடை உணர்வு எவருக்கு இருக்கிறதோ அவரே நல்ல ஆசிரியர் என்று மிக அருமையாகச் சொல்கிறார். போலவே

கற்பிக்கும் முறை பற்றியும் பேசுகிறார்...

"ஆசிரியர் எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பதற்கு இலக்கணங்கள் நம்மிடையே உண்டு. கணக்கு வராது என்று சொல்வதைவிட இன்னது செய்தால் கணக்கு வரும் என்று சொல்பவரே நல்ல ஆசிரியர். என் கணக்கு ஆசிரியர் எனக்கு அப்போதே சொல்லிவிட்டார்: "நோக்கெல்லாம் கணக்கு வராதுடா!" என்று. பத்தாம் வகுப்பு முடித்தவுடன் நல்லவேளை தமிழன்னை என்னை வாரி அணைத்துக் கொண்டாள். பிழைத்தேன். மாணவன் மத்தியில் ஓர் அழுத்தத்தையும் பாதிப்பையும் உண்டாக்குகிறாரோ அவரே நல்ல ஆசிரியர்.

காலம் தவறாமையின் அவசியத்தைக் கூறுமிடத்தில்,

எந்தச் சூழ்நிலையிலும் ஆசிரியர் அறநெறி தவற மாட்டார் என்ற நம்பிக்கையை இந்தச் சமூகத்திற்கும் மாணவர்கட்கும் நாம் அளித்தாக வேண்டும். ஆசிரியர் என்பவர் முன்மாதிரியாக எடுத்துக்காட்டாக இருத்தல் வேண்டும் என்கிறார்.

இப்படியாக, ஒரு நல்ல ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும் என்பதை தன்னுடைய அனுபவத்திலிருந்து மிக நேர்த்தியாக பல விடயங்களைப் பகிர்ந்துள்ளார் ஆசிரியர். இந்நூல் ஆசிரியர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் என்பதில் ஐயமில்லை. மீண்டும் அடுத்த கட்டுரையில் சந்திப்போம்.

மர வழிபாடு

பேரா. ப. தேவி அறிவுசெல்வம்
சிற்பத்துறை ஆய்வாளர்.

இயற்கை வழிபாடுகளில் ஒன்றான மர வழிபாடு ஆதி காலம் தொடங்கி தொல்குடி மனிதன் வாழ்ந்த காலத்திலேயே ஆரம்பித்திருக்கலாம். தனக்கான உணவினை தந்ததால் மரங்களைக் கண்டு வியந்து மரத்தினை வழிபடத் தொடங்கி இருக்கலாம். இலக்கியங்கள் வழியாகவும் மர வழிபாடு மரக்கோயில் இருந்தது பற்றி தெரிந்து கொள்ள முடிகிறது. மரக் கோயில்கள் அதற்கான வழிபாடுகள் இருந்ததைப் பற்றி பல இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. மரங்களைச் சுற்றி செங்கலால் ஆன அமைப்பும் அதற்கு படையல் வைத்து வழிபட்டதையும், முச்சந்தியில் மரம் நட்டு கந்து வழிபாடு செய்ததை மணிமேகலையும், விருட்ச சைத்தியம் மரக்கோயில் இருந்ததை போதிமரம், போதிக்கிருகம் என பௌத்த சமய இலக்கியங்கள் வாயிலாகவும் தெரிந்து கொள்ள முடிகிறது. வேப்ப மரத்தில் தெய்வம் இருக்கிறது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் ஆகோள் பூசலில் வெற்றி பெற்றதும் பூசலில் கவர்ந்த பசு ஒன்றினைக் கொன்று அதன் இரத்தத்தை மரத்தின் மேல் தெளித்தும், தசையை வேக வைத்து மரத்தின் அடியில் கடவுளுக்கு படையல் இட்டனர் என அகநானூறு தெரிவிக்கிறது.

தெய்வத்தன்மை பொருந்திய மரம் ஒன்றில் பறவை கூடு கட்டியது. மரத்தில் தெய்வம் உறைவதால் தன் சேவலோடு புணர முடியாமல் அக்கூட்டியில் இருக்கும் பெண் பறவை வருந்துவதாக அகநானூறு குறிப்பிடுகிறது.

வேப்ப இலைகளுக்கு பேய்களும், நோய்களும் அஞ்சும் என்பதற்கு சான்றாக சில செய்திகளையும் இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. அம்மை வந்த வீட்டு வாசலில் வேப்ப இலைகளை சொருகி வைப்பதும் இதற்குச் சான்றாகும். போரில் விழுப்புண்பட்ட மாவீரனை அவன் மனைவி வீட்டிற்கு எடுத்து வந்து பேய்கள் வீட்டிற்கு வராதவாறு நாகசம்மங்கி தழையையும், வேப்பமரத்தின் தழையையும் வீட்டு வாசலில் செருகி வைத்ததைப் புறநானூறு தெரிவிக்கிறது.

உருவ வழிபாட்டுமுறை வந்த பிறகு கல்லால மரத்தடியில் சிவன் உறைவதாகப் புறநானூறு, திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கலித்தொகை போன்றவையும், முருகன் உறையும் மரமாகக் கடம்ப மரம் பற்றித் திருமுருகாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, பரிபாடல், மதுரைக்காஞ்சி நற்றிணை, புறநானூறு, அகநானூறு, கலித்தொகை போன்றவையும் விநாயகருக்கு அருகம்புல்லும், அம்மனுக்கு வேம்பும்,

முனியாண்டிக்கு பனை மரமும் இருப்பதாக இலக்கியங்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

குறுநில மன்னனான நன்னனுக்கு காவல் மரமாக மாமரமும், பாண்டியருக்கு வேப்பம்பூ, மேற்குக் கடற்கரையில் உள்ள தீவுகளில் வாழ்ந்த கடம்பர்களின் காவல் மரமாக கடம்ப மரமும், பலராமருக்கு பனைக் கொடியும், விஷ்ணுவிற்கு அத்தி, ஆல் போன்றவையும், நெய்தல் நில பரத்தவருக்கு பனை மரமும் காவல் மரமாக இருந்திருக்கிறது.

அரும்பனூர் வீர காளியம்மன்

எதிரி நாட்டின் மாடுகளைக் கவர்ந்து தன் வீரத்தை நிரூபித்தது போல எதிரி நாட்டின் காவல் மரங்களையும் படையெடுப்பின் பொழுது முதலில் வெட்டி சாய்த்து இருக்கிறார்கள். இதனை நாம் இன்று சூரசம்கார நிகழ்ச்சியில் பார்க்கலாம்.

மரமும் கொலையும் - குறுநில மன்னன் நன்னனின் காவல் மரமான மாமரத்தின் கனியானது ஆற்றில் மிதந்து சென்றுள்ளது. அதனை எடுத்து உண்ட பெண்ணை

குற்றவாளியாகப் பாவித்து அவளைக் கொன்றுள்ளதை பெண் கொலை புரிந்த நன்னன் எனக் குறுந்தொகை பதிவு செய்துள்ளது.

தமிழகத்தின் அத்தி வரதர், கோழி கொத்தியில் இருக்கும் பெருமாள் கோயில் போன்றவற்றில் மூலவர் மரத்தால் ஆனவராகவே இருக்கிறார்.

மர வழிபாட்டினை இன்று பல பகுதிகளில் நாம் காணலாம். மதுரையில் மீனாட்சி அம்மன் கோயிலில் பட்டுப்போன கடம்ப மரத்தை வெள்ளிக் கவசம் கொண்டு பாதுகாத்து வருகிறார்கள்.

நெல் பேட்டையில் மரத்தின் அடிப்பகுதியில் இருக்கும் இடைவெளியில் அம்மன் உருவம் வைத்து வழிபாடு செய்து வருகிறார்கள்.

அரும்பனூர் பகுதியில் வீர காளியம்மன் என்ற பெயரில் வேப்பமரத்தை வழிபாடு செய்கிறார்கள்.

இராஜகம்பீரத்தில் பட்டுப்போன மரத்தை காமாட்சி அம்மன் என்ற பெயரில் வழிபாடு செய்கிறார்கள்.

மதுரையில் 300க்கும் மேற்பட்ட கடம்ப மரங்களைக் கொண்ட இடையப்பட்டியில் இம்மரத்தை கடம்ப முனி என்ற பெயரில் வழிபாடு செய்கிறார்கள்.

புல்லாங்குழல் பகுதியில் இணைந்திருக்கும் அரசமரம், வேப்ப மரத்தை ஆண், பெண் என வழிபாடு செய்கிறார்கள்.

மன்னாடிமங்கலத்தில் ஆலமரத்தின் அடிப்பகுதியின் உள்ளே சப்த கன்னிமார்களை வைத்து வழிபாடு செய்கிறார்கள்.

மதுரை நகரத்திற்குள் உலகத் தமிழ்ச் சங்கம், திருப்பரங்குன்றம், மஹால் சாலை என பல பகுதிகளிலும், பல கிராமங்களிலும் இன்றும் மர வழிபாடு இருப்பதைக் காணலாம்.

கொடிமரம், நந்தவனம், தல மரங்கள் போன்றவை கோயில் வழிபாட்டிற்கு பிறகு வந்தாலும் இவை எல்லாம் மர வழிபாட்டின் தொடர்ச்சியே என்பதைக் கண்கூடாகக் காணலாம்..

இடையபட்டி கடம்பமுனி

அந்நியர்கள்

இரம்யா நடராஜன்

பரபரப்பான விமான நிலையம். அவள் விமானத்திற்கு இன்னும் ஒரு மணிநேரம் இருந்தது. பொழுது போக்க எப்போதும் புத்தகம் கைவசம் இருக்கும். இப்போது சில நாட்களாக புத்தகத்தை விட எதிரில் வரும் மனிதர்களையும் சூழலையும் சின்னசின்ன அசைவுகளையும் ரசிக்கத் தொடங்கியிருந்தாள். அந்நிய மொழிகள், அந்நிய கலைகள் என்பது போல அறிமுகமில்லாதவர்கள் நடுவில் இருக்கும் ஏதோ ஒன்று அவளை இழுத்தது.

புத்தகத்தில் மனம் செல்லவும் இல்லை. பேருந்து நிறுத்தத்தில் சிறுபிள்ளை என, இங்கும் அங்கும் வேடிக்கைப் பார்த்தாள். பெரிய கண்ணாடி ஜன்னல் தாண்டி நின்றுக் கொண்டிருந்த விமானங்கள் கை விரித்துத் தரையில் வளைய வந்துக் கொண்டிருந்தது. ஒளிரும் அங்கிகளுடன் விமான பணியாளர்கள் வழிநடத்திக் கொண்டிருந்தனர். பெரிய திமிங்கலத்தின் நடுவில் சிறு மீனென அவர்கள் இருப்பு இருந்தது.

நுழைவாயில் அருகில் இருந்த கடைகளை பார்த்தாள். மிட்டாய் கடை ஒன்றில் குழந்தையின் அடம். அதை சமாளிக்க பேராடும் அதன் அம்மா. அந்த அம்மாவுடன் சேர்ந்து குழந்தையை சமாதானம் செய்யும் அந்தக் கடையின் ஊழியப் பெண். போனில் காது கொடுத்துக் கொண்டே எதிரில் இருப்பவளோடு ஜாடை பேசும் அவன். சுற்றுலா புகைபடங்களை மாற்றி மாற்றி அனுப்பிவைத்துக் கொண்டு கேலியும் கிண்டலுமாய் ஒரு இளங்கூட்டம். அயர்ச்சியா நிம்மதியோ ஆழ்ந்த உறக்கத்தில் ஒரு மூதாட்டி. அவளுக்கு தோள் கொடுத்துக்கொண்டு பேப்பர் வாசிக்கும் நடுத்தரவயது நபர்.

பத்து முறை முடிந்து அடுத்த முறை மறுபடி பெட்டிகளை எண்ணும் நடுவயது அம்மா. அவளை கண்டிக்கும் அவளின் இளவட்ட மகன். பிரிவும் வாழ்வின் அங்கம் என்ற ஞானமோ என்னவோ கலங்காத கண்கள் வழுக்கும் வார்த்தைகள் என அணைப்புகளாய் அரங்கேறும் ஒரு பிரிவு உபச்சாரம். அம்மா அவசரமாய் சாண்ட்விச் முழுங்கிக்கொண்டிருக்க அவள் பிள்ளையை சக்கரம் கொண்ட பெட்டியில் வைத்து சுற்றி சுற்றி வேடிக்கை காட்டிக்கொண்டிருந்த துப்புரவு உடையணிந்த இளைஞன்.

மிடுக்கான உடையில் கையில் வாக்கி டாக்கியுடன் இங்கும் அங்கும் நடந்த படி இருந்தனர் விமான நிலைய அதிகாரிகள். பெண் அதிகாரியின் அலங்காரங்களும் நடையும் என்னவோ பாரதியின் ''நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வை''யை ஞாபகப் படுத்தியது. புறம் மட்டும் அல்லாமல் அகத்திலும் இது இருந்தால் நல்லது. கையில் புத்தகம் திறந்து கிடக்க எங்கோ வெறித்தபடி அமர்ந்திருந்தார் ஒரு அந்நியன். உடையில் நேர்த்தியும் முகத்தில் கீர்த்தியும் அட போட வைத்தது. பார்வையின் தீர்க்கம் ஒளி நுட்பம். ஆடம்பரமில்லாத ஆனால் சற்று கர்வமான இருத்தல்.

இப்படி பறந்துக் கொண்டிருந்த பார்வை ஒரு வாழ்த்து அட்டை கடை வாசலில் இருந்த அந்த இருவர் மீது பதிந்தது. அந்த இளைஞன் நகரும் படிகட்டின் கீழ் நின்று கொண்டிருந்தான். அந்தப் பெண், கடை வாசலில் நின்றிருந்தாள். இருவரின் உடையும் விமான நிலைய ஊழியர்கள் என்பதை காட்டிக்கொடுத்தது. பதுங்கி பதுங்கி பேசும் அவனும் கோபப் பார்வை வீசும் அவளும் சுவாரஸ்யமான காட்சி. அவன் சட்டைப் பையில் இருந்து ஒரு சாக்லேட் எடுத்து நீட்டினான். அவள் வாங்க மறுத்தாள். நீட்டிய கையை மடக்குவதா நீட்டிக் கொண்டே இருப்பதா என்பதாக தயக்கம் அவனுள். அத்தோடு ஒற்றைக் கண் சிசிடிவி வேறு அவனைப் படுத்தியது.

யாரோ ஒருவர் அவனிடம் வந்து ஏதோ கேட்டார். சட்டென சட்டை பையில் சாக்லேட்டை திணித்துக் கொண்டு அவருக்கு வழி காட்டினான். மறுபடி அவன் பார்வை அவள் பக்கமே. அதுவரை அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள் அவன் திரும்பியதும் இறக்கி வைத்த கோபத்தை மாட்டிக் கொண்டாள். அவன் முகத்தில் பாவம் வழிந்தது. எவ்வளவு முயன்றும் அவள் திரும்பவில்லை. அவன் அவளிடம் சொல்லிக்கொண்டே இருந்தான். கெஞ்சிக் கொண்டிருந்தான் என்றே சொல்ல வேண்டும். அவன் உடல் மொழியில் தவிப்பும் சோகமும்.அத்தனையும் காதில் வாங்கியவள் ஒரு சொல்லாவது பேசியிருக்கலாம். பல சமயங்களில் மௌனம் தான் கொல்லும்.

அனிச்சையாக தலையை திருப்பி அங்கு அமர்ந்திருந்த அந்த அந்நியனைப் பார்த்தாள்.மறுமுறை பார்வை அவர்கள் மீது சென்ற போது நகரும் படிகளை ஒட்டினாற் போல சற்று உள்ளடங்கி நின்று அவளை அழைத்தான். அது அவளுக்கு கேட்டிருக்க வேண்டும். காதை மட்டும் அவன் பக்கம் திருப்பி கவனித்தாள். அதற்குள் படிகட்டில் ஏற ஒரு பெண்மணி தவித்துக் கொண்டிருந்தாள். உடனே வந்து கைபிடுத்து படியில் ஏற்றிவிட்டு மேல் தளம் வரை கூடவே சென்று இறக்கிவிட்டான். கீழே வரும் படிகட்டுகள் அடுத்த பகுதியில் இருந்தது.அவன் வருவதற்கு சற்று நேரம் ஆகும்.

அதுவரை இந்த பெண் என்ன செய்கிறாள் என்று பார்த்தாள். அவள், அவன் வரும் வழியில் விழி விரித்துக் காத்திருந்தாள். நேரம் போய் கொண்டே இருந்தது. அவன் வரவில்லை. கடை வாசலில் வாடிக்கொண்டிருந்தாள் அவள். அவளிடம்

வந்து வழி கேட்போருக்கும் கேள்வி கேட்போருக்கும் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் எண்ணம் முழுதும் அவனாக இருந்ததாக தான் தெரிகிறது

.

இதைப் பார்த்துக் கொண்டே இருந்தவள் சட்டென முகம் திருப்பினாள். அடுத்தடுத்த நொடியில் அவளது விமானம் பற்றிய அறிவிப்பு வந்து கொண்டிருப்பதை உணர்ந்தாள். ஒரு திரைபடத்தின் கடைசியில் கரண்ட் போவது போல தவிப்பாய் இருந்தது அவளுக்கு. எப்படியும் இருக்கை இருக்கத் தானே போகிறது பார்த்துக் கொள்ளலாம் என்று ஒரு பக்கம் இருந்தாலும் எப்போதும் நேரத்துக்கு ஏறி அமர்ந்து விடும் உள்ளுணர்வு ஆணையிட்டுக் கொண்டிருந்தது. ‘‘எங்கே போய் தொலைந்தான் அவன். எதுக்கு இப்படி தவிக்க விடறான்’’.

‘‘அவளையா உங்களையா’’

குரல் கேட்டு திரும்பினாள். குறுந்தாடியும் மீசையுமாக குறுகுறு கண்களோடு நின்றிருந்தார் அந்த அந்நியன். அவர் கையில் இருந்த புத்தகமும் அவள் கையிலிருந்து புத்தகமும் ஒன்றென உணர்ந்தாள்.எப்படி எதிரிவினையாற்றுவது என்று புரியாமல் சிரித்து வைத்தாள். அவர் மிகவும் பரிச்சயமானவர் போல

‘‘சாரி நான் அங்க உட்கார்ந்து இருந்தேன். அவங்கள பாத்துட்டு இருந்தேன். அழகா போயிட்டு இருக்கே ஒரு கதை. இதை வேற யாரும் பாக்கறாங்களான்னு ஒரு தேடல் தான். நீங்களும் பாத்து ரசிக்கறத பாத்தேன். அதான். அதுக்குள்ள ப்ளைட் கூப்டாங்க. நீங்களும் எழுந்தீங்க. ஒரே ப்ளைட் தானோன்னு...’’ அவர் பேச பேச அவள் முகத்தில் என்ன மாற்றம் கண்டாரோ பேச்சை நிறுத்திவிட்டு வார்த்தைகளை முழுங்கிக் கொண்டார்.

''ஓஓ'' என்று மென்புன்னகை வீசினாள்.

''இன்னும் பத்துநிமிஷம் இருக்கு. இருந்து பாத்துட்டு போகலாமா''

''இல்ல இல்ல..டைம் ஆகிடும்'' என்று பதிலுக்கு காத்திராமல் தன் பெட்டிகளை எடுத்துக் கொண்டாள்.

விமானம் ஏறும் வரிசையில் நின்றாள். வரிசையில் நிற்கும் நேரம் முழுதும் அவன் வந்துவிட்டானா அவள் பார்த்துவிட்டாளா என்றே கண்கள் பார்த்துக் கொண்டிருந்தது. அதை விட மேலான தவிப்பு வேறொன்றும் அவள் மனதில் இருந்தது. அந்த பெண்ணின் கண்கள் கலங்குவதாக கூட அவளுக்குத் தோன்றியது. எட்டி எட்டி பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு கட்டத்திற்கு மேல் இதென்ன கிறுக்கு தனம். அவர்கள் யாரோ என்னவோ என்று பொய் சமாதானம் சொல்லிக்கொண்டு முகத்தை திருப்பாமல் இருக்க முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில் அவள் பின்னால் நின்ற நபர் அவள் தோளை தட்டி கூப்பிட்டார். அவள் திரும்பினாள். கையில் வாழ்த்து அட்டை ஒன்றை நீட்டினார். 'என்ன' என்பதாக அவள் பார்வை. அவருக்கு பின்னால் இருப்பவரை கை காட்டினார். அவர் அடுத்தவரை அடுத்தவர அதற்கு அடுத்தவரை. இப்படி எட்டு ஆட்கள் தள்ளி தலையை எட்டிப் பார்த்து 'நான் தான்' என்பதாக செய்கை காட்டினான் அந்த அந்நியன். எதற்கு என்ன என்பது போல பார்த்தாள்.

சிரித்துக்கொண்டே அவர் ஆள்காட்டி விரலால் எங்கோ சுட்டினார். அவர் காட்டும் இடத்தில் பார்த்தாள். நகரும் பாதைக்கு பக்கத்தில் சிறு இடத்தில் அவள் அவனை கையிலிருந்த ஒரு வாழ்த்து அட்டையால் தாக்கிக் கொண்டிருந்தாள். அவன் சிரித்தபடியே அதை வாங்கிக் கொண்டு தன் சட்டையிலிருந்த சாக்லெட்டை நீட்டினான். அழுகையும் புன்னகையும் வெட்கமுமாக அவள் அதை வாங்கிக் கொண்டு அவனை கிள்ளிவிட்டு தன் பழைய இடத்துக்கே வந்து நின்றாள்.

இந்த காட்சியை பார்த்துவிட்டு ஏனோ அந்த அந்நியனை பார்க்கத் தோன்றியது. அவர் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். இப்போது அவளுக்குள்ளும் ஏதோ பூத்தது. வாழ்த்து அட்டையை தன் புத்தகத்தில் பத்திரப் படுத்திக் கொண்டாள்.

விமானத்தில் தன் இருக்கையில் அமர்ந்தபடி புத்தகத்தை திறந்து அட்டையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அழகான பூங்கொத்துகள் சிரித்துக் கொண்டிருந்தன. அவள் அருகில் இருந்த பெண்மணி அழகான பூக்கள் என்று சொல்லி புன்னகைத்தாள். பதில் புன்னகை அளித்துவிட்டு விமானத்தை இருந்த இடத்திலிருந்தே நோட்டம் விட்டாள்.

விமானம் கிளம்ப ஆயத்தமானது. அறிவிப்புகள் வந்த வண்ணம் இருந்தது. விமானபணிப்பெண்ஒருவர்அருகில்வந்துஅவள்பக்கத்தில்அமர்ந்திருந்தவரிடம் ஏதோ கூறினார். அவரும் தலையசைத்து ஒப்புதல் தெரிவித்தார். சற்று நேரத்தில் அந்த இருக்கையிலிருந்து எழுந்து இன்னொருவருக்கு இடம் அளித்தார். இதை கண்டு காணாதது போல வழக்கமாக பார்ப்பதே போல ஜன்னல் வழியே விமான றக்கைகளின் குதூகலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இப்ப விட..பறக்கும் போது பாக்கனும் அப்ப தான் அழகா இருக்கும்..சும்மா அப்படி சிலிர்த்துக்குவாங்க" அதே குரல்.

சட்டென திரும்பியவள் கண்களில் ஒரு மின்னல். விழி வழியே பறந்துவிழும் பட்டாம்பூச்சிகளை பிடித்து அடக்கிக்கொண்டாள்.

"நீங்க"

"ஆமா..தெரிஞ்சவங்க கூட பயணிக்கலாமேன்னு தான்"

"தெரிஞ்சவங்களா..நானா"

"ஆமா ஒரே புக் படிக்கறோம்..ஒரே விஷயம் பாக்கறோம்..ஒரே...."

"ம்ம்ம்ம் என்ன"

"சரி சரி.. இன்னும் நிறைய தெரிஞ்சிக்கலாம்..பறந்துகிட்டே...விமானத்தல சொன்னேன்" எக்கசக்கமாய் சிரித்தான். விமானம் கிளம்பியது. அமிழ்ந்து அமிழ்ந்து மேலேழத் தொடங்கிய போது விமான றக்கைகளுடன் சிலிர்க்கத் தொடங்கியது மனத்தின் சிறகுகள்.

சிந்துப் பாடல்கள்

முனைவர் ம. கமலி குருசாமி, விரிவுரையாளர்
தமிழ்த்துறை, மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி, மதுரை.

முனைவர் ப. தேவி அறிவு செல்வம்,
சிற்பத் துறை ஆய்வாளர், மதுரை.

சிந்து என்பது வேட்டைச் சமூகத்தின் குழு நடனமாகும். உண்மையான நாட்டுப்புறக் கூத்துகளாகிய வரிக் கூத்துக்களை 93 எனச் சுட்டுவர். இதில் ஒன்று சிந்து. சிந்துப் பாடல் என்ற வாய்மொழிப் பாடல் குழு நடனத்தின் அங்கமாக இருந்து தனது இசைமையின் தனித்தன்மையால் சிந்திசைப்பா என இசைத் தமிழாக வளர்ந்து, பின் தனது நடன இசைக் கலைத் தன்மைகளையே தனக்குரிய யாப்பு வரையறைகளாகத் தழுவிக் கொண்டு சிந்து இலக்கியம் என்ற யாப்பிலக்கியத் தகுதி பெற்று நிலை பெற்றுள்ளது என்ற நெடிய வரலாற்றினை அறிய முடிகிறது.

இதன் சிந்து என்ற சொல்லின் வரலாற்றுப் பாதையில் குழு இயக்கம், இசைபடுதல், இலக்கியமாதல் என்ற முக்கூட்டு நிலைச் சின்னமாகப் பரிபாடல் திகழ்வதைக் காண முடிகிறது. தொல்காப்பியம், காக்கை பாடினியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, சிதம்பரம் பாட்டியல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம் சுவாமிநாதன் அமுத சாகரம், வீர சோழியம், சூடாமணி நிகண்டு போன்றவை சிந்து என்பது மூன்று சீர் கொண்ட அடி என்கின்றன.

சிந்துவின் வகைகள்:-

வழிநடைச் சிந்து, நொண்டி சிந்து, காவடிச் சிந்து, கொலைச் சிந்து, நீதிச் சிந்து, நிகழ்ச்சிச் சிந்து.

சிந்துவில் பெண்கள்:-

வாய்மொழியாகக் கள ஆய்வில் கிடைத்த ஒரு சிந்துப் பாடல் தொட்டியப் பெண்ணின் கொலையைக் கூறுகிறது. மதுரை மாவட்டம் அரும்பனூரைச் சேர்ந்த அழகன் என்ற முதியவர் பறைக் கணக்கர் வரி வசூலிக்க கால்நடையாக மேலூரைச் சூழ்ந்துள்ள கிராமங்களுக்குச் சென்று திரும்பும் வழியில் வெயில் தாங்காமல் ஒத்தை வீடு என்ற கிராமத்தில் ஒரு தொட்டிய வீட்டுத் திண்ணையில் அமர்ந்து இளைப்பாறுகிறார்.

தண்ணீர் எங்கும் கிட்டாமையால் அவ்வீட்டுக்குள் உள்ளோரிடம் தாகத்திற்கு தண்ணீர் கேட்கிறார். வீட்டினுள் பார்வையற்ற வயதான ஒரு தாயும், 12 வயதுடைய பருவம் எய்தாத சிறுமியாகிய மகளும் உள்ளனர். அண்ணன்மார் ஐந்து பேர் வேட்டைக்கு போயிருக்கின்றனர். பார்வையற்ற தாய் தன் மகளிடம் தண்ணீர் கொண்டு போய் கொடுக்கச் சொல்ல தொட்டிய பெண்ணோ மோரும், நீரும் கொண்டு சென்று முதியவர் கையில் தர, தெரு வழியே குடமேந்திச் செல்லும் பெண்கள் கையில் நீர் தருவதற்கு கட்டின புருஷனா அவர் என்று எள்ளிப் பேச, அச் சொல்லுக்காக முதியவரே தன் கணவன் எனத் தாயிடம் கூறி முதியவரைத் தொடர்கிறாள் சிறுமி.

முதியவர் ஊருக்குப் புறம்பே வட்டப்பாறையில் அமர்ந்து வெற்றிலை இடிக்கும்போது அவரைத் தன் கணவர் என்று அவரிடம் கூறி அடைக்கலம் புகுகிறாள். முதியவர் ஒன்றும் புரியாமல் தடுமாறுகிறார். வேட்டைக்குச் சென்ற அண்ணன்மார் தம் தங்கை எவரோ அந்நியர் ஒருவரோடு உடன்போக்குச் சென்று விட்டாள் என்று அறிந்து சினமுற்று வாளுடன் குதிரையில் வருகிறார்கள். அண்ணன்மார் வருவதை அறிந்த தங்கை முதியவரிடம் தன்னை அண்ணன்மார் வெட்டுவது உறுதி என்று உரைத்து அருகில் உள்ள

புளியமரம் பிளக்க ஆணையிட்டு அதில் முதியவரை ஒளிந்து கொள்ளச் சொல்கிறாள். யாதொன்றும் விசாரிக்காமல் அண்ணன்மார் தங்கையின் தலையை வாளால் வெட்டி எறிந்து விட்டு புறப்படுகின்றனர்.

மீண்டும் புளியமரம் பிளக்கவே மரத்திலிருந்து வெளிவந்த முதியவர் பதறித் துடிக்க விழுந்த தலை அவரிடம் தன் கூந்தலைக் குடங்கையில் சுருட்டி அரும்பனூருக்குக் கொண்டு சென்று கண்மாய் மடையில் புதைத்தால் தெய்வமாகி அவரது வம்சத்தை காப்பதாக உறுதி கூறுகிறது. முதியவர் அவ்வாறே தலையை அணைத்தபடி அரும்பனூர் வந்து இரவில் தலை மடையில் அத்தலையைப் புதைக்கிறார்.

மறுநாள் காலையில் நெல் வயல் யாவும் செங்குருதியாகக் காட்சியளிக்கிறது. ஊர் மக்கள் கோடாங்கியிடம் குறி கேட்க, அவரோ அருளுற்று ஊர்ப் பெரியவராகிய அழகனிடம் இவ்வரலாற்றினை விசாரித்துத் தரும்படி கூற, நடந்ததை அறிந்த ஊர் மக்கள் தொட்டியப் பெண்ணின் கற்புத் திறமையைப் போற்றி அவளை தெய்வமாக எண்ணி அவள் கேட்டபடி நாட்கதிரில் ஆறுபடி படைத்து வாய் கட்டி பச்சரிசிப் பொங்கலிட்டு, மேள தாளத்தோடு கூத்தும் நடத்தி வழிபட்டு வருகின்றனர். தொட்டியப் பெண் புதைக்கப்பட்ட இடம் திரு ஆழிக்கல் எனப்படுகிறது.

தை, வைகாசி மாதங்களில் இக்கோயிலில் கரகம், சாமியாட்டம், பால்குடம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். வசதியைப் பொறுத்து இந்நிகழ்ச்சி ஒரு வாரம் அளவில் தொடரும்.

தரவுகள் :-

- சிந்துப் பாடல்கள் - முனைவர் பட்ட ஆய்வறிக்கை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
- தகவலாளி- திரு. அழகர் பூசாரி, பொய்கரைப்பட்டி, வயது 85.
- தகவலாளி- திரு.நாராயணமூர்த்தி, அரும்பனூர், வயது 40

ஐம்பூதங்களின் தீர்க்கதரிசி

விழுந்து புதைந்த விதைகளை
விருட்சமங்களாய் ஆக்கிடும்
பூமி மட்டுமல்ல
வஞ்சகனை வெஞ்சினத்தால்
அழித்திடும் பூகம்பப்
பேராற்றல் அவள்.

வடிவங்களுக்கேற்ப உருவம் கொண்டு
பாதைகளுக்கேற்ப வளைந்து கொடுக்கும் நீர்மூலம்
மட்டுமல்ல அவள்...
நிர்மூலமாகவும் புரட்டிப் போடும்
பெருவெள்ளப் பேராற்றல் அவள்.

அன்பு மழையைப்
பொழியும் மேகங்களை மட்டும்
சுமந்தலைகிற விசும்பல்ல அவள்...
கணிப்புகளுக்கு அப்பாற்பட்ட
அரூபப் பேராற்றல் அவள்

உடலியல் வீணைக்குள்
உயிர் நரம்புகள் மீட்டும்
இனிய தென்றல் காற்று
மட்டுமல்ல அவள்...

கோரமுகத்தினை அறியவியலாமல்
எங்கோ மையத்தில் நின்று
சிரிக்கும் புயல் கண் அவள்.

நின் கண்ணில் வழியும்
நீர் துடைக்கும் தெய்வீகச்
சுடர் மட்டுமல்ல அவள்...
ஊகிக்க முடியாமல்
ஒரு அந்தத்தை உற்பத்தி
செய்திடும் ஊழித்தீ அவள்.

மொத்தத்தில்
தாங்கினால் தாங்கிடும்
தங்கம் அவள்!
தாக்கினால்
ஒரு வதம் செய்திடும்
காளி அவள்!

அசைவால் அகிலத்தையே
அசைத்திடும் ஐம்பூதங்களும்,
வணங்கும் தீர்க்கதரிசி அவள்!
இதைப் புரியா பேதைகள்
யாவரும் அற்பத் துகள்!

பி. ஹேமா
முசிறி

மா விளக்கு ஏற்றுதல் - பௌத்தம் புகுத்திய மந்திரச் சமயச் சடங்கு

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி,
ஆசிரியர், தமிழணங்கு, மதுரை

மாவிளக்கு எடுத்தல்என்பது நாட்டுப்புறத் தெய்வங்களுக்குச் செய்யப்படும் ஒரு நேர்த்திக்கடன் ஆகும். இடித்த அரிசி மாவினால் விளக்குச் செய்து அதில் எண்ணெய் அல்லது நெய் விட்டுத் திரி இட்டு விளக்கு ஏற்றுவதாகும். சில மலைக் கோவில்களில் பாறைகளில் உரல்கள் செதுக்கியிருப்பர். பக்தர்கள் இந்தப் பாறை உரல்களில் அரிசியைக் குத்தி எடுத்து மாவாக்கி ஏலம் சுக்கு கலந்து பிசைந்து உருண்டையாக உருட்டி அதில் ஒரு குழி அமைத்து எண்ணெய் அல்லது நெய் ஊற்றி விளக்குப் போடுவார்கள். பெரும்பாலும் அம்மன் கோவில்களில் மாவிளக்கு எடுப்பது மரபு சில வைணவ கோவில்களிலும் மாவிளக்கு போடும் பழக்கம் உள்ளது

மாவிளக்கு எடுத்தல்

கோயிலில் அம்மன் முன்பு இலைகளில் வைத்து மாவிளக்கை ஏற்றுவர். ஒருவர் தன்னுடைய தனக்கு நெஞ்சு வலி, வயிற்று வலி வரும் போது 'நான் நெஞ்சில் மாவிளக்கு எடுக்கிறேன்' 'வயிற்றில் மாவிளக்கு எடுக்கிறேன்' என்று நேர்ந்து கொண்டு தட்டின் மீது இலை வைத்து அந்த இலையின் மீது மாவிளக்கை வைத்து கோவிலின் முன்பு படுத்து தங்கள் வயிற்றின் மீது மாவிளக்கு தட்டை வைத்து எரிய விடுவார்கள். பத்து நிமிடம் 15 நிமிடம் வரை இவ்வாறு விளக்கு எரியும். நெஞ்சில் மாவிளக்கு எடுக்கிறேன் என்ற நேர்ந்து கொள்பவர்கள் படுத்த படி தங்கள் நெஞ்சின் மீது வைத்து மாவிளக்குத் தட்டைக் கைகளால் பிடித்துக் கொள்வார்கள்.

போன்மைச் சடங்கு

மா விளக்கு என்பது சர் ஜேம்ஸ் ஃபிரேசர் சொல்வது *The Golden Bough* நூலில் விளக்கியஸது போல ஒரு போன்மைச் சடங்கு *(Imitative ritual)* ஆகும். தனக்கு உயிரை கொடுத்த இறைவனுக்கு தன் இன்னுயிரைக் காணிக்கை ஆக்குவதாகும். தன் உடம்பைத்தானே நெருப்பிட்டு எரித்துக் கொள்ளுதல் *(தீ குளித்தல்)* போன்ற வழிபாட்டுச் சடங்கு முறை ஆகும். ஃபிரேசர் பழங்குடி மற்றும் நாட்டுப்புற மக்களிடம் புழக்கத்தில் உள்ள சடங்குகளை ஆராய்ந்து நூலாக எழுதினார் என்றாலும் அச்சடங்குகள் அவர்கள் காலத்தோடு மறைந்து போய்விடவில்லை. அவை மாறியும் திரிந்தும் காலத்துக்கேற்ப புதிய முறைகளில் தொடர்கின்றன.

ஒளி வழிபாட்டின் தொன்மை



ஒளி வழிபாடு என்பது மனித வரலாறு தோன்றிய காலம் தொட்டு இருந்து வருகின்றது. இதில் சூரிய சந்திரர் அக்கினி அல்லது நெருப்பு வழிபாடுகள் நடைபெற்றன. இரவின் இருளைப் போக்கக் கதிரொளி வந்ததும் கதிரவனைக் கடவுளாகத் துதித்துப் போற்றினர். இரவின் இருட்டைப் போக்க நிலவொளி வந்ததும் அதனையும் தெய்வமாகக் கருதினர். குறிப்பாக பௌர்ணமி நாட்களில் மக்கள் ஆடிப் பாடிக் கூடி மகிழ்ந்தனர். தங்களுக்கு உணவு சமைக்கவும் ஒளி தரவும் ஏற்றிய விளக்கின் சுடராக இருந்து ஒளி ஊட்டிய நெருப்பைக் கடவுளாக வழிபட்டனர்.

பௌத்த மதம் பரப்புதல்

தமிழகத்தில் தோன்றிய ஆசிவகம் மெல்ல மெல்ல வடக்கே பரவிய போது அசோக மாமன்னர் ஆசிவகரின் தலை ஒவ்வொன்றிற்கும் ஆயிரம் பொன் என்று விலை வைத்தார். தான் பின்பற்றும் பௌத்த மதம் மட்டுமே உலகில் அனைவரும் பின்பற்றும் மதமாக இருக்க வேண்டும் என்று விரும்பித் தன்

மகனையும் மகளையும் தெற்கே அனுப்பி பௌத்த சமயத்தைப் பரப்பினார். இதனால் ஆசிவகம் மறைந்து பௌத்தம் தழைத்தது. பௌத்தம் மதங்கொண்டு பரவியது. இச்சமயம் மக்களிடையே இருந்த பழைய வழிபாட்டு முறைகளையும் சடங்குகளையும் தன்னுடையதாக்கிக் கொண்டது. இதே நிலை இச்சமயத்திற்கும் பின்னர் பக்தி இயக்கக் காலத்தில் சைவ சமயப் பேரெழுச்சியின் போது ஏற்பட்டது.

தீக் குளித்தல் - தன்னையே படைத்தல்

புத்த துறவி உலக நன்மைக்காகத் தன் உடலை நெருப்புக்கு இரையாக்குதல்

கௌதம புத்தர் பசியோடு இருந்த வேளையில் அவருக்கு உணவாக வேண்டும் என்று முடிவெடுத்த சிறுமுயல் ஒரு அங்கு எரிந்து கொண்டிருந்த நெருப்பில் குதித்து தன் உயிரைத் தியாகம் செய்தது, என்று ஒரு கதை பௌத்த சமயத்தில் வழங்குகின்றது. எனவே பொதுநலத்துக்காக தன் உயிரைத் தியாகம் செய்தல் என்ற நடைமுறை அச்சமயத்தில் துறவிகளிடம் ஏற்பட்டது. இவர்கள் தங்கள் உடம்பில் எண்ணெய்த் துணியைச் சுற்றிக்கொண்டு தீ வைத்து மரணம் அடைவர். துறவிகளுக்கு தீ குளித்தல் பக்தி நடைமுறைகளில் ஒன்று. இல்லறத்தாருக்கு பல்வேறு இல்லறக் கடமைகள் இருப்பதால் அவர்கள் தீ குளிக்காமல் மாவைத் தன் உடம்பாகப் படைத்து அதில் விளக்கேற்றித் தன்னையே இறைவனுக்குப் படைத்தனர்.

பௌத்தத்தில் நெருப்பின் சிறப்பு

பௌத்த சமயத்தில் நெருப்பு சிறப்பாகப் போற்றப்படுகிறது. . கௌதம புத்தர் மனிதர்களைப் பிடித்திருக்கும் பற்று வெறுப்பு அறியாமை ஆகிய மூன்று நஞ்சும் நெருப்புப் போல நம்மைச் சுற்றி ச் சுழன்று எரித்து விடும், என்றார். இவ்வுலகத்தை அவர் சம்சார லோகம் என்றும் மறு உலகத்தை தீப்பிழம்புகளின் லோகம் என்றும் குறிப்பிடுவார்.

தீப்பிழம்பு என்பது தூய்மையைக் குறித்தது. புத்தர் இவ்வுடம்பை நெருப்பு என்கிறார். 'நாம் எரியும் வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்' என்று தாமரை சூத்திரத்தின் மூன்றாவது அத்தியாயத்திலும் குறிப்பிட்டுள்ளார்.

போதிசத்துவ சபதம்

1963இல் அமெரிக்கா வியட்நாம் நாட்டுடன் போர் செய்தது. அமெரிக்காவின் பௌத்தர்களுக்கு எதிரான அடக்கு முறையைக் கண்டித்து பௌத்தத் துறவிகள் தல சா லோய் பகோடா முன்பு ஒரு ஊர்வலம் நடத்தினர். அச்சமயம் குவான் டாக் என்ற துறவி தீக்குளித்து உயிர் நீத்தார். இவ்வாறு தீக்குளிப்பதை மகாயான பௌத்த மரபு 'போதி சத்துவா சபதம்' என்கிறது. தீக்குளித்த இவர்கள் போதிசத்துவராகப் போற்றப்படுவர். இங்கு சப்தம் என்றால் வைராக்கியம், மன உறுதி என்று பொருள்

அமெரிக்காவில் தீக்குளிப்பு

2022 ஏப்ரல் மாதம் வட அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் முன்பு பௌத்த சுற்றுச்சூழல் ஆர்வலர் விண் ப்ரூஸ் புவி தினத்தன்று இப் பூமியை காப்பாற்ற வேண்டும் என்ற உயர்நோக்கத்துடன் தீக்குளித்தார். இச்செய்தி பரவலாக ஆராயப்பட்டது இதனை தற்கொலை என்று தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. இதனை ஒரு எதிர்ப்புச் செயல் என்றும் புரிந்து கொள்ளக்கூடாது. தீக்குளித்தல் என்பது பௌத்த சமயத்தின் பக்தி முறையாகும் என்று விக்டோரியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிரிஸ் கோட்டா ஜோன்ஸ் தெரிவித்தார். எனவே நெருப்பாக எரிந்து போதல் என்பது பௌத்த சமயத்தில் தன்னையே காணிக்கையாகத் தருவதாகும்.

உயிர்ப் பலிக்குப் பதிலாக

தமிழகத்தில் உயிருக்கு உயிர் என்ற வகையில் விலங்குகளையும் பறவைகளையும் பலி கொடுத்தனர். உயிர்ப்பலியையும் ஃபிரேசர் போன்மைச் சடங்கு என்பார். உயிரைக் கொடுத்த இறைவனுக்கு நாமும் ஓர் உயிரைக் கொடுக்க வேண்டும் என்று பக்தன் விரும்புகிறான். ஆனால் பௌத்தம் உயிர்ப் பலியை ஏற்கவில்லை. எனவே மாவில் விளக்கு செய்து ஏற்றுகிறான். மணிமேகலைக் காப்பியத்தில் ஆபுத்திரன் பலி கொடுக்க வைத்திருந்த பசுவைக் காப்பாற்றினான். வடக்கே வைதீகர்கள் குதிரைகளையும் பசுக்களையும் யாகத்தில் பலியாக்கினர். அவற்றை அவைதீக சமயமான பௌத்தம் எதிர்த்தது. எனவே தென்னகத்தில் பரவிய பௌத்த சமயம் உயிர்ப் பலிக்குப் பதிலாக வேறு சில புதிய போன்மைச் சடங்குகளை அறிமுகம் செய்தது.

மந்திர வழிபாட்டுச் சடங்கு

மக்கள் தன் உடலைக் குறிக்கும் வகையில் மாவை உருட்டி வைத்து அதில் எண்ணெய் ஊற்றி விளக்கேற்றித் தங்கள் உடம்பையும் உயிரையும் இறைவனுக்கு முன் பலியாக கொடுக்கும் போன்மை வழிபாட்டுச் சடங்கை நிறைவேற்றினர். மாவினால் பாவை

(பொம்மை) செய்வது மந்திர தந்திர நடைமுறையாகப் பல நாடுகளிலும் (voodoo magic in Africa) இருந்துள்ளது. இங்கும் ஏவல், பில்லி சூனியம் போன்ற மந்திரச் செயல்களில் 'மாவுப் பாவை' மனிதருக்குத் பதிலியாக அமைந்தது. பௌத்தர்கள் மந்திர தந்திரங்களில் கை தேர்ந்தவர்கள் என்பதால் இச்சடங்கை அவர்கள் அறிமுகம் செய்தனர். இதனை ஃபிரேசர் மந்திர வழிபாட்டுச் சடங்கு (Magic religious ritual) என்பார். மாவில் விளக்கு ஏற்றுவது, மாவில் ஊசி குத்துவது, மாவுப் பொம்மையின் கை, கால்களைப் பிய்த்து எறிவது போன்றவை குறிப்பிட்ட மனிதருக்கு மறைமுகமாகச் செய்யப்படும் நன்மை தீமைகள் ஆகும். மாவிளக்கு ஏற்றுதல் நன்மை தரும் மந்திர சமயச் சடங்கு ஆகும்.

வைணவத்தில் மாவிளக்கு

சைவ சமயத்தில் மாவிளக்கேற்றும் மரபு கிடையாது. ஆனால் வைணவ சமயத்தில் உள்ளது. ஏனெனில் பௌத்தக் கோவில்கள் வைணவக் கோவில்களாக மாற்றப்பட்டபோது அங்கு நரசிம்மரை அறவாழியின் (தர்மச் சக்ரா) பின்புறம் பிரதிஷ்டை செய்தனர். சில பௌத்த வழிபாட்டு மரபுகளையும் அவர்கள் தொடர்ந்து பின்பற்றினர். அவற்றுள் ஒன்று மாவிளக்கு ஏற்றுதல் ஆகும்.

வைணவப் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான பொய்கையாழ்வார்

வையம் தகளியா வார் கடலே நெய்யாக/
வெய்ய கதிரோன் விளக்காக செய்யச்/
சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொல் மாலை/
இடராழி நீங்குகவே என்று'

என்ற பாசுரத்தில் பெருமாளுக்குப் பூமியை அகலாக்கி கடலை நெய்யாக்கி கதிரவனை திருவிளக்காக்கினர்.

பூதத்தாழ்வாரும்

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தை இடுதிரியா நன்புருகி

ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு

ஞானத்தமிழ் புரிந்த நான்'

என்று தன்னுடைய அன்பை அகலாகவும் ஆர்வத்தை நெய்யாகவும் தன் சிந்தையை திரியாகவும் கொண்டு ஞான விளக்கேற்றினார். ஆக தன்னையே விளக்காக்கி இறைவனுக்கு அர்ப்பணிக்கும் வழிபாட்டு முறை பௌத்தத்திலிருந்து தோன்றி சில வைணவக் கோவில்களில் தொடர்கின்றது.

விசுவாமித்திரர்

பௌத்த சமயத்தைத் தோற்றுவித்த கௌதம புத்தரைப் பெருமாளின் அவதாரங்களில் ஒன்றாகச் சேர்த்துக்கொண்ட ஏழாம் எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய புராணங்கள் விசுவாமித்திரர் பிரம்ம ரிஷியான கதையை விளக்குகின்றது. வசிட்டரைப் போல் தானும் பிரம்மரிஷி ஆக வேண்டும் என்று ஆசைப்பட்ட இவர் தன் உடலையே விளக்காக இறைவனுக்கு ஏற்றுகின்றார். ஐந்து முக தீபத்தைப் போல இவர் தலையும் இரு கால்களும் கைகளும் எரிந்தன. திரிகள் போல ஐந்து உறுப்புக்களும் எரிந்தன. இக் கதை பௌத்த சமயத் தீக்குளித்தல் மற்றும் மா விளக்கேற்றுதல் ஆகியவற்றின் புராணக் கதை வடிவமாகும்.

நெருப்புச் சடங்குகள்

வேளாண் குடிகள் வாழ்ந்த மருத நிலம் செழித்திருந்த தென்னகத்தில் நெருப்புச் சடங்குகள் மிகுதியாக இருந்தன. நீர் சடங்குகள் வடக்கே இருப்பது போல் இங்கு இல்லை. சங்க இலக்கிய காலத்தில் இருந்தே விளக்கேற்றுதல் என்பது கார்த்திகை மாதத்தில் நடந்துள்ளது. அதே மாதத்தில் சொக்கப்பனை கொளுத்துதல் சுளுந்து சுற்றுதல் போன்றவையும் இருந்தன. ஐப்பசியின் அடை மழையும் கார்த்திகையின் கனமழையும் பெய்து ஓய்ந்த பிறகு வயல் வழிகளிலும் காட்டுப் பகுதிகளிலும் தோன்றும் பூச்சிகளில் இருந்து பயிர்களைப் பாதுகாக்கும் நோக்கில் பூச்சிக்கொல்லி பாதுகாப்பு வேளாண் முறைகளாக நெருப்பும் புகையும் இணைந்த வேளாண் சமூகச் சமயச் சடங்குகள் தோன்றின. பிற்காலத்தில் சொக்கப்பனை கொளுத்துதல் கார்த்திகை விளக்கேற்றுதல் ஆகியவை சைவ சமயச் சடங்குகளாக உருமாறியதற்குக் காரணம் சைவ சமயம் வழக்கில் புகுத்திய புராணக் கதைகளாகும்.

நிறைவு

நெருப்பு தொன்று தொட்டு தமிழர் வாழ்வியலுடன் இணைந்து இருந்ததால் பௌத்தர்கள் அறிமுகம் செய்து வைத்த மாவிளக்கு ஏற்றுதல் என்பதும் இறைவனுக்குத் தன்னை அர்ப்பணிக்கும் ஒரு போன்மைச் சடங்காகத் தொடர்கிறது

உதவிய நூல்கள்

1.The Golden Bough:A Study in magic and religion (II), Vol 1, Macmillan, UK, 1976

2. முனைவர் தே ஞானசேகரன், மந்திரம் சடங்குகள் சமயம், பார்த்திபன் பதிப்பகம் திருச்சி 2000 .

3. முனைவர் தேமொழி, தமிழகத்தில் பௌத்தம், தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடு, சென்னை 2023.

4 மயிலை சீனி. வேங்கடசாமி பௌத்தமும் தமிழும், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், பாண்டி பஜார் சென்னை 17, 2010.

5. விக்கிப்பீடியாவில் பௌத்த சமயம் பற்றிய பல பதிவுகளும் கட்டுரைகளும்

6.https://theconversation.com/understanding-self-immolation-in-buddhism-after-wynn-bruces-earth-day-action-182007

7.முனைவர் பரமசிவன் தொ. அழகர் கோவில், பதிப்புத்துறை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை. 1989

8.தொ.பரமசிவன், அறியப்படாத தமிழகம், நற்றிணை பதிப்பகம் சென்னை, 2024.

9.முனைவர் செ. ராஜேஸ்வரி, சாமிகளின் சரித்திரம் (வரலாறும் வழிபாடும்), சந்திரோதயம் பதிப்பகம், மதுரை, 2024.

10.முனைவர் செ. ராஜேஸ்வரி, மலைக்கோவில்கள் - சிவன் & விஷ்ணு, சந்திரோதயம் பதிப்பகம், மதுரை, 2025.

தீராத உயிர்ப்பு

இனி உன் சந்தோஷம்
நான் இல்லாத ஒரு பரப்பில்
அதிதீவிரமாகப் படரட்டும்.

இவ்வளவு காலமாய்
உன் நிழல் கவிழ்ந்த பாதைகளில்
தொலைந்து போன எனது காலடிகளை
இப்போதுதான் ஒவ்வொன்றாக
மீட்கத் தொடங்குகிறேன்.

நீ இல்லாத இந்த வெற்றிடம்
என்னை அச்சுறுத்தவில்லை.
மாறாக, ஒரு பெரும் மழையைப் போல
என்னுள் பரவிக்கிடந்த
உன் நினைவுகளின் கறைகளை
மெல்ல மெல்லக் கழுவுகிறது.
தூரத்தில் சுடர்விடும் உன் வெளிச்சம்
இனி என் அறையைத் தீண்டப்போவதில்லை.
ஆனால், என் இருளுக்குள்
நானே ஒரு தீக்குச்சியைக் கீறுகிறேன்.
சுயத்தின் அந்தச் சிறு சுடர்
உன் பிரம்மாண்டமான சூரியன்களை விட
எனக்கு இப்போது வலிமையானது.

வரைபடத்திலிருந்து நான் வெளியேறியது
உனக்கான வழிவிடுதல் மட்டுமல்ல,
எனக்கான ஒரு புதிய தேசத்தை
நானே கண்டடைதலும்தான்.
சிதைக்கப்பட்ட கனவுகளின் சாம்பலிலிருந்து
இப்போது நான் மெல்ல எழுகிறேன்.
எனது கால்கள்
இனி எந்தப் பயணத்திற்கும்
யாரையும் யாசிப்பதில்லை.
தன் சிறகுகளைத் தானே தைத்துக்கொள்ளும்
ஒரு பறவையைப் போல,
தன்னந்தனியாக,
என் முழுமையை நோக்கி
நான் நடக்கத் தொடங்குகிறேன்.
எல்லா இழப்புகளுக்குப் பிறகும்
என்னுள் எஞ்சி நிற்பது துயரம் மட்டுமல்ல,
யாராலும் அழிக்க முடியாத
ஒரு தீராத உயிர்ப்பும் கூட.

அர்ஷா

ராமனின் உடன்பிறந்த சகோதரி சாந்தா

இரா. சைலஜா சக்தி
சென்னை

தசரதனுக்கு ராமன், லட்சுமணன், பரதன், சத்ருகனன் என நான்கு மகன்கள் இருந்தனர் என்பது உலகம் அறிந்த செய்தி. ஆனால் அவர்களுக்கு முன்பே தசரதனுக்கும், கோசலைக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்ததாக ராமாயணத்தின் பல பதிப்புகள் தெரிவிக்கின்றன. இது உலகம் அறிந்திடாத செய்தி. இக்குழந்தையின் பெயர் சாந்தா. இவள் ராம, லட்சுமண சகோதரர்களுக்கு மூத்த சகோதரி ஆவாள்.

சாந்தாவைப் பற்றி மூன்று விதமான கதைகள் சொல்லப்படுகின்றன.

முதல் கதை:-

தசரதனும், அங்கதேச மன்னர் ரோமபாதரும் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். கோசலையின் உடன்பிறந்த சகோதரி வர்ஷினி, அங்க தேசத்தின் மன்னர் ரோமபாதரை மணந்திருந்தார். இவர்கள் நீண்ட காலமாக குழந்தையின்றி வருந்தினர். அவர்களின் வேதனையைப் போக்க தசரதனும், கோசலையும் தங்கள் மகள் சாந்தாவை ரோமபாதருக்கு தத்துக் கொடுத்தனர். இதனால் அயோத்தி இளவரசியான சாந்தா, அங்க தேசத்தின் இளவரசியாக வளர்ந்தாள்.

அங்க தேசத்தில் மழையின்றி கடும் வறட்சி ஏற்பட்டது. இந்த வறட்சியைப் போக்க என்ன செய்வது என்று ரோமபாதர் தன் மந்திரிகளுடன் கலந்து ஆலோசித்தார். அப்போது மிகுந்த தவசீலரான ரிஷ்யசிருங்கர் என்ற முனிவரின் பாதம்பட்டால் அங்க தேசத்தில் மழை பொழியும் என்று மந்திரிகள் கூறினர்.

ஆனால் ரிஷ்யசிருங்கரை அழைத்து வருவது அவ்வளவு சுலபம் அல்ல. அதற்குக் காரணம் ரிஷ்யசிருங்கர் அவரது தந்தை விபாண்டகரால் வெளி உலகமே தெரியாமல் வளர்க்கப்பட்டவர். காஷ்யபரின் மகனான விபாண்டக முனிவரின் தவ வலிமையைக் கண்ட இந்திரன், அவரது தவத்தைக் கலைக்க தேவலோக அப்சரஸான ஊர்வசியை அனுப்பி வைத்தான். ஊர்வசியின் அழகிலும், நடனத்திலும் மயங்கிய விபாண்டகர் தன் தவ வாழ்க்கையை மறந்தார். இவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையின் நெற்றியில் ஒரு கொம்பு இருந்தது. குழந்தையை விபாண்டகரிடம் கொடுத்துவிட்டு ஊர்வசி தேவலோகத்திற்கு சென்றுவிட்டாள். தனக்கு துரோகம் இழைக்கப்பட்டதை உணர்ந்த விபாண்டக முனிவர் தன் மகனை உலகியல் தொடர்புகள் இல்லாமல், குறிப்பாக பெண்களையே பார்க்காமல் வளர்க்க முடிவு செய்தார்.

''சிருங்கி'' என்றால் ''கொம்புடைய'' என்று பொருள். கொம்புடன் பிறந்த குழந்தைக்கு ''ரிஷ்யசிருங்கர்'' என்று பெயரிட்டு மேற்குத் தொடர்ச்சி மலையில் துங்கபத்ரா நதிக்கரையின் அருகே உள்ள என்ற வனத்தில் வளர்த்து வந்தார்.

ஒரு அசாதாரணமான சூழ்நிலையில் விபாண்டகரின் குழந்தை ஒரு மானின் வயிற்றில் இருந்து கொம்புடன் பிறந்ததாகவும் கூறப்படுகிறது. விபாண்டகரால் உலகியல் நடவடிக்கைகளில் இருந்து விலக்கி தனிமைப்படுத்தி வளர்க்கப்பட்ட ரிஷ்யசிருங்கர் தன் தந்தையைத் தவிர வேறு எந்த மனிதரையும் கண்டதில்லை. தினமும் குன்றின் மேலிருந்த சிவலிங்கத்தை வணங்கி பூஜை செய்து தவசீலராக வாழ்ந்தார். ரிஷ்யசிருங்கர் தவம் செய்த இடம் அவர் பெயரால் ''சிருங்ககிரி'' என்று அழைக்கப்பட்டது. கர்நாடக மாநிலத்தில் உள்ள இந்த இடம் தற்போது ''சிருங்கேரி'' என்று அழைக்கப்படுகிறது.

அங்க தேசத்தின் அரசி வர்ஷினி ரிஷ்யசிருங்கரை அழைத்து வரும் பணியை அரண்மனை ஆடல் மகளிரிடம் ஒப்படைத்தாள். அவர்கள் சிருங்ககிரியின் எல்லையில் முகாமிட்டு தங்கினர். விபாண்டகர் இல்லாத நேரத்தில் ரிஷ்யசிருங்கரை சந்தித்தனர். அதுவரை பெண்களையே பார்த்திராத ரிஷ்யசிருங்கர் ஆடல்மகளிரை தவசீலிகள் என்று நினைத்து வணங்கினார். ஆனால் அப்பெண்கள் தங்களின் ஆடல், பாடல் மூலம் அவரின் மனதைக் கவர்ந்தனர். தொடர்ந்து விபாண்டகர் இல்லாத நேரத்தில் ரிஷ்யசிருங்கரை தினமும் ரகசியமாக சந்தித்து வந்தனர். இப்படியே சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் வெகுதொலைவில் இருக்கும் ஒரு இடத்திற்கு விபாண்டகர் செல்வதைக் கண்டனர். அவர் திரும்பி வர சில நாட்கள் ஆகும் என்பதால் அதற்குள் ரிஷ்யசிருங்கரை அங்கதேசத்திற்குள் அழைத்துச் செல்ல திட்டம் தீட்டினர்.

ரிஷ்யசிருங்கர் முன் சென்று நடனமாடத் தொடங்கினர். அவர்களின் நடனத்தில் மனதைப் பறிகொடுத்த ரிஷ்யசிருங்கர் அப்பெண்களைப் பின்தொடர்ந்தார். அவர்கள்

நடனமாடிக்கொண்டே அங்க தேசத்தை வந்தடைந்தனர். அவர்களின் பின்னால் வந்த ரிஷ்யசிருங்கர் அங்க தேசத்தின் எல்லையில் கால் வைத்தார். அங்கதேச மண்ணில் அவர் பாதம் பட்டதும் வானம் மழையைக் கொட்டித் தீர்த்தது. எல்லையில் காத்திருந்த அரசர் ரோமபாதர், ரிஷ்யசிருங்கரை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். ரிஷ்யசிருங்கரின் தவ வலிமையைக் கண்டு வியந்து தன் நாடு எப்போதும் செழிப்பாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில், தன் வளர்ப்பு மகள் சாந்தாவை அவருக்கு மணமுடித்துக் கொடுத்து அவரை தன்னுடனேயே வைத்துக் கொண்டார்.

ரிஷ்யசிருங்கரின் தவ வலிமையைப் பற்றிக் கேள்விப்பட்ட தசரதன் புத்திரகாமேஷ்டி யாகத்தை நடத்தித் தருமாறு அவருக்கு அழைப்பு விடுத்தார். தன் மனைவி சாந்தாவுடன் அயோத்திக்கு வந்த ரிஷ்யசிருங்கர், அயோத்தியின் கிழக்கே சுமார் 39 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மகௌடா தாம் என்ற இடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கு புத்திரகாமேஷ்டி யாகத்தை சிறப்பாக நடத்தினார். யாகத்தின் ஒரு பகுதியாக இங்குள்ள சக்தி தேவியை சாந்தா 45 நாட்கள் வழிபட்டாள் என்று கூறப்படுகிறது.

யாகத்தை நிகழ்த்த வரும்போது எளிமையான உடையில் ரிஷி பத்தினியாக இருந்த சாந்தாவை தசரதனுக்கும், கோசலைக்கும் அடையாளம் தெரியவில்லை. சாந்தா உண்மையைக் கூறியதும் அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். ராமனும் அவன் சகோதரர்களும் சிறுவயதில் சாந்தாவைப் பற்றி அறிந்திருக்கவில்லை. வளர்ந்து குருகுலக் கல்வி முடித்த பின்னரே தங்களின் மூத்த சகோதரியைப் பற்றி அறிந்து கொண்டனர் என்றும் கூறப்படுகிறது.

இரண்டாவது கதை:-

தசரதன் சாந்தாவை எவருக்கும் தத்துக் கொடுக்கவில்லை. அவள் தசரதனின் மகளாக, அயோத்தியின் இளவரசியாகவே வளர்ந்தாள். தசரதன் தனக்கு ஆண்வாரிசு பிறக்க வேண்டும் என்பதற்காக புத்திரகாமேஷ்டி யாகத்தை நடத்த ரிஷ்யசிருங்கரை அழைத்தார். பிரம்மச்சாரியாக இருந்த ரிஷ்யசிருங்கர் புத்திரகாமேஷ்டி யாகத்தை நடத்த இயலாது என்பதால் தசரதன் தன் மகள் சாந்தாவை அவருக்கு மணமுடித்துக் கொடுத்தார். அதன் பிறகு ரிஷ்யசிருங்கர் யாகத்தை நடத்தினார்.

புத்திரகாமேஷ்டி யாகத்தின் பலனாக தசரதனுக்கு ராமன், லட்சுமணன், பரதன், சத்ருகனன் என நான்கு ஆண் வாரிசுகள் பிறந்தனர். தந்தைக்கு ஆண் வாரிசு வேண்டும் என்பதால் ரிஷ்யசிங்கரை மணந்த சாந்தாவின் தியாகத்தை அறிந்த ராமனும் அவன் சகோதரர்களும் தங்கள் சகோதரியிடம் மிகப்பெரும் மரியாதை கொண்டிருந்தனர். கணவருடன் சேர்ந்து யாகத்தை முன்னின்று நடத்தி தங்களின் பிறப்பிற்குக் காரணமாக விளங்கிய தன் சகோதரி சாந்தாவிடம் ராமன் மிகுந்த அன்பும், பக்தியும் கொண்டிருந்தான். ராமன் அயோத்தியை ஆட்சி செய்யும்போது இக்கட்டான தருணங்களில் சாந்தாவிடம் ஆலோசனைகள் கேட்டதாகக் கூறப்படுகிறது. சீதையை ராமன் காட்டிற்கு அனுப்பியதைக் கேள்விப்பட்ட சாந்தா, மிகுந்த கோபத்துடன் ராமனுடன் வாதிட்டதாக தெலுங்கு நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.

புத்திரகாமேஷ்டி யாகம் முடிந்ததும் ரிஷ்யசிருங்கர் சாந்தாவைத் தன்னுடன் அழைத்தபோது, சாந்தா அவருடன் செல்ல மறுத்து பிண்டி எனப்படும் தெய்வ வடிவத்தைக் குறிக்கும் கல் உருவமாக மாறி மகௌடாதாமில் தங்கிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

மூன்றாவது கதை:-

சிருங்கிரிக்குத் திரும்பி வந்த விபாண்டக முனிவர் தன் ஞானதிருஷ்டியின் மூலம் நடந்ததை அறிந்தார். மிகுந்த கோபத்துடன் அங்கதேசத்தை நோக்கிச் சென்றார். இதை அறிந்த ரோமபாதர் தன் நண்பர் தசரதனிடம் உதவி கேட்டார். தசரதன் தன் மகள் சாந்தாவை ரோமபாதருக்குத் தத்துக் கொடுத்தார். உடனடியாக ரோமபாதர் தன் தத்து மகள் சாந்தாவை ரிஷ்யசிங்கருக்கு மணமுடித்து வைத்தார். விபாண்டகர் அங்கதேசத்திற்குள் நுழையும்போது ரோமபாதரின் திட்டப்படி மக்களில் சிலர் "அங்கதேச மன்னர் ரிஷ்யசிங்கர் வாழ்க" என்று கோஷமிட்டனர். ரிஷ்யசிருங்கர் அங்கதேச இளவரசியை மணந்ததை அறிந்த விபாண்டகர் தன் கோபத்தை விடுத்து மணமக்களை ஆசிர்வதித்தார். விபாண்டகரின் கோபத்தைத் தணிக்கவே அயோத்தி இளவரசியான சாந்தா, அவசர அவசரமாக ரோமபாதருக்கு தத்துக் கொடுக்கப்பட்டாள் என்ற கதையும் சொல்லப்படுகிறது.

இந்த மூன்று கதைகளில் எது உண்மையாக இருப்பினும் சாந்தா என்பவள் ராமாயணத்தின் முக்கியமான பெண் கதாபாத்திரம் ஆவாள். இவள் ராமரின் பிறப்பிற்குக் காரணமான புத்திரகாமேஷ்டி யாகத்தை நடத்திய ரிஷ்யசிருங்க முனிவரின் மனைவி என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. ரிஷ்யசிருங்கர், சாந்தா தம்பதிக்கு சதுராந்தகன் என்றொரு மகன் உண்டு. இவனே பிற்காலத்தில் ரோமபாதரின் வாரிசாக இருந்து அங்க தேசத்தை ஆண்டான்.

வால்மீகி ராமாயணத்தைத் தவிர, பெரும்பாலான ராமாயணப் பதிப்புகள் சாந்தாவை தசரசனுக்கும், கோசலைக்கும் பிறந்த மகளாகவே குறிப்பிடுகின்றன. ராமனின் சகோதரியான சாந்தா மிகவும் அழகானவள். உயர்கல்வி அறிவு பெற்றிருந்தாள். வேதங்கள், கலைகள், கைவினைகள் மற்றும் நுண்கலைகளில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தாள். மேலும் ஞானம் மற்றும் பக்தியின் வடிவமாக சாந்தா போற்றப்படுகிறாள். கர்நாடக மாநிலத்தில் உள்ள சிருங்கேரி நகரிலும், இமாச்சலப் பிரதேசத்தில் குலு மாவட்டத்திலும் ரிஷ்யசிருங்கருக்கு கோவில்கள் உள்ளன. இங்கு கருவறையில் ரிஷ்யசிருங்கருக்கு அருகில் மாதா சாந்தாவின் சிலையும் உள்ளது.

உத்தரபிரதேச மாநிலத்தில் "சிருங்கி நாரி தாம்" என்ற இடத்தில் உள்ள கோவிலில் ரிஷ்யசிருங்கரும், சாந்தாவும் சிலை வடிவில் அருள்பாலிக்கின்றனர். இங்கு ஆடி மாதத்தின் கடைசி செவ்வாய்க்கிழமை அன்று "புத்வா மங்கல்" என்ற திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. குழந்தை பாக்கியம் மற்றும் திருமணத்தில் தடை உள்ளவர்கள் இங்கு வந்து வழிபட்டால் அவர்களுக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. உத்தரபிரதேசத்தின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் மக்கள் இக்கோவிலுக்கு வந்து வழிபடுகிறார்கள். மேலும் பீகார், ஹரியானா, டெல்லி மற்றும் ராஜஸ்தான் மாநில மக்களும் இங்கு வந்து வழிபடுகிறார்கள். இங்கு தேவிக்கு பூரியும், அல்வாவும் பிரசாதமாக படைக்கப்படுகின்றன.

பீகார் மாநிலத்தில் சனன், கஜ்ரா என்ற இரு மலைகளுக்கு நடுவே "சிருங்கி ரிஷி தாம்" என்ற புனிதத் தலம் உள்ளது. இங்குள்ள சிவன் கோவில் ராமனின் பிறப்பிற்கு முன்பே ரிஷ்யசிங்கரால் உருவாக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. தசரசன் தன் நான்கு புதல்வர்களுக்கு ஒரு வயது ஆனதும் இங்கு வந்து முதல் மொட்டை அடித்ததாக சொல்லப்படுகிறது. இன்றும் "முண்டன சம்ஸ்காரம்" என்ற குழந்தைகளுக்கு முதல் மொட்டை போடும் சடங்கைச் செய்ய இக்கோவிலுக்கு பெருமளவில் மக்கள் திரண்டு வருகின்றனர்.

வட இந்தியப் பகுதிகளில் வசிக்கும் "செங்கர் ராஜபுத்திரர்கள்" தங்களை ரிஷ்யசிருங்கர், சாந்தா தம்பதியினரின் நேரடி வாரிசுகள் என்று கூறுகின்றனர். ரிஷியின் வழிவந்தவர்கள் என்பதால் இவர்கள் "ரிஷிவன்ஷிகள்" என்று அழைக்கப்படுகின்றனர்.

வாரிசு அரசியல் காரணமாக சாந்தாவின் பிறப்பு ரகசியமாக வைக்கப்பட்டது என்ற கருத்தும் நிலவுகிறது. காவிய நாயகனான ராமனுக்கு ஒரு சகோதரி இருந்ததாக இதுவரை உலகம் அறியவில்லை. ராமனின் புகழ்பாடும் காவியம், அவன் உடன்பிறந்த சகோதரியைப் பற்றி பேசாமல் இருந்ததன் காரணம் புரியவில்லை. சாந்தாவிற்கென பிரத்தியேகமாக கோவில், பூஜை, வழிபாடு அனைத்தும் உருவாக்கப்பட்டு கடவுளரில் ஒருவராய் வணங்கப்பட்டாலும் அவள் இந்த அகிலத்தால் அறியப்படாதவள். மன்னனின் மகளாகப் பிறந்து, அரண்மனையில் இளவரசியாகவே வளர்ந்தாலும் அவள் அரசியல் சதுரங்கத்தில் ஒரு பகடைக்காயாகவே பயன்படுத்தப்பட்டு இருக்கிறாள். சாந்தாவைப் பற்றிய உண்மை தெரிய வரும்போது வேதனையே விஞ்சி நிற்கிறது.

இருவர் (சிறுகதை)



சத்யபிரபா
மதுரை

ராணி விசிட்டர் என்ற சத்தம் கேட்டு இரண்டாவது மாடியில் ஹாஸ்டல் ரூமில் இருந்து ராணி மடமடவென்று இறங்கி ஓடிப்போனாள். அவள் அப்பாவும் சித்தியும் நின்று கொண்டிருந்தனர். அப்பா இவளை அருகில் அழைத்து தோளில் கை வைத்து அன்பாக நலம் விசாரித்தார். பாக்கெட்டில் இருந்து ரூபாய் எடுத்துக் கொடுத்தார். சித்தி இவர்கள் இருவர் முகத்தையும் பார்த்துக் கொண்டே இருந்தாள். ஒரு ஐந்து நிமிடம் அவள் அப்பா பேசி முடித்ததும் சித்தி ' உங்க அப்பா ரொம்ப கஷ்டப்பட்டு உன்னைப் படிக்க

வைக்கிறாங்க. நல்லா படி' என்று சலிப்போடு சொன்னாள். அப்பா அவளைத் திரும்பிப் பார்த்த முறைத்தார். பின்பு ராணியின் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு வர்றேன்மா என்று சொல்லிவிட்டு கிளம்பி விட்டார்.

சட் என்று அந்த இடம் இருள் சூழ்ந்தது. இருட்டில் நடப்பது போலவே அவள் நடந்து தன் அறைக்கு வந்து அப்படியே கவிழ்ந்து படுத்து விட்டாள். சற்று நேரத்தில் அந்த அறைக்குள் நுழைந்த ராதா அவள் முதுகு பக்கமாக குனிந்து அவள் கழுத்தில் முத்தமிட்டு

'என்ன ஆச்சு'

'அப்பா'

ராதா ராணியின் முதுகு பக்கமாகவே கட்டிப்பிடித்து அணைத்துத் தட்டிக் கொடுத்து தூங்க வைத்தாள்.

வெகு நேரம் ராணியைக் கட்டிப்பிடித்தபடியே அங்கு படுத்திருந்தாள் ராதா. இருவரும் இரண்டு ஆண்டுகளாக இப்படித்தான் இணைந்தும் பிணைந்தும் இருக்கிறார்கள்.

ராதாவின் குடும்பம் மிகப்பெரிய குடும்பம். அவள் குடும்பத்தில் ஆண்கள் கூட பெண்களைப் போல அன்பாகவும் அமைதியாகவும் கனிவாகவும் தான் பேசுவார்கள். ஒரு சேலையை அவர்களுக்குக் கட்டி விட்டால் அவர்களின் மீசை இல்லாத மழிக்கப்பட்ட

முகங்கள் அப்படியே பெண்களைப் போலவே காட்சி தரும். அவ்வளவு அன்பான குடும்பம். கூட்டுக் குடும்பம். குழந்தைகளோடு சேர்த்து 16 பேர்.

ராதாவுக்கோ ஒட்டு கம்பீரமான ஆணைப் போல் இருக்கணும்னு ஆசை. அதனால் தலை முடியை பாப் செய்துகொண்டு எப்போதும் பேண்ட் ஷர்ட் போட்டு இருப்பாள். இவள் ஒரு லேடிஸ் ஜெம்மில் வேலை பார்த்ததால் அந்த டிரஸ் அவளுக்குப் பொருத்தமாக இருந்தது.

ராதாவின் குடும்பத்தாரும் அவளிடம் இதெல்லாம் கல்யாணம் பேசுகின்ற வரைக்கும் தான். கல்யாணம் பேசியதும் சராசரிப் பெண்ணைப் போல் தலைமுடி வளர்த்து சுடிதார் துப்பட்டா போட வேண்டும் என்று சொல்லி விட்டார்கள். சரி என்று சொல்லியபடி இவள் சென்னையில் இப்படி இருந்து வந்தாள்.

ராணிக்கு அம்மா சிறு வயதிலேயே இறந்து விட்டார்கள். அவள் அப்பா இவளை ஹாஸ்டலில் சேர்த்து நல்ல விதமாக படிக்க வைத்துக் கொண்டிருந்தார். சித்தி கொடுமை கிடையாது. ஆனாலும் அனாதை போன்ற ஒரு தவிப்பு இருந்தது. ராதா அந்த தவிப்பை நீக்கினாள்.

அன்று மாலை இருவரும் வெளியே கிளம்பினர். ராதாவின் பைக்கில் ராணி அமர்ந்தாள். பைக் நிறுத்தும் இடத்தில் ஒரு மோதல். பைக்கை வெளியே எடுத்தவனைப் பார்த்து ராதா கோபத்தில் ஒரு கெட்ட வார்த்தை சொல்லித் திட்டினாள். அவன் வண்டியைப் பார்க் பண்ணிட்டு வந்து இவளை ஓங்கி கன்னத்தில் அறைந்து விட்டான்.

இருவரும் கத்திவிட்டனர்.

'பொம்பிளையா லட்சணமா இரு. மரியாதையா பேசு' என்றான்

கருப்பு டி ஷர்ட் போட்டு முறுக்கு மீசை வைத்து போலீஸ்காரன் போல இருந்தான். அவளை இதுவரை யாரும் அடித்தது கிடையாது. அன்பு ஒன்றை மட்டுமே பார்த்து வளர்ந்தவள் ராதா. அவள் பின்னால் உட்கார்ந்த ராணிக்கும் பெரிய அதிர்ச்சி.

இருவரும் சற்று நேரம் அப்படியே நின்று விட்டு பின்பு அந்த காம்ப்ளக்ஸ்க்குள் போய்விட்டார்கள்.

இந்த நிகழ்வுக்குப் பிறகு இருவரும் தங்கள் மனதுக்குள் அவனைப் பற்றிய சிந்தனையிலேயே இருந்தார்கள். ஹாஸ்டலுக்கு திரும்பி வந்ததும் ஒரு பெட்ஷீட்டை எடுத்து கீழே விரித்து ராணி தனியாகப் படுத்துக் கொண்டாள். ராதா கட்டிலில் படுத்தபடி உறங்கி விட்டாள்.

இதன் பிறகு இருவரது வாழ்க்கையிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டது. ஆனால் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளவில்லை. ஒருவரோடு ஒருவர் இணைந்து இருக்கவும் இல்லை.

சில மாதங்கள் கழித்து ராதா தன் பெரியம்மா மகள் திருமணத்திற்காக சொந்த ஊருக்குப் போனாள். அந்தத் திருமண கலகலப்பில் வீட்டில் பலரும் பலரது திருமணங்களைப் பற்றி பேசிக்கொண்டே இருந்தார்கள் அவளுக்கு மனதில் ஒரு கிளுகிளுப்பும் உற்சாகமும் தோன்றியது. திருமணம் பற்றி இவர்கள் பேசுகின்ற போதெல்லாம் அவளை அடித்த அந்த மீசைக்காரனின் நினைவு தான் வந்தது.

'இப்படி ஒருவன் முன்பின் தெரியாத பெண்ணை அடிப்பானா? என்ன துணிச்சல் இருந்தால் இப்படி அடித்திருப்பான்? நான் என்ன சொல்லிவிட்டேன்? ஒரு கெட்ட வார்த்தை சொல்லிவிட்டேன். அதற்கு இப்படியா அடிப்பான் ? பொம்பள புள்ளையா லட்சணமாயிரு என்று சொன்னானே' என்று பலவாறாக அவனைப் பற்றிய சிந்தனையிலேயே இருந்தாள்.

மறுநாள் அவனை அந்தக் கல்யாண வீட்டில் பார்த்து விட்டாள். ஒரே அதிர்ச்சி. அவன் தனக்கு உறவா என்று கூட தெரியவில்லை. அவனோடு ஒரு பெண் இருந்தாள். அவள் அவனது தோளைத் தொட்ட படியே நின்று கொண்டிருந்தாள்.

திருமணம் முடிந்த மறுநாள் இவர்களுடைய குடும்பத்தினர் அவர்களைப் பற்றிய பேசிக் கொண்டிருந்தார்கள்.

இவளுக்கு அவன் யார் அந்த பெண் அவனது மனைவியா? அவன் நமக்கு உறவா? என்று கேட்க ஆசை தான். ஆனால் எப்படி எப்படி கேட்பது? பேசுகின்றவர்கள் பெரியவர்களாக இருக்கிறார்களே என்ற அச்சமும் தயக்கமும் ஏற்பட்டது.

பூ தொடுக்கும் தன் அத்தையின் முன் உட்கார்ந்து இரண்டு இரண்டு மல்லிகை மொட்டுக்களாக எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். அப்போது சித்தி பெண் 'அந்தப் பெண் மாலினியை நம் அண்ணனுக்கு கட்டி வைக்கலாம். அப்படியே ராதாவை சேகருக்குக் கட்டி வைத்து விடலாம்' என்றாள்.

'ஓ அவன் பேர் சேகரா?'

இவளுக்கும் ஆசை தான் அவனை திருமணம் செய்து கொள்ள; ஆனால் அவளுக்கு நடப்பது எல்லாம் கனவு போல் தோன்றியது

இரண்டு நாட்கள் கழித்து சென்னைக்கு வந்து விட்டாள் இவளைக் கண்டதும் ராணி 'உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லனும். இந்த ஒரு வாரத்தில் நான் தினமும் சேகரைப் போய்ப் பார்த்தேன். நாங்க லவ் பண்றோம். நான் அப்பாகிட்ட சொல்லிட்டேன். அப்பா மட்டும் அடுத்த வாரம் வர்றாங்க' என்றாள்

ராதாவின் முகம் சட் என்று மாறியது 'எந்த சேகர்? யார் சேகர்? யாரைப் பத்தி பேசுற?' என்று முகம் சுண்டிய படி கேட்டாள்.

' அன்னைக்கு உன்னை அடிச்சாரே அவர்தான்'.

'என்னை அடிச்சவன் உன் லவ்வரா? ராணி,

'ஐயோ ராதா நான் எவ்வளவோ தடவை கேட்டிட்டேன். நான் அடிக்கவே இல்லைங்கன்னு சொல்றாரு டி'

'அடிக்கவே இல்லைன்னு பொய் சொல்றவனை நீ லவ் பண்ணி கல்யாணம் பண்ணிக்க போறியா'

ராணியின் காதலும் கல்யாணமும் ராதாவுக்கு சற்று எரிச்சலாகவும் கோபமாகவும் இருந்தது. ஆனால் தனக்கும் அவனைத் தானே அன்று நம் வீட்டில் கல்யாணம் செய்யலாம் என்றார்கள். ஒரே குழப்பம்

ராதா சேகரைக் கல்யாண வீட்டில் பார்த்ததைப் பற்றி ராணியிடம் எதுவும் சொல்லவில்லை.

‘ராதா, இன்னைக்கு ஈவினிங் வா. நாம அன்னைக்கு போனோமே, அதே காம்ப்ளக்ஸ்ல வச்சு தான் அவரை நான் பார்த்தேன். அங்கேயே போவோம். அவர் அங்க என்னைப் பார்க்க வருவார். உனக்கு நான் இன்ட்ரடியூஸ் பண்ணி வைக்கிறேன் வா’. என்றாள்

இவளுக்கு ஆச்சரியமாக இருந்தது ‘அவனைத்தானே நாம் கல்யாண வீட்டில் அன்று பார்த்தோம். நமக்கு திருமணம் செய்வதாக வீட்டில் சொன்னார்களே. இங்கே இவளை எப்பிடி. பெரிய பொறுக்கியாக இருப்பானோ’ என்று நினைத்தபடி மாலையில் ராணியுடன் புறப்பட்டாள்.

ராதா இனி பைக்கை எடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டாள் இருவரும் ஒரு ‘கேப்’ பிடித்து போனார்கள்.

அவனைப் பார்த்ததும் ராணி உற்சாகமாக பேசிக்கொண்டே இருந்தாள். ராதாவுக்கு ஒரு ஹலோ மட்டும் சொன்னான். அன்றைக்கு அடித்ததற்கு ஒரு sorry கூடசொல்லல. அப்படி ஒரு சம்பவமே நடைபெறாதது போல் அவன் ராணியிடம் பேசிக் கொண்டிருந்தான்.

ராதா சிறிது நேரம் அங்கே உட்கார்ந்து விட்டு பின்பு ‘சரி கிளம்பலாம் வா’ என்று சொல்லி ராணியை அழைத்துக்கொண்டு வந்து விட்டாள். இவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. தன்னை அடிக்காதவன் மாதிரியே நடிக்கிறானே இவனை நம்பி ராணி மோசம் போகிறாளே என்று மனதுக்குள் ஒரு கவலை வந்தது. ஆனால் ராணியோ அவனைப் பற்றி சிலாகித்துக் கொண்டு வந்தாள்.

இரண்டு நாட்கள் கழித்து ஊரில் தன் பெரியம்மா மகள் கமலாவுக்கு போன் செய்தாள். போன் செய்து சும்மா பேசுவது போலப் பேசினாள் அப்போது அவள் 'எல்லாம் தெரிஞ்சுக்கிட்டு தானே பேசுற' என்று கேட்டாள். 'உனக்கும் சேகருக்கும் ஜாதகம் பார்த்தார்கள் பொருத்தம் சரியா இருக்குது அதனால கல்யாணம் பண்ணலாம்னு முடிவு பண்ணிட்டாங்க' என்றாள்.

ராதா 'யாரு சேகர்?' என்று கேட்டாள். 'அன்றைக்கு நாம் எல்லாம் பேசிக் கொண்டிருந்தோமே மாலினி. அவளோட அண்ணன். மாலினியை எங்க அண்ணனுக்கு தான் முடிக்க போறாங்க. சேகருக்கு உன்னை கல்யாணம் முடிக்க போறாங்க' என்றாள்.

இவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது இங்கே ராணியையும் திருமணம் செய்யப் போகிறான்

' சேகருக்கு தெரியுமா இந்த கல்யாணம் ஏற்பாடு' என்றாள்.

'ம்ம் நம்முடைய கல்யாண வீடியோவில் உன்னைப் பார்த்துவிட்டு சரின்னு சொல்லிட்டார்.'

ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தாள். உடனே கமலா 'இன்னொரு விஷயம் தெரியுமா ஒரே நாளில் அவுங்க இரண்டு பேருக்கும் கல்யாணம்' என்றாள்.

'அண்ணனுக்கும் எனக்கும்?' என்று ராதா சொன்னாள்.

'.இல்லை இல்லை நம்ம சேகருக்கும் சேகர் தம்பிக்கும்' என்றாள். 'அப்படியா அவருக்கு எங்க பொண்ணு பார்த்து இருக்காங்க?'

சேகரின் தம்பிக்கு கல்யாணமானால் எனக்கென்ன?' என்று மனதுக்குள் தோன்றியது. 'சேகர் ட்வின் பிரதர்ஸ் ராதா. அவங்க அண்ணே ராஜசேகர். இவரு சந்திரசேகர். ரெண்டு பேருக்கும் ஒரே நாளில் கல்யாணம். அவர் சென்னையில் தான் ஒரு பொண்ண லவ் பண்றாராம் ஆனால் வேற ஜாதியாம். அவுங்க அம்மா அப்பா சரின்னு சொல்லிட்டாங்க. அதனால ஒரே நாளில் மூன்று கல்யாணமும் நடக்கப் போகுது .மூணு மண்டபம் பிடிக்கிறாங்க . ஒரே கல்யாணப் பேச்சு தான். சீக்கிரம் வா' என்றாள்.

ராதா ராணியை அழைத்து 'கங்கிறாஜுலேஷன்ஸ்' என்றாள். 'நாம் இருவர். நம் சேகரும் இருவர்' என்றாள். ராணிக்கு ஒன்றும் புரியவில்லை. ராதாவுக்கோ சந்தோஷம் உடலெங்கும் ஜிவ் என்று பரவியது. சேகரைப் பார்க்கனும் எப்படி சம்மதம் சொன்னார் என்று கேட்கனும். அவரிடம் 'சாரி' சொல்லனும் என்று அவள் மனசு கிடந்து துள்ளியது.

இந்திய அரசியலின் முன்னோடி ஆனி மாஸ்கரீன்

லயன் MJ F வெங்கடேசன்,
நோபல் ஹாட்ஸ் அரிமா சங்கம்

இந்திய வரலாற்றில் முத்திரை பதித்த கிறிஸ்தவப் பெண்களில் ஆனி மாஸ்கரீன் மிக முக்கியமானவர். மன்னராட்சியை எதிர்த்த வீர மங்கை ஆனி மாஸ்கரீன் அவரது வாழ்வும் சாதனைகளும்:-

இந்தியாவின் அரசியல் மற்றும் சுதந்திரப் போராட்ட வரலாற்றில், குறிப்பாக தென் இந்தியாவின் திருவிதாங்கூர் (Travancore) பகுதியில் பெண்களின் அரசியல் எழுச்சிக்கான பெரும் அடையாளமாகத் திகழ்ந்தவர் ஆனி மாஸ்கரீன்.

அதிகார வர்க்கத்திற்கு எதிராக அச்சமின்றி குரல் கொடுத்த இவரை ஒரு 'Firebrand Leader' என்று வரலாறு இன்றும் போற்றுகிறது. காரணம் அச்சமின்றி அதிகார வர்க்கத்தை நேரடியாக எதிர்த்துப் பேசிய தீவிர அரசியல் தலைவர்.

1. பிறப்பு மற்றும் கல்வி:-

ஆனி மாஸ்கரீன் 1902 ஆம் ஆண்டு ஜூன் 6 ஆம் நாள் திருவிதாங்கூரில் (இன்றைய திருவனந்தபுரம்) ஒரு லத்தீன் கத்தோலிக்க கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தை கேப்ரியல் மாஸ்கரீன் ஒரு அரசு அலுவலர் ஆவார்.

பெண்களுக்கு உயர்கல்வி என்பதே அரிதான அக்காலத்தில், இவர் மகாராஜா கல்லூரியில் வரலாறு மற்றும் பொருளாதாரத்தில் இரட்டை முதுகலைப் பட்டம் *(Double M.A)* பெற்றார். அதன் பின்னர் சட்டம் பயின்று வழக்கறிஞராகவும் தகுதி பெற்றார். தனது வாழ்வின் தொடக்கத்தில் சில காலம் இலங்கையில் *(Ceylon)* ஆசிரியராகவும் பணியாற்றி தனது ஆளுமையை வளர்த்துக் கொண்டார்.

2. சுதந்திரப் போராட்டக் களத்தில் ஒரு புயல்:-

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் அரசியல் இயக்கங்களில் ஆனி மாஸ்கரீன் தீவிரமாகப் பங்கேற்றார்.

Travancore State Congress:-

இந்த அமைப்பில் இணைந்த முதல் பெண்களில் இவரும் ஒருவர்.

மன்னராட்சிக்கு எதிராக:-

திருவிதாங்கூர் சமஸ்தானம் இந்தியாவுடன் இணைய வேண்டும் என்பதற்காகப் போராடினார். அப்போதைய திவான் சர் சி.பி. ராமசுவாமி ஐயரின் அடக்குமுறைகளுக்கு எதிராகக் கடுமையாகப் பேசினார்.

சிறைவாசம்:-

இவரது அஞ்சாத போராட்ட குணத்திற்காக *1939* முதல் *1947* வரை பலமுறை சிறையில் அடைக்கப்பட்டார். போராட்டக் களத்தில் போலீஸ் தாக்குதல்கள் மற்றும் சொத்து இழப்புகளைச் சந்தித்தாலும் தனது கொள்கையில் உறுதியாக இருந்தார்.

3. இந்திய அரசியல் சாசன உருவாக்கத்தில் பங்கு:-

சுதந்திர இந்தியாவின் மிக உயரிய பணியான அரசியல் சாசனத்தை உருவாக்கும் பணியில் *(Constituent Assembly)* ஆனி மாஸ்கரீன் முக்கியப் பங்காற்றினார்.

அரசியல் சாசன நிர்ணய சபையில் இருந்த *299* உறுப்பினர்களில் *15* பெண்கள் மட்டுமே இருந்தனர். அந்தப் பெருமைக்குரிய *15* பெண்களில் ஆனி மாஸ்கரீனும் ஒருவர்.

*"*இந்து சட்டத் தொகுப்பு மசோதா*"* *(Hindu Code Bill)* போன்ற முக்கியக் குழுக்களில் உறுப்பினராக இருந்து பெண்களின் உரிமைகளுக்காக வாதிட்டார்.

4. அரசியல் சாதனைகள் மற்றும் முதன்மைகள்:-

ஆனி மாஸ்கரீன் தனது அரசியல் வாழ்வில் பல "முதல்" சாதனைகளைப் படைத்தவர்.

முதல் பெண் அமைச்சர்:-

1949-ல் அமைக்கப்பட்ட திருவிதாங்கூர் - கொச்சி மாநில அமைச்சரவையில் "சுகாதார மற்றும் மின்சக்தி" (Health & Power) துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். இதன் மூலம் சுதந்திரத்திற்குப் பிந்தைய ஆரம்பகால பெண் அமைச்சர்களில் ஒருவர் என்ற பெருமைக்கு சொந்தக்காரரானார்.

கேரளாவின் முதல் பெண் எம்.பி:-

1952-ல் நடைபெற்ற இந்தியாவின் முதல் பொதுத் தேர்தலில், திருவனந்தபுரம் தொகுதியிலிருந்து சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதன் மூலம் கேரளாவிலிருந்து நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் உறுப்பினர் என்ற வரலாற்றைப் படைத்தார்.

5. அரசியல் சிந்தனைகளும் சவால்களும்:-

இவர் ஒரு தீர்க்கதரிசியாக விளங்கினார். வலுவான மத்திய அரசு இருக்க வேண்டும் என்று விரும்பிய அதே வேளையில், "அதிகப்படியான அதிகாரக் குவிப்பு ஜனநாயகத்தைப் பாதிக்கும்" என்று எச்சரித்தார். இவரது போராட்டப் பாதையில் இவரது தீவிரமான அரசியல் நடைமுறைகள் குறித்து மகாத்மா காந்தியுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. இவரது தீவிரமான பேச்சு முறையைக் காந்தி சில நேரங்களில் விமர்சித்த போதிலும், சமூக நீதிக்கான தனது நிலைப்பாட்டில் ஆனி மாஸ்கரீன் பின்வாங்கவில்லை.

6. இறுதி நாட்கள் மற்றும் அங்கீகாரம்:-

1963 ஆம் ஆண்டு ஜூலை 19 ஆம் நாள் ஆனி மாஸ்கரீன் மறைந்தார். அவரது சேவையைப் போற்றும் வகையில் திருவனந்தபுரத்தில் "ஆனி மாஸ்கரீன் சதுக்கம்" (Annie Mascarene Square) அமைக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டு அப்போதைய குடியரசுத் துணைக் தலைவர் அமீத் அன்சாரி அவர்களால் இவருக்குச் சிலை திறந்து வைக்கப்பட்டது.

முடிவுரை:-

ஆனி மாஸ்கரீன் ஒரு சாதாரண அரசியல்வாதி அல்ல. அவர் இந்திய ஜனநாயகத்தின் அடித்தளத்தை அமைத்த சிற்பிகளில் ஒருவர். "திருவிதாங்கூர் அரசியல் புரட்சியின் பெண் குரல்" என்று அழைக்கப்படும் இவர், இன்று அரசியலில் ஈடுபடும் பல பெண்களுக்கு ஒரு உத்வேக சக்தியாகத் திகழ்கிறார். சுதந்திரப் போராட்ட வீராங்கனையாக, சாசன வடிவமைப்பாளராக, மக்கள் பிரதிநிதியாக அவர் ஆற்றிய பணிகள் இந்திய வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.

கோடி நீர் விரல்களாகி...

நாணத்தின் நானூறு வகையெடுத்து அதில்
நாலாயிரம்நிறங்களைப் பின்னிச்சேர்த்திருந்தாய்..
சித்தத்தின் சிதை தின்னும்
கொத்துக்காதலில் கோடிமுத்தம்
பிணைத்து வைத்திருந்தாய்..
பேராவல் சுரக்கும் பேதை மனத்தாளின் கவிதைக்கனாக்களில்
காலம் கடந்து வாழ்ந்திருந்தாய்...
உயிரின் இச்சை காலும் என்பு மச்சையில் பச்சை வண்ணம் பூசி விரல் பிடித்த உஷ்ணம், வேர்பிடித்து
பிரபஞ்சம் அதிரவைத்த வேளை தேவதைப்பாடலை தேனில் குழைத்துத் தீயாய் வளர்த்தாய்..
மிச்சமின்றி உறிஞ்சும் பூமியின் மழைக்காதலாய் அகணி துளைத்து ஆழ்ந்துறங்குஞ் சுவாசமானேன்...
நதிச்சுழியில் மீண்டும் குதித்தெழுந்து ஈரம் கசிந்துருகும்
அலைக்கோலமாய் அலைந்தளைந்து கோடி நீர் விரல்களாகி துழாவிக்கிடப்பேன்..
என் மணலாகிருதி நீ!!

DR ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

பெண்ணும் எழுத்தும்

கவிஞர். நளினி சுந்தரராஜன்
விஸ்கான்சின், வட அமெரிக்கா.

முன்னுரை

எழுத்து என்பது வெறும் வார்த்தைகளின் கோர்வை அல்ல; அது ஒரு ஆன்மாவின் விடுதலைப் பிரகடனம். வரலாற்றின் நீண்ட நெடிய பாதையில் சமூகக் கூண்டுகளுக்குள் அடைக்கப்பட்டிருந்த பெண்ணின் குரலுக்கு, இறக்கைகளைத் தந்தது எழுத்துக்களே.

சங்க காலம் மற்றும் பக்தி இலக்கிய காலங்களில் ஔவையார், வெள்ளிவீதியார், காக்கைப்பாடினியார், ஆண்டாள் போன்ற பல பெண்பாற்புலவர்கள் தங்களின் ஆளுமையை எழுத்தின் மூலம் நிலைநாட்டினர். பிற்காலத்தில் பெண்களின் உலகம் அடுப்படியோடு சுருக்கப்பட்டிருந்தது. கல்வி மறுக்கப்பட்ட சூழலில் போராடிப் போராடி தனக்கான எழுத்துச் சுதந்திரத்தை பெண்கள் பெற்றனர்.

இந்தியா மட்டுமன்று உலகெங்கும் பெண்கள் எழுதத் தொடங்கியபோது, அதுவரை ஆண்களால் கட்டமைக்கப்பட்ட "பெண்" என்ற பிம்பம் உடைக்கப்பட்டது. *Malala yousafzai* போன்ற புரட்சியாளர்கள் பெண் கல்வி மறுக்கப்பட்ட நாட்டில் உரிமைக்கு குரல் கொடுத்தனர். *maya angelou* போன்ற பெண் கவிஞர்கள் தனது சுயசரிதைகள் மூலமாக இனவெறிக்கு எதிராகவும், சமூக சமநீதி நிலவவும் எழுத்துப்பணி ஆற்றினர்

பெண் எழுத்தின் தனித்துவம்

பெண்களின் எழுத்துக்கள் ஆண்களின் எழுத்துக்களிலிருந்து சற்றே மாறுபட்டவை. அவை பெரும்பாலும் நுணுக்கமான உணர்வுகளைக் கையாள்பவை. பெண்களின் எழுத்துக்கள் 'அக உலகத்தை' *(Inner World)* ஆழமாகப் பிரதிபலிக்கின்றன

1. அக உணர்வுகள்: காதல், வலி, தாய்மை, தனிமை போன்ற உணர்வுகளைப் பெண்கள் எழுதும் விதம் மிகவும் ஆழமானது. பெண் உடல் குறித்த வலிகளையும், மாற்றங்களையும் வெளிப்படையாகப் பேசுவது நவீன பெண் எழுத்தின் தனித்தன்மை.

2. குடும்பச் சூழல்: சமையலறை, குழந்தைப் பராமரிப்பு, இல்லற நிர்வாகம் ஆகியவற்றிற்குப் பின்னால் ஒளிந்திருக்கும் உழைப்பையும், அதில் உள்ள அதிகாரப் போட்டிகளையும் பெண்கள் துணிச்சலாகப் பதிவு செய்கிறார்கள்.

3. போராட்டம்: பெண்கள் பெரும்பாலும் மென்மையான அதேசமயம் கூர்மையான படிமங்களைப் பயன்படுத்துகின்றனர். உணர்வுகளின் உச்சத்தைச் சொற்களால் கடத்துவதில் அவர்கள் வல்லவர்கள். வாசகர்களின் மனசாட்சியைத் தட்டி எழுப்பும் வல்லமை கொண்டது.

சவால்களும் தடைகளும்

பெண்கள் எழுத்துத் துறைக்குள் நுழைவது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. இன்றும் பல சவால்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர்.

• நேரமின்மை: குடும்பம், குழந்தை வளர்ப்பு, வேலை எனப் பல பொறுப்புகளுக்கு இடையே எழுதுவதற்கான நேரத்தை ஒதுக்குவது மிகப்பெரிய போராட்டமாகும். நள்ளிரவிலோ அல்லது அதிகாலையிலோ தனக்கான நேரத்தைத் திருடித் தான் ஒரு பெண் எழுத வேண்டியுள்ளது.

• விமர்சனங்கள்: ஒரு பெண் தன் மனதிற்குப் பட்டதை வெளிப்படையாக எழுதினால், சமூகம் அவளைத் தவறான uhகண்ணோட்டத்துடன் பார்க்கும் போக்கு இன்னும் மறைந்துவிடவில்லை. சமூகம் என்ன சொல்லுமோ என்ற அச்சத்தில், பல பெண் எழுத்தாளர்கள் தங்களுக்குத் தாங்களே 'சுய தணிக்கை' (Self-censorship) செய்துகொள்ளும் சூழல் உள்ளது.

• அங்கீகாரம்: இலக்கிய உலகில் ஆண்களுக்குக் கிடைக்கும் அதே அளவு அங்கீகாரமும், விருதுகளும் பெண்களுக்குக் கிடைப்பதில் இன்றும் சில ஏற்றத்தாழ்வுகள் உள்ளன.

நவீன காலத்தில் பெண் எழுத்தாளர்கள்

இன்று இணையம் மற்றும் சமூக ஊடகங்களின் வளர்ச்சியால், பெண்கள் தங்களின் கருத்துக்களைத் தங்குதடையின்றிப் பகிர்ந்து வருகின்றனர். வலைப்பதிவுகள், மின்புத்தகங்கள் மற்றும் சமூக வலைதளங்கள் போன்ற தளங்கள் பெண் எழுத்துக்குப் புதிய வாசலைத் திறந்து விட்டுள்ளன. கவிதை, நாவல், சிறுகதை மட்டுமல்லாது அறிவியல், அரசியல், பொருளாதாரம், சுற்றுச்சூழல், பெண்ணியம், அரசியல், தத்துவம் எனப் பெண் எழுத்தாளர்களின் எல்லை விரிவடைந்துள்ளது. டிஜிட்டல் யுகத்தில் பெண் எழுத்தாளர்கள் ஒரு பெரும் வாசகர் வட்டத்தை உருவாக்கியுள்ளனர். எழுத்துக்கள் பல்லாயிரம் பேரை நொடியில் சென்றைகிறது.

முடிவுரை

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்" என்ற பாரதியின் வரிகளுக்கேற்ப, இன்று பெண்கள் இலக்கியத் துறையில் பெரும் புரட்சியைச் செய்து வருகின்றனர். "பெண்ணின் எழுத்து என்பது வெறும் பொழுதுபோக்கு அல்ல; அது அதிகார வர்க்கத்தின் செவிகளில் விழும் ஒரு எச்சரிக்கை மணி."

எழுத்து பெண்களுக்கு ஒரு விடுதலை உணர்வைத் தருகிறது. அவள் தன்னைத் தானே கண்டடைகிறாள். எழுத்து பெண்ணுக்கு ஒரு 'சிகிச்சை' (Therapy) போன்றது; அது அவளது மன அழுத்தங்களைப் போக்கி அவளுக்குத் தன்னம்பிக்கையைத் தருகிறது. பெண்ணும் எழுத்தும் ஒன்றிணையும் போது அங்கே ஒரு புதிய உலகம் பிறக்கிறது. பெண்கள் எழுதும்போதுதான் மனித குலத்தின் வரலாறு முழுமையடையும். மௌனத்தை விடவும் வலிமையானது அந்த மௌனத்தை உடைத்து வெளிவரும் பெண்ணின் எழுத்துக்கள். இந்தச் சமூகம் சமநிலை பெற வேண்டுமானால், பெண்களின் எழுத்துக்கள் இன்னும் அதிகமாக வாசிக்கப்பட வேண்டும் மற்றும் கொண்டாடப்பட வேண்டும்.

அறியாமையை அடியோடு அகற்று

கல்வியே நம்மைக் கரையேற்றும் தோணி!
காலத்தோடு அதனிலே பயணப்படு தோழி!
கல்லாது போவதற்குக் கற்காலமிது அல்ல!
காலத்தால் நிற்பதற்குக் கற்றல்தான் வெல்ல!
சுயமாய்ச் சிந்திப்பதன் சூத்திரம் கல்வியே!
பயத்தைப் போக்கிடும் பலத்தை நல்கியே!
அவனியிலே நிறுத்திடும் அகரமே முதலில்!
அறியாமையை அடியோடு அகற்று முதலில்!

கவிஞர் மாலதி இராமலிங்கம்,
புதுச்சேரி.

தருமசீலன்

சசிகலா விஸ்வநாதன்
பெங்களூரு

தருமசீலனின் கார் அந்த அலுவலக வளாகத்தை வட்டமிட்டு நின்றது. தயாராக நின்றிருந்த டவாலி பணிவுடன் கார் கதவைத் திறந்து விட்டு, கையில் இருந்த பையை வாங்கிக் கொண்டு அவரது மதிய சாப்பாடு அடங்கிய பையை எடுத்துக் கொள்ள, தன் மீசையை முறுக்கிய படி அலுவலகத்தில் நுழைய,.எதிர்ப்பட்ட அலுவலர்கள் பணிவுடன் வணக்கம் சொல்லி நகர்ந்தனர். அமர்த்தலாகக் தலையை அசைத்தார்; அந்த மரியாதையை, மேட்டிமையாக அங்கீகரிக்கும் பாவனையில்.

'தருமசீலன், உதவி இயக்குநர்' என்ற பெயர் பலகை காலை வெயில் பட்டு பள பளத்தது. அதை ஒரு கணம் ஓரக்கண்ணால் பார்த்து மனதிற்குள் ஒரு பூரிப்பை அடைந்தாலும், இளம் வயதில் அவர் தன் இடம் என்று நினைத்த; கனவு கண்ட, இந்திய ஆட்சிப் பணி அல்லது இந்திய காவல் பணி அவன் கைக்கு எட்டாக்கனியாக ஆகிவிட்டதில் அவருக்கு வாழ்க்கையின் மிகப் பெரிய சோகம். ஆனாலும், இன்னும் நாலைந்து மாதங்களில் இந்தத் துறையின் தலைவர் பதவி; அவருக்கு பணி மூப்பின் காரணமாக கிடைக்க இருப்பது அவருக்கு மிகப் பெரிய ஆறுதல்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் டவாலியாக பணிபுரிந்த முனுசாமி வீட்டில் மூத்த மகனாக பிறந்தவன்; இந்த உயரத்தை எட்டியதே பெரிய விஷயம்; என்ற நினைப்பும் அவர் மனதில் ஓடாமல் இல்லை.அவருடைய கல்லூரி படிப்பும் அரசு பணியும், நல்ல பசையுள்ள இடத்தில் அவருக்கு மனைவியை அமைத்துக் கொடுத்தது. மனைவி கோமதி அடக்க ஒடுக்கமான குடும்பப் பாங்கான பெண்ணாக இருந்தது; அவருக்கு மிகவும் வசதியாக இருந்தது. மனதில் நினைக்கும் எதையும் கோமதி மூலம் சாதிக்கும் வித்தையில் தேர்ந்து விட்டிருந்தார். பணக்கார தோரணையில் அவர் வலம் வர, கோமதியின் அன்பு தருமசீலனுக்கு உறுதுணையாக இருந்தது. மனைவியின் மகிமையை அவர் உணர்ந்தே இருந்தார். மாமனார் கதிர்காமருக்கு கோமதி ஒரே பெண். செல்லமாக வளர்த்து படிப்பின் மேல் இருந்த மதிப்பில் தன் பெண்ணையும் கொடுத்து, அவர்களுக்கு அரணாகவும் இருந்தார். இன்னொரு ஒரு விஷயமும் இருக்கிறது. ' தருமசீலன்' என்ற அவரது பெயரின் மேல் அவருக்கு ஒரு ஈர்ப்பு. வாய் நிறைய 'தருமசீலன்' என்ற பெயரை முழுவதுமாக, பெயரிட்டுஅழைத்துப்புளகாங்கிதம்அடைவார்.அலுவலகநண்பர்களுக்கெல்லாம், அவர் ' தருமர்'.வீட்டில் அவரை 'சீலன்' என்று தான் கூப்பிடுவார்கள். மாதாமாதம்

ஒரு முறையாவது கோவையிலிருந்து வந்து போகும் அவர் இரண்டு மாதங்களாக வரவில்லை;என்பது மனதிற்கு உறுத்தலாக இருந்தது. கோமதி அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இந்த ஆடி பண்டிகைக்கு முடிந்தால் போய் வரலாம்; என்று அவர் சொன்ன போதும், அவள் அதில் பெரிதாக ஆர்வம் ஏன் காட்டவில்லை; என்பது மனதிற்கு நெருடலாக உள்ளது. கதிர்காமர் வரும் சமயத்தில் எல்லாம் அவருக்கு கணிசமான தொகை ஒன்றை கொடுத்துவிட்டு தான் செல்வார். ஒரு முறைமைக்கு 'எதுக்கு மாமா, இம்புட்டு பணம்?' என்று மறுத்தாலும்' இருக்கட்டும் மருமகனே! வீட்டுக்கு ஏதும் சாமான் வாங்கிப் போடுங்க. பேத்தியாளுக்கு நகை நட்டு ஏதும் செய்யும் போது கூட சேர்த்துக்கங்க' என்பார். இது தவிர மாதாமாதம் தன் பெண்ணுக்கு பணம் அனுப்புவதில் தவறுவதே இல்லை. இவருக்கும் அவரையும் அறியாமல் மாமனார் மேல் ஒரு ஒட்டுதலும் பாசமும் இவ்வளவு வருடங்களில் உண்டாகித்தான் இருந்தது

அரசு வேலையில் படிப்படியாக உயர உயர தருமசீலன் படிப்படியாக கீழே போய்க் கொண்டிருந்ததை கதிர்காமர் அறியவில்லை. கோமதியும் அறியாமல் இருந்ததுதான் தருமசீலனுக்கு சவுகரியமாக இருந்தது. தருமசீலன் வெகு எச்சரிக்கையாக இருப்பவர். அலுவலகத்தில் எல்லோரிடமும் ஒரு அடி இடைவெளி விட்டே பழகுவார்.காரியம் ஆகவேண்டிய வருபவர்களை அலுவலகத்தில் வைத்து சந்திக்கவே மாட்டார். காசை கையால் வாங்க மாட்டார்.இணைய வழி பரிவர்த்தனையின்றி பணமாகவே கொடுக்கச் சொல்லுவார் நகையாகவோ, விலை உயர்ந்த வீட்டு உபயோகப் பொருளாகவோ, விலை உயர்ந்த ஆடைகளாகவோ, பள்ளி மற்றும் கல்லூரியின் கல்விக் கட்டணமாகவோ, கோடை கால உல்லாச

விடுதிகளின் தங்குதல் கட்டணமாகவோ,. விமான பயணச்சீட்டு கட்டணமாகவோ; இப்படி எதுவாக இருந்தாலும், அவர்களையே வாங்கச் சொல்லி சாமான்களை மட்டும் கடைக்காரரையே வீட்டில் டெலிவரி செய்யச் சொல்லுவார். முன் யோசனையுடன் கவனத்துடன் இருப்பார்.

இன்னும் நாலைந்து மாதங்களில் இந்த துறைக்கு தலைவர் என்ற பெருமையை அடையப் போகும் பெருமிதத்தில் மிதந்து கொண்டிருந்தவரை, அலுவலக தொலைபேசியின் சிணுசிணுப்பு உலுப்பியது. தருமசீலன் தொலைபேசியை எடுத்துப் பேசலாம் தான். அவருடைய வெட்டி சுய கௌரவம் அவரைத் தடுத்தது. அலுவலக உதவியாளர் தொலைபேசியை எடுத்து,''சார்! உங்களைத்தான் கேட்கிறாங்க' என்றதும் தொலைபேசியை காதுக்கு ஒற்றினவவர் முகம் சற்று தீவிரமாகியது. முக்கிய அலுவலில் இருக்கிறேன். சற்று நேரம் கழித்துக் கூப்பிடும்படி தொலைபேசி இணைப்பைத்துண்டித்தவர்; அலுவலக உதவியாளரை வெளியே அனுப்பினார். அடுத்த அழைப்பு வர சிறிது தாமதமாகவே, அவர் சற்று கலவரம் அடைந்தார். திரும்பவும் தொலைபேசி அழைப்பு வந்ததும் அவரே எடுத்துப் பேசினார்.

''பேசுவது தருமசீலன் சார் தானே,'' என்று நிச்சயம் செய்து கொண்ட அந்தக் குரல் தன்னை அரசு தலைமை செயலகத்தில் உள்துறை அமைச்சகத்தின் முதன்மை செயலரின் உதவியாளர் 'சீதாபதி' என்று அறிமுகப் படுத்திக் கொண்டார். ''சாரோட பதவி உயர்வு கோப்பு இன்று எங்கள் பார்வைக்கு வந்துள்ளது. பணி மூப்பின்படி உங்களுக்கு கிடைக்க இருக்கும் பதவி உயர்வு இப்போது ஒரு சிக்கலில் மாட்டியுள்ளது. உங்களைப் பற்றிய ஒரு தகவல் எங்கள் கவனத்துக்கு வந்துள்ளது. சேதுராமன் என்பவர் உங்களை போன வாரம் சந்தித்தாரா? அவர் செக்ரட்டரி சாரையும் இன்று வந்து பார்த்துள்ளார்; உங்களைப் பற்றி ஒரு தகவலும் கொடுத்துள்ளார். அவரது வேலையை முடித்துக் கொடுப்பதற்காக நீங்கள் வைத்துள்ள விலை பற்றியும் சொன்னார். நான் உங்களுக்கு உதவியாகத்தான் செக்ரட்டரி சார் அறியாமல் தான் இந்த தகவலைச் சொன்னேன். 'இதற்கும் ஓர் விலை உண்டு என்பதும் நீங்கள் அறிவீர்கள்; என்பதும் எங்களுக்குத் தெரியும்' என்றார்.

தருமசீலனின் முகம் வெளுத்து வியர்வையில் உடல் தொப்பலாக நனைந்தது. யோசித்து யோசித்துப் பார்த்தாலும், போனவாரம் சேதுராமன் என்று எவரும் தன்னை சந்திக்கவே இல்லை என்று தீர்மானமாக அவர் அறிவார். அது மட்டுமல்ல; கடந்த ஒரு மாதத்தில் எவரும் அவரை எந்த ஒரு வேலைக்கும் அணுகவே இல்லை. பிறகு எவர் என்னைப்பற்றி உள்துறை செயலகத்தில் புகார் கொடுத்திருப்பார்; என்று நினைக்க நினைக்க தடம் ஏதும் கிடைக்காமல் அவர் மனம் திகிலடைந்து, தடுமாறியது. மனம் அச்சத்தில் நடுங்கி சோர்வடைய அந்த குளிரூட்டப்பட்ட அறையிலும் அவருக்கு வியர்த்துக் கொட்டியது. அலை பாயும் மனதை சரியாக்கும் முயற்சியில் தன் அலுவலகத்திலேயே நடைப் பயிற்சி மேற்கொள்ள முயன்று,

தோல்வியடைந்தார். முகம் கழுவ சென்றவர் முகம் கண்ணாடியில் மங்கலாக தெரிவது போல் இருக்க அடுத்த கணம். நெஞ்சுக் குழியில் சுரீரென வலி எடுத்து, மயங்கி சரிந்து கீழே விழுந்தார்.

சப்தம் கேட்டு ஓடி வந்த அலுவலக பணியாளர்கள் அவரைத் தூக்கினர். முகத்தில் நீர் தெளித்து அவரை ஆசுவாசப்படுத்தினர். நைந்த பழந்துணி போல் மீண்டும் தரையில் சரிந்தவரை கண்டு பயந்து போன அலுவலர்கள், அவரை உடனடியாக அருகிலிருக்கும் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்த்து விட்டு அவரது வீட்டிற்கு தகவல் அளித்தனர்.அவருக்கு இது முதல் மாரடைப்பு என்றும் இருதயம் மோசமாக பாதிக்கப்பட்டு இருப்பதாகவும், மருத்துவரகள் கூறினர்.

கோமதி, அரைமணி நேரத்தில் அலறி அடித்துக் கொண்டு ஓடியே வந்தாள். பள்ளியிலும் கல்லூரியிலும் படிக்கும் குழந்தைகள்; கதிர்வேலும், மயூரணியும் மலங்க மலங்க விழித்துக் கொண்டு அவர் படுக்கையின் பக்கம் நின்றிருக்க; தம்பி செங்கோடனும் தங்கை கயலும், அவர்கள் அருகில் கவலை தோய்ந்த முகத்துடன் நின்றிருந்தார்கள். தருமசீலன் மெதுவாக கண் விழித்தார். சுற்றிலும் பார்வை ஓடியது.

மேலும் தொடர் சிகிச்சைகளுக்குப் பிறகு பத்து நாட்களுக்குப் பின் இல்லம் திரும்பியவர், அன்று மாலை கோமதியிடம் கேட்ட ஒரு கேள்வி ' மாமா வரவில்லையா' என்பதே. அவள் சொன்ன பதிலை கேட்டவுடன் மீண்டும் அவனுக்கு மயக்கம் வந்தது.''அப்பா சேதுராமன் சித்தப்பாவுடன் அடுத்த வாரம் வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.'' என்று கோமதி சொல்ல;'யார் இந்த சேதுராமன் சித்தப்பா?' என்று கேட்கும் துணிவின்றி திரும்பிப் படுத்தார்.தருமசீலன். மறு வாரம் கதிர்காமர் மட்டிலும் அவனைப் பார்த்துப் போக, அவரிடமும்' சேதுராமன் சித்தப்பா, யார் என்றோ, ஏன் அவர் வரவில்லை, என்றோ; அவர் யார் என்று கேட்கும் துணிவோ தருமசீலனுக்கு இல்லை. மாமனார் கதிர்காமர் வந்த காலோடு கிளம்பி விட்டார்.அதுவும் தருமசீலனுக்கு முள்ளாய்.குத்திட்டு நின்றது.

மாரடைப்பை காரணம் காட்டி ஒரு மாதம் மருத்துவ விடுப்பில் வீட்டிலேயே இருந்தார். ஒவ்வொரு நாளும் ஏதேனும் தனக்கு தனிப்பட்ட தொலைபேசி அழைப்பு தன் அலுவலகத்திற்கு வந்ததா; என்று விசாரித்துக் கொண்டேயிருந்தார். எதற்கும் ஒரு பாதுகாப்பாக இருக்கலாம்; என்று எண்ணி அடுத்த இரண்டு மாதங்களும் மருத்துவ விடுப்பிலேயே இருந்தவர்;மனதில் ஒரே ஒரு கேள்வி தான்.'யார் அந்த சேதுராமன்' என்பதே அது

ஓரிரு முறை தலைமை செயலகத்தில் தன் தொடர்பில் உள்ள நண்பர்கள் உதவியுடன், பணி உயர்வு கோப்புகள் சரியான முறையில் நகர்ந்து கொண்டிருப்பதை விசாரித்துக் தெரிந்து கொண்டார், எனினும் ஒரு விதமான பதட்டத்திலேயே இருந்தார். சீதாபதி என்ற உதவியாளர் பற்றி அவருக்கு சரியான தகவல் கிட்டவே இல்லை. பேசியவர், அலுவலக தொலைபேசியில் பேசியதால் அவரை தொடர்பு

கொள்ளவும் இயலவில்லை. இந்தக் கவலையில் பகலும் இரவும் தூக்கமின்றி தவித்தார்

இந்த பதவி உயர்வு விஷயம் தீர்மானம் ஆகும்வரை நீண்ட விடுப்பு எடுக்கலாமா; என்ற யோசனையில் இருந்தபோது. தருமசீலனுக்கு இப்போது பதவியில் இருக்கும் அவரது துறைத்தலைவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அவரை தலைமையிடத்திற்கு பணிமாற்றம் செய்து இன்று ஆணை பிறப்பித்து இருப்பதாகவும், அதனால் மேலும் விடுப்பை நீட்டிக்காமல் உடனடியாக பணியறிக்கை செய்து அடுத்து அவரது பதவியில் சேருபவரிடம் பொறுப்புகளை ஒப்படைத்து உடனடியாக தலைமை அலுவலகத்தில் பணிக்கு அறிக்கை செய்து கொள்ள அறிவுறுத்தினார். அதனால் வேறு வழியின்றி, பிரிவு உபசார விழாவைக் கூட நிராகரித்து, அவசர அவசரமாக, மறுநாளே பணியறிக்கை செய்துகொண்டு, விடுப்பு ஆணை பெற்று தலைமை செயலகத்தில் பணி அறிக்கையும் செய்து கொண்டார்.

இது பதவி உயர்வின் போது நிகழும் நடைமுறை பணிமாற்றம்தான்.ஆயினும் எத்தனை மகிழ்வுடன் நடக்க வேண்டிய பிரிவு உபசார விழா, அமைதியான முறையில் நடந்தது. பணிஉயர்விற்கான வாழ்த்துகளின் உற்சாக அலையின் எதிரொலியும், அலுவலகர் யாவரும் எழுந்து கை தட்டி எழுப்பும் கர ஒலியின் இனிய நினைவுகளும், இல்லாமல்; மனம் கவரும் நிகழ்வொன்றும் இன்றி அதி வேகத்தில் நடந்து முடிந்தது. இங்கேயும் சரி; தலைமையகத்திலும் சரி; அனைவரும் தருமசீலனின் உடல்நலம் பற்றி விசாரித்தார்களே தவிர, அவரது பணி உயர்வின் எதிர்பார்ப்பு பின்னுக்குத் தள்ளப்பட்டது, அவருக்கு மிகவும் குறையாக இருந்தது.

துறைத் தலைவர் தருமசீலனிடம்,'' தருமா! உங்கள் உடல் நலம் முக்கியம். உங்களுக்கு அவசியம் என்று தோன்றினால், நீங்கள் இன்னும் ஒரு மாதம் ஓய்வெடுத்துக் கொண்டு, பிறகு வந்து பணியைத் தொடரலாம்.'' என்று ஆதரவாகப் பேசினார். தருமசீலனுக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை.

இங்கே இருந்தால் பணி உயர்வு கோப்புகள் நகர்வதை எளிதாக தெரிந்து கொள்ளலாம். ஆனாலும் கோமதியின் பணிவிடை இல்லாமல் அன்றாட வாழ்வு தடுமாறியது. பழைய அலுவலகத்தின் பந்தா இல்லாமல் இருப்பது, வேறு அவர் மனதை மிகவும் சங்கடப் படுத்தியது. தரையில் தன்னிச்சையில்லாமல் விழுந்த மீன் என மனம் துடித்தது

இடையிடையே சீதாபதியும், சேதுராமனும் யாராய் இருப்பர்; என்ற கேள்வி, எப்போதும் மனதைக் குடைந்து கொண்டே இருந்தது. தருமசீலன் தன் பணி உயர்வுக்கான கோப்புகள் சரியான முறையில் நகர்கிறதா; என்பதைக் கண்காணித்துக் கொண்டிருந்தார்.

இறுதியில் அவரது பணி உயர்வு நாளும் வந்தது. அன்று வெள்ளிக்கிழமை ஆனதால் துறைத்தலைவர் பணி மூப்பில் ஓய்வு பெறுபவருக்கு முதல் நாளே பிரிவு உபசார விழா நடந்தேறியது. தருமசீலனுக்கு அன்று வரை எந்த ஒரு தகவலும் இல்லாததால் அவருக்கு தன முக்கியத்துவம் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. ஒரு வழியாக அவர் வெகு வருடங்களாக எதிர்பார்த்த துறைத்தலைவதற்கான பணி உயர்வு ஆணை, அலுவலக நேரம் முடியும் தருவாயில் தொலை நகல் மூலமாக வந்து சேர்ந்தது. அனைத்து அலுவலகர்களும் இல்லம் செல்லும் மும்முரத்தில் இருக்க; தருமசீலனின் பதவியேற்பு நிகழ்வு ஒரு கையெழுத்தும் , ஓரிரு முறைமை கைகுலுக்கல்களிலும் நடந்து முடிந்தது, அவருக்கு எரிச்சலை மூட்டியது

அன்று இரவு, முன் தகவல் ஏதுமின்றி, எதிர்பாராவிதமாக,

மாமனார் கதிர்காமர் தருமசீலன் இல்லம் வந்தார். அவருடன் கூட இன்னும் ஒருவர்.'' வாழ்த்துகள்! மருமகனே! இவரை சந்தியுங்கள். இவர்தான் சேதுராமன் சித்தப்பா. சிறு வயது முதலே பழக்கம். அன்று உங்களுடன் சீதாபதியாகத் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு பேசியதும் இவர்தான்.' இவர் இப்போதுள்ள தலைமை செயலரின் அண்ணன். உங்கள் அலுவலக நடப்பு பற்றி ஓரிரு அவதூறாக உள்ளடக்கம் இல்லாத வெற்று மனுக்கள் வந்திருப்பதாக இவர் அறிந்தார். அதில் சிறிதளவு உண்மை இருப்பதையும் தெரிந்தது கொண்டவர்; என்னிடம் பேச; நாங்கள் யோசித்து எடுத்த முடிவுதான்;அன்று உங்களை எச்சரிக்கும் எண்ணத்தில், உங்களிடம் பேசியது. அதற்கு அப்புறம்தான் உங்களுக்கு உடல்நலம் சரியில்லாமல் போய்விட்டது. இவர் பேசியதே உங்களுக்கு மாரடைப்பு வருவதற்கு காரணம் என்பதை என்னால் யூகிக்க முடிந்தது. மேலும் நாங்கள் விசாரித்ததில், உங்கள் நாணயம் மற்றும் குண நலன்கள் மேல் நான் வைத்திருந்த நம்பிக்கை அடியோடு

சீர்குலைந்து விட்டது. இதனாலேயே உங்களைப் பார்க்க வருவதைத் தவிர்த்தேன். ஆனாலும், பாவம்! கோமதி! அவளுக்கு இந்த விஷயம் தெரியாது. அவள் மனதிற்கு ஆறுதலாக இருக்கட்டும் என்று தான் நான் ஒரு நாள் உங்களைப் பார்க்க வந்தேன். இனி முன்பு போல் உங்களிடம் கலந்து பழக என்னால் ஆகாது. நீங்கள் பணி ஓய்வு பெற இரண்டு வருடங்களே உள்ளன. கவனத்துடன் செயல் பட்டு எந்த ஒரு அவமானமும் இல்லாமல் பணியிலிருந்து ஓய்வு பெற என் வாழ்த்துகள். நீங்கள் எத்தனை கவனத்துடன் இருந்தாலும், உங்களைச் சுற்றி நிறைய எதிராளிகளையும் பகைவர்களையும் சம்பாதித்து வைத்துள்ளீர்கள். சரியான சமயத்திற்கு அனைவரும் காத்திருக்கிறார்கள், என்பதை நான் விசாரித்து அறிந்து கொண்டேன். எல்லா நாளும் திருநாளாக இருக்காது. இதை உங்களுக்கு தெளிவு படுத்தத்தான் நான் இங்கே வந்தேன். கோமதியைய குழந்தைகளையும் நல்லபடியாக பார்த்துக் கொள்ளுங்கள். குழந்தைகளுக்கு,நல்லது கெட்டது சொல்லிக் கொடுத்து பழி பாவத்திற்கு அஞ்சும்படி வளர்த்துங்கள். அவர்களை அடிக்கடி கோவைக்கு அனுப்பித் தாருங்கள்..உங்கள் புத்தியைக் கொண்டு விதியை வெல்ல முயலுங்கள் இனி நான் உங்களை ஒருபோதும் சந்திக்க விரும்பவில்லை.நாங்கள் கிளம்புகிறோம்.''என்று தருமசீலனின் பதிலை எதிர்பாராமல் கிளம்பிச் சென்றவரை வெறித்து பார்த்துக் கொண்டு வெகு நேரம் நின்றிருந்தார்;தருமசீலன்.அன்று கதிர்காமர் ஒரு முறை கூட, தன்னை 'தருமசீலன்'என்று அழைக்கவில்லை;என்பதை வேதனையோடு தருமசீலன் உணரத் தவறவில்லை.

மறுநாள் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்ல அவரது அலுவலக கார் வந்தது. ஓட்டுநர் வணக்கம் சொல்லி காரின் பின் இருக்கையின் கதவை பணிவுடன் திறக்க, காரில் ஏறி அமரப் போகும் நேரத்தில் ஓட்டுநரின் முகம் மறைந்து, மாமா கதிர்காமர் முகம் தெரிய, மயக்கமடைந்து கீழே விழ, அவரை மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் எடுத்துச் சென்றார், ஓட்டுநர். இரண்டு மாதம் ஓய்வில் இருந்தவர், மருத்துவ காரணங்களுக்காக தனது பதவியிலிருந்து விருப்ப ஓய்வு பெறுவதாக அரசின் முதன்மை செயலருக்கு தனது விருப்ப ஓய்வு கோரும் கடிதத்தை மின்னஞ்சல், தொலைநகல் மற்றும் முறைமையாக எழுத்து வடிவமாகவும் அனுப்பினார். விரும்பிய உயர் பதவி தடங்கல் இல்லாமல் கிடைத்தும்,ஆசையுடன் எதிர்பார்த்து காத்திருந்த துறை தலைவருக்கான நாற்காலியில், அவர் ஒரு நாள் கூட அமராமல், தனது எழுபத்து எட்டாம் வயது வரை, அந்த வருத்தத்தில் வாழ்ந்து வரும் தண்டனையை அனுபவித்து வருகிறார். தருமசீலன்.

சுமையா அம்மையார்

சம்சுல் ஹுதா பானு
எழுத்தாளர்

பெண்கள் குடும்பம், சமுதாயம் மற்றும் நாட்டின் நல்வாழ்வுக்காக தங்களின் ஆரோக்யம் மற்றும் வாழ்க்கையைத் தியாகம் செய்கின்றனர். பெண்களின் "தியாகம்" சமூகத்தில் "கடமை" - என்றளவில் கட்டுப்படுத்தப்படுகிறது. பெண்கள் தனது குடும்ப உறுப்பினர்களின் நலனுக்காகத் தன் சொந்த விருப்பு, வெறுப்புகளை தியாகம் செய்கின்றனர். கணவன், பிள்ளைகள், குடும்பம், சமூகம் மற்றும் நாடு செழிக்க பெண்கள் தியாக உள்ளத்துடன் செயல்படுகிறார்கள்.

உலகின் முதல் உயிர் பெண்ணில் இருந்தே உருக் கொண்டது. கருவினை உயிர்ப்பித்து மகவாக ஈனும் ஆற்றல் பெண்ணிடம் இயற்கை கொடுத்துள்ளது. மண்ணிற்கும், விண்ணிற்கும் ஆதாரமாகப் பிறப்பெடுத்த பெண்ணின் தியாகம் "அவ பொம்பளை" என்ற கூற்றில் குறிக்கப்படுகிறது. ஒரு மனிதன் தாங்கக்கூடிய வலியின் அளவு 45 டெல் ஆகும். பெண்ணின் பிரசவ வலி 57 டெல் ஆகும். அதாவது 20 எலும்புகள் ஒரே நேரத்தில் உடையும் வலியை பிரசவ வலியில் பொறுப்பவள் பெண்:

தியாகத்தின் சிறப்பை பெண்ணிலிருந்தே உணர முடியும். அப்படிப்பட்ட பெண், தான் ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக தனது உயிரைத் தியாகம் செய்பவளாகவும் இருக்கிறாள். ராணி வேலுநாச்சியாரின் படையில், படைப்பிரிவின் தலைவராக இருந்த "வீரமங்கை குயிலி" சிவகங்கை கோட்டைக்குள் இருந்த வெள்ளையர்களின் வெடிமருந்துக் கிடங்கை தன் உடல் முழுக்க எண்ணெய் விட்டு நனைத்து, நனைத்த உடலில் தீ வைத்துக்கொண்டு அந்தத் தீயுடன் ஆயுதக் கிடங்கிற்குள் குதித்து ஆயுதக் கிடங்கில் இருந்த வெடிமருந்துகளை தன் உயிரைக் கொடுத்து வெடிக்கச் செய்தார். இந்திய வரலாற்றின் முதல் பெண் தற்கொலைப் படைத் தியாகி குயிலி. உயிரைத் துச்சமென மதித்து தான் கொண்ட கொள்கைக்காக இஸ்லாமிய வரலாறில் உயிரை விட்டார் "சுமையா அம்மையார்" பெண்களைக் கோழைகளாக பயம் கொண்டவர்களாக ஆக்கப்படப்பட்டாலும், கொண்ட கொள்கைக்காக துணிச்சலாக தன்னையே அர்பணிக்கும் வீரம் பெண்களிடம் உள்ளது என்பதை இப்பெண்கள் மூலமாகவும், பல பெண்களின் தன்னிகற்ற தியாகங்கள் மூலமாகவும் அறியலாம்.

முகம்மது நபிகள் நாயகம், இஸ்லாமிய மார்க்கம் பற்றிய சிறப்புகளை கூறக் கேட்டு, தங்களை இஸ்லாமிய மார்க்கத்தில் இணைத்துக்கொண்டு, முகம்மது நபிகளுடன்

தோளோடு தோள் நிற்பவர்கள் ''ஸகாபாக்கள்'' என அழைப்பார்கள். ஸகாபாக்கள் என்ற வார்த்தைக்கு ''தோழர்கள்'' என்று பொருள். இதில் பெண்கள் தோழர்களாக அண்ணல் நபிக்கு இருந்தவர்களில் தான் ஏற்றுக்கொண்ட மார்க்கத்திற்காக இஸ்லாமிய வரலாறில் தனது இன்னுயிரைக் கொடுத்த முதல் பெண் சுமையா அம்மையார்.

மக்கா நகரில் இஸ்லாமிய நன்னெறியை ஏற்றுக்கொண்ட சுமைய்யா அம்மையாரை, அதன் எதிர்ப்பாளர்கள் செய்த கொடுமை அளவுக்கு அதிகமானது. இரும்புக் கவசம் சுமைய்யா. அம்மையார் உடலில் அணிவித்து, பாலை வன வெயிலில் உருட்டி விடுவார்களாம். இரும்பை பழுக்கக் காய்ச்சி முதுகில் சூடு போடுவது, பெரிய பாத்திரத்தில் தண்ணிர் வைத்து, அதனுள் மூழ்க வைத்து மூச்சுத் திணற வைத்து முடியைப் பிடித்துத் தூக்கி, மறுபடி தண்ணீரில் மூச்சுத் திணறத் திணற வைத்து பின் தூக்கி ஈர உடம்பில் ஈரமான கம்பை வைத்து அடிப்பது எனச் சொல்லொண்ணாத் துயரத்தைக் கொடுத்தனர். சுமைய்யா அம்மையாரின் கணவர் அம்மார், அவர்களின் இரு புதல்வர்களுக்கும் இதேபோல் கொடுமைகள் நடந்தது.

தான் கொண்ட கொள்கையை தன்னைத் துன்பப்படுத்தினால் அதனைவிட்டு விடுவார்கள் என்ற எண்ணத்தை தன்னைக் கொடுமைப்படுத்தியவர்களிடம் இம்மியளவும் அசையாமல், உறுதியாக நின்றதை அறிந்த மக்கா நகர இஸ்லாமிய எதிர்ப்பாளர்கள் ''பெண் தானே'' வலி தாளாமல் மனதை மாற்றி விடுவாள் என உறுதியாக நம்பினார்கள், சுமைய்யா அம்மையாரின் உறுதி தகர்க்க முடியாத மலையைப் போன்றதாக இருந்தது.

ஒருமுறை பகல் முழுதும் தனக்குக் கொடுக்கப்பட்ட துன்பங்களைத் தாங்கிக் கொண்டிருந்து விட்டு மாலையில் தனது வீட்டிற்கு நடந்து வந்து கொண்டிருந்த சுமைய்யா அம்மையாரை அபுஜஹில் என்பவன் கடுமையாக ஏசி, தூற்றிய போதும், பதிலேதும் பேசாமல் நடந்த சுமைய்யா அம்மாவை தனது கூர் ஈட்டியால் கண்மூடித் தனமாகத் தாக்க ஆரம்பித்தான். உன்னுடைய கொள்கையை விட்டு வெளியில் வந்துவிடு என ஈட்டியால் குத்திக் குத்திக் கேட்டபோதும், தன் நிலையில் இருந்து அசையவில்லை.

இவள் ''பெண் தானே'' என மாற்றி விடலாம் இலகுவான நினைத்து அபுஜஹில் தான் வைத்திருந்த ஈட்டியால் தனது கோபத்தின் உச்சத்தில் அழுத்தமாகத் தொடர்ந்து குத்த தனது உயிரை இழந்தார் சமைய்யா அம்மையார். இஸ்லாமிய வரலாற்றில் இஸ்லாம் மார்க்கத்துக்காக உயிரைவிட்ட முதல் பெண் தியாகி சுமைய்யா அம்மையார். இவரின் சக்தி வாய்ந்த அசைக்க முடியாத தன்மை இன்றளவும் இவரை உயர்வாகப் பேச வைக்கிறது.

ARANYANI

VIJENI

CHAPTER - 14

2038, New York

Renauld read all the reports of Dev. Dr.Maran had discussed each and every point in that, so Renauld had no way to rise any questions or doubts. Maran had attached a digital print of Dev's brain as well.

He could clearly notice a search for the truth related to the genesis of a language. It is a search based on a historical present. He coined the term 'historical present

He looked for the next search in the digital print of his brain.

That is.... primitive age.

Snow cladded land and shivering people around. They had wrapped themselves with the hides of the animals, only to protect from the chill weather and not to cover their bodies. They planned to move to someplace where they could have some sunlight and vegetation. Here, this snow is not suitable for people to live in. Many die day after day. So they started in search of a warm place. Many died on the way. Those who survived found mountain caves and entered in. There they found some deer and tigers too. Animals also found their way into those caves. Initially, they lived with beasts and reptiles. If it rains, they went into the caves otherwise, they come out in search of food. They made weapons with stones. They sharpened them and used them to kill animals and shared the meat among themselves. They learned to make fire by rubbing stones and started cooking the meat and found it tasty. The dancing fire gave them warmth at night and added taste to food. So they started to keep the fire burning for nights and days. If it is put off, it was again a difficult process to bring out. One person was good at it. One day when he died, people stopped bringing fire.

When the cold season started, they needed fire for warmth. A woman found the dried nests of the birds and tried to burn them with the fire she made by rubbing the stones. A raindrop fell down and put off her fire. The group shouted at her, but she reacted back. She cried, showing

her teeth and nails in a gesture to attack them. A young man approached her and helped her to bring the fire again. Then she brought the dried nests and twigs to keep the fire burning. Now the secret of fire is known.

They cooked food, wrapped it with the hides, and now started communicating with sounds and gestures. When the spark hurt a man, he cried thii and the sound of the fire was in a rhyme of theep theep.

It rained heavily and the water sources were full. The fire rescued them from all dangers and protected them for centuries. Now they used many monosyllabic words like poe, vaa, thaa, kai, kaal and many others. They had almost a hundred words to communicate essential matters. They had names such as Aathan, Nhithan, Saaththan, Nhaathan, Murukan, Arukan, Manthi, Thaathi, Neeli, Valli, Alli, and so on.

After the rain stopped and the sky is clear. A hunter from the hills guided them. He was called Seevan.

Dev felt that he had another name called Kadamaban. On another hill lived a young man called Kadamban. He placed a stone in the burial place when somebody died. Finally, he added Valli to his list of women. Once she refused to marry him, but when the elephant chased her, she came and embraced Kadamban and the physical contact led them to marry each other.

It was bubbling from Dev's memory of Kadamban, Kaarththikeyan, Murugan, Velan, and Subramaniyan. Oh, how many names for a single man! No, they are the names of the chiefs of their clans in the Tamil-speaking group. One person had a dialogue with Avvai, another had fought and killed an asuran, the next one had an argument with his dad, and one more person married Theiyvayanai. All are Murugan. Our great grandfather,...

This race developed their language in the script and started recording important and lovable happenings in their lives.

Dev thought 'Why don't we marry a Valli'? He planned to marry a girl name, Valli. Why did we leave the habit of marrying a woman? Let me marry a girl now? If the marriage didn't work out, I shall easily come out of it. No problem.

It is the golden moment a tiny sharp blade of grass shot out into dry land.

Renauld stopped his digital analyzer. He called Dr. Maran and asked, 'Had Dev married Valli or in a plan to marry Valli? Please let me know that.'

Maran said, Yes Sir.

He wondered and asked himself 'Is there a name Valli'.

ஜெயஸஞ்ஜீவி

வை.மு.கோதைநாயகி அம்மாள்

அதிகாரம் - 2
தாயாரின் ஜெயம்-தீயோரின் பயம்

தாமோதரன் தனக்கு ஏதேனும் பிழைப்பு கிடைக்குமா என்று சுற்றி யலைந்துவிட்டு, வீட்டிற்குள் வந்து சேர்ந்தான். தன் தாயார் அலங்கோலமாய் ஸ்மரணை யற்றுப் படுத்திருப்பதைப் பார்த்து அவனையறியாது விசனமுண்டாகிவிட்டது. அக் கடித விஷயம் எதுவும் அவனறியமாட்டானாகையினால் தாயாருக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டது என்று பயந்து போய் "அம்மா! அம்மா!" என்று எழுப்பினான்; தண்ணீரைத் தெளித்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம் பொன்னம்மாள் கண்ணைத் திறந்தாள். "அப்பா! தாமோதரா! அதோ உன் பாட்டனாரின் தரிசனம் பாரு! தரிசனங் கண்டேன்! கலங்கிவிட் டேன்!" என்றாள். இதைக் கேட்ட தாமோதரனுக்குப் பின்னும் பயமதிகரித்துவிட்டது. "அம்மா! உனக்கு என்ன உடம்பு ஏன் இப்படி இருக்கிறாய்! பாட்டனார் யாரு! எனக்கு ஒன்றும் புரியவில்லையே! எனக்குப் பயமாயிருக்கிறதே!" என்றான்.

பொன்னம்மாள் சற்று தெளிவடைந்து "அப்பா தாமோதரா! பயப்படாதே; எனக்கு உடம்பு ஒன்றுமில்லை; நான் பிறந்த நாள் முதல் இன்று வரையில் கடவுள் என்னை சோதனை என்கிற சாகரத்திலேயே தள்ளி வாட்டிவிட்டார். அக்கடவுளே இப்போது உன் பாட்டனார் மூலம் நமது பிழைப்புக்கு வழி காட்டி இருக்கிறார்! எனக்குள்ள பல நிர்ப்பந்தங்களில் சிறிது எழுத்து வாசனையை என்தாயாரும் உன்தந்தையும் ஊட்டியதனால் இதைக் காணவும், படிக்கவும் ஏற்பட்டது. அந்தஅம்மாளைப்போல எனக்கும் எழுத்து வாசனையே இல்லாமலிருந்திருக்குமாயின் நானும் இதை உதாசீனமே செய்திருக்க நேர்ந்திருக்கும். கல்வி உதவும் உதவியைப் பார்த்தாயா! இதோ இக்கடிதத்தைப் படித்துப் பாரு!" என்று கொடுத்தாள்.

தாமோதரன் கடிதத்தைப் படித்ததும் பரமாநந்த மடைந்தான். அந்த அவுடதம் தயாரிக்கும் முறையையும் பார்த்தான்! அதில் ஒன்றும் அவனுக்குப் புரியவில்லை எனினும் தமக்குப் பிழைக்கும் வழி கிடைத்து விட்டதை எண்ணிச் சந்தோஷமடைந்தான்.

பொன்ன:- அப்பா! இதைப் பார்த்தாயா! உனக்கென்ன தோன்றுகின்றது. நாம் நமது நாட்டுப்புறத்திற்குச் சென்றதாலன்றோ இவ்வரிய கடிதங்களைக் கண்டு எடுக்க நேர்ந்தது.

இது நம்மிடமிருப்பதே வெளியாருக்குத் தெரியலாகாது. இது அத்தனை பரம ரகஸியமாக விருக்கவேண்டும். ஏனெனின் நீசற்று அசட்டுத்தனமாய் இதை சோதாச் சினேகிதரிடம் கூறிவிட்டால் நமக்கு ஆபத்தே விளைந்து விடும். ஜாக்ரதை; ஜாக்ரதை!

தாமோ:- அம்மா! நான் அப்படி ஒருவரிடமும் கூற மாட்டேன்! தாய் சொல் துறந்தொரு வாசகமில்லை என்கிற பழமொழியை நான் இப்போதுதான் அறிந்தேன்! என் சினேகிதர்களாக விருந்த பேய்களிடமிருந்து நீ என்னை அத்தகைய நிபந்தனை செய்து விலக்காதிருப்பின் நானும் கைதியாகி இருப்பேன். அவர்கள் செய்த திருட்டும், மோசமும் வெளியாகி அவர்களைக் கையும் மெய்யுமாகக் கைது செய்து கொண்டு போய்விட்டதை இன்று நான் கண்ணாரக் கண்டதும் தேகமே சிலிர்த்தது. என்னையும் இப்பேராபத்து வந்து தாங்கி இருக்குமே! அதிலிருந்து என் மாதாவாகிய தெய்வமன்றோ காப்பாற்றியது?'' என்று எண்ணி எண்ணிச் சந்தோஷமும் பெருமகிழ்ச்சியும் அடைந்தேன்! அம்மா! நீ கீறிய கோட்டிற்கு நான் இனி தாண்டமாட்டேன்! நீ என்ன சொல்கிறாயோ அப்படியே செய்கிறேன்; இது சத்தியம்'' என்றான்.

பொன்னம்மாளும் நிரம்ப சந்தோஷமடைந்து மகனின் புத்தி திருந்தி அறிவு இன்னதென்று அறிந்துகொண்டதற்கு மகிழ்ந்தாள். தன் மகனுடன் மலையடிவாரத்தில் இருக்கக்கூடிய ஒரு கிராமத்திற்குச் சென்றாள். அவளுக்கு அனேக பச்சிலைகள், மூலிகைகள் முதலியன சிறு பிராயத்திலேயே பழக்கமாகத் தெரியுமாதலால் அந்த அவுடதத்திற்கு வேண்டியவற்றைத் தானாகச் சிறிதும் அங்குள்ள காட்டு வேடர், மலைக்குறவர் முதலியவர்களின் துணையால் சிலவற்றையும் கண்டு பிடித்து அந்த மருந்துகளைத் தயார் செய்யவேண்டிய ஏற்பாடு செய்துவிட்டாள்.

பன்னிரண்டு மாதங்கள் பறந்தோடிவிட்டன. இந்த அவுடதங்களைத் தயார் செய்யும் பொருட்டு பொன்னம்மாள் என்ன பாடு பட்டிருப்பாளோ! அது பகவானுக்கே அர்ப்பணம். அவைகளைச் செய்து முடித்தாள். அந்த மருந்துகளில் ஒன்று ஸ்திரீகளின் வயிற்றுக் கோளாறுகள், கர்ப்பாசயக் கோளாறுகள் முதலியவைகளை அறவே போக்கும் தன்மையில் முதன்மை ஸ்தானம் வகித்திருந்தது. ஆதலால் அந்த மருந்திற்கு ''ஜெய ஸஞ்ஜீவி என்ற பெயரையும் அடுத்தவற்றிற்கு அஜீரண வைரி, ரண நிவாரணி, ஜ்வர சம்ஹாரி என்ற நாமங்களைச் சூட்டினாள்.

தன் பாட்டனாரின் கடிதத்தில் கண்டபடி, யோகியாரின் உருவத்தை மானஸீகமாகச் சித்திரித்து அதற்குப் பூஜை முதலியன தினந்தோறும் தவறாமல் செய்து அம்மருந்துகள் வைத்துள்ள கோப்பைகளின்மேல் சாமியாரின் துணை என்றும் அவருடைய உருவப்படமும் பதிப்பித்து முதல் முதல் விற்பனைக்குத் தொடங்கினாள்.எந்த வியாபாரமும் சடுதியில் லாபங் கொடுப்பதுண்டா! அப்படியே ஒரு வருட காலம் சரியானபடி விலை இல்லாமல் திண்டாடியது. இவ்விரண்டு வருஷ காலத்தையும் பொன்னம்மாள் மகா புத்திசாலியானபடியால் வீணாக்காமல் தன் பாட்டனார் பெட்டியிலிருந்த சில மருத்துவ புத்தகங்களை எல்லாம் தானும் படித்துத் தன் மகனையும்

குருட்டுப்பாடமாகப் படிக்கச்செய்து அதிலிருந்து சில மருத்துவ முறைகளை இருவரும் நன்றாகத் தெரிந்துகொண்டார்கள்.

மருத்துவ மகாதேவன் என்ற ஒரு கிழவனிடம் தன் பையனை யனுப்பித் தாது பார்க்கும் முறைகளையும் பின்னும் சில விஷயங்களையும் தெரிந்துகொள்ளச் செய்தாள். நம் நாட்டு மருத்துவத்திலேயே பெரிய ஜெயம் பெறவேண்டும் என்றும், அதைக் கண்டு அனேக வைத்தியர்கள் ஆச்சரியப் படவேண்டு மென்றும் பொன்னம்மாள் எண்ணினாள்: தாமோதரனின் அறிவு நாளைக்கு நாள் மிகத் தெளிவாயும் விரிவாயும் மலர்ந்துகொண்டே வந்ததால் தன் தாயார் தன் பால் காட்டும் சிரமத்தையும், அன்பின் மகிமையையும் நன்றாகத் தெரிந்துகொண்டு உலகில் தாயைப் பார்க்கிலும் தெய் வமே இல்லை. தாய்தான் தனக்கு முதன் தெய்வம். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற பழமொழி பொய்யல்ல என்ற தீர்மானத்திற்கு வந்து அதையே அனுஷ்டிக்கவும் தொடங்கினான்.

பொன்னம்மாளின் பெரும் முயற்சியினால் தாமோதரன் அறிவு வளர்ந்ததுபோல அந்த அவுடதங்களும் பலன் கொடுக்க வாரம்பித்தன. ஊசி குத்தாமலும், கத்தி எடுக்காலும், ஆயுத மில்லாமலும் பலவித ரோகங்களும் ஸ்வஸ்தமாகும் ஆச்சரியம் உலகம் முற்றும் வெகு விரைவில் பரவியது. இத்தனை அவுடதங்களில் ஜெய ஸஞ்ஜீவியும், ரண் நிவாரணியும் தான் முதன்மை ஸ்தானம் வகித்துச் சிறந்து நின்றன. அனேக ஸ்திரீகள் இந்த ஜெய ஸஞ்ஜீவியை வாங்கி உபயோகித்துத் தம் வியாதி நீங்கப் பெற்று ஜெயத்தை யடைந்து இவர்களை வாழ்த்தத் தலைப்பட்டார்கள்.

சில வருடத்திற் குள்ளாகவே இந்த வைத்திய சாலைக்கும் "ஜெய ஸஞ்ஜீவி அவுஷதாலயம்" என்ற பெயரே ஜனங்களால் நிர்மாணிக்கப்பட்டு நிலைத்துவிட்டது. ஆதலால் பொன்னம்மாள் ஜெய ஸஞ்ஜீவி அவுஷதாலயம் என்ற மகுடத்துடன் பலகை மாட்டிவிட்டாள். தாமோதரனும் அனுபவத்திலேயே ஓர் மருத்துவனாகி விட்டான்: பொன்னம்மாளின் சகாயம் பெரிதும் பயன் அளித்தது. சொந்தத்தில் கட்டிடமும் கடவுள் விரைவில் அளித்துவிட்டார்: தாமோதரனும், பொன்னம்மாளும் இத்தகைய உயர்ந்த நிலைமை தமக்கு வந்தபோதிலும் தாம் குப்பை வாரக்கூடிய நிலைமையிலும் இருந்த காலத்தை மறக்கவில்லை.

பெரிய ஷாப்புக்கள் போல இந்த அவுடதாலயம் பெருகிவிட்டது. தாமோதரன் ஷாப்பிற்கு வரும் ஜனங்களின் எண்ணிக்கை கூறத் திறமன்று. அவனுடைய புகழ் நாளைக்கு நாள் ஓங்கி வளர்கின்றது. இந்நிலைமையில் தாமோதரனுக்குக் குறைவுஉண்டா! நான், நீ என்று பெண்ணைக் கொடுக்கப் போட்டிகள் உண்டாயின. இந்த போட்டிகளில் பொன்னம்மாள் தன் மகனை ஏலத்தில் விட வில்லை. தாமோதரனும் தன் விவாக விஷயத்தில் ஆத்திரப் படவில்லை. ஆதலால் போட்டிக்காரர்களின் பாச்சா பலிக்கவில்லை. தான் வைத்தியத்தில் நன்கு நிபுணத்வம் அடைவதற்கும், வியாபாரம் நன்று செழிப்புற்று ஓங்குவதற்கும் வேண்டிய முயற்சியிலேயே இருந்தான்.

அந்நிலைமையில் இருக்கையில் முன்பு இவனுடன் சினேகமாயிருந்தவர்கள் தண்டனை யடைந்ததாக நாம் கூறியது நினைவிருக்கலாம். அவர்கள் எல்லோரும் விடுதலை யடைந்து வந்து சேர்ந்தார்கள். "பாம்பினுடைய விஷம் பல்லை விட்டுப் போகுமா?" என்பதுபோல பாம்புக் கொப் பாகிய அவர்கள் விடுதலையடைந்து வெளியுலகத்திற்கு வந்ததும் தங்கள் பழைய சினேகிதர்களைப் பற்றி விசாரிக்கையில் தாமோதரனின் உன்னதமான ஸ்திதியையும், அபார புகழையும் கேள்வியுற்றுப் பொறாமை வடிவமாக பிரமித்தார்கள். "இத்தகைய அதிர்ஷ்டம் இவனுக்கு எப்படி வந்தது. எவ்விதம் இவன் பெரிய நாட்டு வைத்தியனாயும்? மருந்து ஷாப்புக்குக் சொந்தக்காரனாயும் ஆய்விட்டான், நம்மை யறியாது எங்கேனும் கொள்ளைதான் அடித் திருக்கவேண்டும். இல்லாவிடின் இத்தனை வருடத்திற்குள் எவ்விதம் இந்த பதவியை அடையக்கூடும்?" என்று பெருங் குழப்பங் கொண்டு அதையே கவனிக்கத் தொடங்கினார்கள்.

தாமோதரனிடம் சினேகம் செய்ய மீண்டும் எத்தனிக்க வேண்டு மென்று சூழ்ச்சி செய்து அவனிடம் ஒரு தினம் சென்றார்கள். பரம அயோக்யர்களாகிய அவர்களைக் கண்டதுமே தாமோதரன் நடுங்கினான்; வெறுப்பு கொண்டான்; சற்றும் தாக்ஷண்யமின்றி "உங்களை யார் இங்கு வரச் சொல்லியது? நீங்கள் உடனே இவ்விடத்தை விட்டு எழுந்து போய் விடுங்கள்; உங்கள் சகவாஸம் வேண்டாம்." என்று கண்டிப்பாய்க் கூறினான்.

வந்த சோதாக்கள் இதைக் கேட்டதும் குறும்பாக நகைத்துக்கொண்டே, "ஓகோ! கோபந்தான் வரும்: வராதா பாவம்! இந்த பதவிக்கு வருவதற்குத் தாங்கள் எங்கே கொள்ளை யடித்தீர்கள் என்பது எங்களுக்குத் தெரியாத பரமரகஸிய மென்று எண்ணவேண்டாம்: எங்களுக்குத் தெரிந்துவிட்டது எஜமானே!" என்றார்கள்.

தாமோ:- சேச்சே! பேமானிகளே! மானங் கெட்டு சிறைக்குச் சென்று திரும்பிய பின் இன்னும் கொழுப்பு அதிகரித்து விட்டது போலிருக்கிறது; உளறாதீர்கள். நல்ல தனமாக எழுந்து போகிறீர்களா, அல்லது உங்களைத் தள்ளும் வகையில் தள்ளட்டுமா? என்று கூறியவாறு டெலிபோனிடம் சென்று பேசத் தொடங்கி "போலீஸ் ஸ்டேஷனா!" என்று கேட்டான். உடனே அத்தனை பெயர்களும் "அடேய் தாமோதரா! உன் அகந்தையை, உன் வாழ்நாளின் திமிரை நாங்களறியாமல் விடப் போவதில்லை: ஜாக்ரதை! கூடிய சீக்கிரமே உன் கதியை நீ அறியச் செய்கிறோம்" என்று கூறிவிட்டுப் போய்விட்டார்கள்.

இந்த வார்த்தைகளைப் பொன்னம்மாளும் கேட்டுக் கொண்டே வந்தாள். "அப்பா! இதற்காக பயப்படாதே; ஆதியில் நீ செய்த லீலையின் பயன் இது. இதனால் நமக்கு யாதொரு அழிவுமில்லை. கடவுள் மீது பாரத்தைச் செலுத்தி நீ பொதுவாய் நட. கடவுள் நன்மை தீமைகளைத் தானே பார்த்துக்கொள்கிறான்" என்று தேறுதல் கூறினாள். என்ன தேறுதல் கூறியும் தாமோதரனுக்கு உள்ளூர குலை நடுக்கலும் ஒரு விதமான பயமும் ஏற்பட்டு அதே கிலி கொண்டதுபோல வருத்தத் தொடங்கியது. "ஐயோ! கொலைக்கும் அஞ்சாத துஷ்டர்களாயிற்றே! என்ன செய்து விடுவார்களோ"! என்று எண்ணிப் பதுமை போலானான்.

புதிய வெளியீடுகள்







விலை ரூ120

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை -18. போன் 7010997639